

# ஞானச்சுடர்

## சந்நிதியான் ஆச்சிரமம்.

தை 2014




வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



# குறள்வழி

**எளிதென இல்லிறப்பான் எய்துமெஞ் ஞான்றும்**
**விளியாது நிற்கும் பழி.**

**பொருள் :** இவளை அடைதல் இலகு என்று நினைத்து ஒருவனுடைய மனையில் நுழைகின்றவன் எப்பொழுதும் நீங்காத குடிப் பழியை அடைவான். (145)

**பகைபாவ மச்சம் பழியென நான்கும்**
**இகவாவா மில்லிறப்பான் கண்.**

**பொருள் :** ஒருவனுடைய மனையாளை விரும்பி அவன் வீட்டிலே செல்கின்றவனிடத்தில் பகை, பாவம், அச்சம், நிந்தை என்னும் நான்கும் எப்பொழுதும் இருக்கும். (146)

---

# நற்சிந்தனை



## மறப்பேனோ குருநாதன் தன்னை

**முத்தி நல்குமே**

### குறள் வெண்செந்துறை

நெஞ்சகம் நின்று நினைக்கும் பொருளைப்
பஞ்சமா பாதகர் பாரினி லறிந்திலர் 36

அதுநா னென்னு மகலாத் தியானத்தால்
மதுவுண் வண்டுபோ லாயினர் பலரே 37

பேதங்க ளெல்லா மாயினும் பேதங்கள்
பேதியா வொன்றைப் பிரியவொண் ணாதே 38

வேதமோ டாகம மறியா விமலனை
நாதனா மம்நமசி வாயவென் போமே 39

காணுங் கண்ணிற் கலந்த கண்ணது
ஆணும் பெண்ணு மலியு மானதே 40

# ஞானச்சுடர்



05 FEB 2014

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

# ஞானச்சுடர்

வெளியீடு— 2 சுடர்— 193

2014 தை



## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| முருக வழிபாட்டின் தொன்மை | வை. சிந்துஜன் | 01 -02 |
| திருமுறைகள் ஓதிய... | மூ. சிவலிங்கம் | 03 -08 |
| ஆனந்தம் தரும் ஆனந்த... | T. ஸ்ரீரெங்கநாதன் | 09 -10 |
| போற்றித் திருவகவல் | சு. அருளம்பலவனார் | 11 -14 |
| சந்நிதியான் ஆச்சிரமம் | - | 15 -17 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 18 -22 |
| சைவத்தையும் தெய்வத்... | முருகவே பரமநாதன் | 23 -26 |
| வட இந்திய தல யாத்திரை | செ. மோகனதாஸ் சுவாமிகள் | 27 -30 |
| ஐயப்ப சுவாமி | அ. சுப்பிரமணியம் | 31 -33 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | தொகுப்பு | 34 -36 |
| படங்கள் தரும் பதிவுகள் | - | 37 -40 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 41 -42 |
| சிறுவர் கதைகள் | - | 43 -44 |
| சைவத் திருக்கோயிற்... | கா. கைலாசநாதக்குருக்கள் | 45 -46 |
| திருவருட்பயன் | - | 47 -49 |
| ஸ்ரீ கருட புராணம் | இரா. செல்வவடிவேல் | 50 -55 |
| கண்டோம் கதிர்காமம் | கவிமணி அன்னைதாசன் | 56 -58 |
| சைவ சமய வினாவிடை | ஆறுமுகநாவலர் | 59 -61 |
| வாசகர் போட்டி | - | 62 -63 |
| தமிழகத் திருக்கோயில்... | வல்வையூர் அப்பாண்ணா | 64 -70 |


அன்பளிப்பு: மலர் ஒன்று 30/= ரூபா

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர் வாழ, வளர எமது வாழ்த்துக்கள்

2014ஆம் ஆண்டிலே அடியெடுத்து வைத்து தனது ஆன்மீகப் பணியைத் தொடரும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்க்கும் ஞானச்சுடர் சஞ்சிகைக்கும் எமது மனநிறைந்த வாழ்த்துக்கள்.




பேரவையைச் சார்ந்தோர், சமய, சமூக, கலை, பண்பாடுகளைச் சிறப்பாகச் செய்வதன்மூலம் எல்லோர்க்கும் பயனுடைத் தாய்ச் செய்யும் சேவையானது மகத்தான தாகும். சேவை செய்வதே ஆனந்தம் என்னும் நல்வாக்கிற்கிணங்க மக்களின் உடல் உறுதிக்கு உணவும். மருத்துவமும் இன்னோரன்ன அத்தியாவசிய தேவைகளும் செய்வதுடன், உளவளர்ச்சிக்கும் உள்ளத்திற் தெய்வ சிந்தனையுடன் ஆன்மீக வாழ்வு வாழ்வதற்கும் ஆச்சிரமப் பணிகள்மூலம் உறுதுணை புரிந்து வருவதும், இவற்றிற்கெல்லாம் சிறந்ததொரு நல்வழிகாட்டியாக மோகனதாஸ் சுவாமிகள் தம்மை முழுமையாக அர்ப்பணித்து பணிபுரிவதும் போற்றுதற்குரியதாகும். இவற்றுடன் 17ஆம் ஆண்டில் கால்பதிக்கும் ஞானச்சுடரின் வளர்ச்சி மேன் மேலும் பரந்து விரிந்து வளர வாழ்த்துகின்றோம்.

தங்கள் நற்பணிகள் வாழ, வளர எமது நல் வாழ்த்துக்கள் உரியதாகும்.

அன்புடன்,
திரு கு. தியாகராசக்குருக்கள்
(நீர்வைமணி)

# ஆற்றங்கரையானை முன்னிறுத்தும் அழகுச்சுடர்



சமய வாழ்வியலைப் பேணும் பண்பு நம் சமூகத்தினரிடையே அருகி வருகின்றது. போர் ஓய்ந்த பின்னரான சமூக நிலைமைகள் அன்றும் இன்றும் ஒத்த தன்மை கொண்டனவாகவே உள்ளன. காலங்காலமாக அறம்சார் நூல்கள் மேலெழுந்தமைக்கும் இத்தகைய பகைப்புலமே காரணமாகும்.

வாழ்வியல் முறைகளின் மாற்றம், மனநிலைக் கவர்ச்சிகளின் மாற்றம் முதலியவற்றால் இன்று சமயத் தளங்களில் சஞ்சிகைகளை வெளியிடும் போக்கும் அருகி வருகிறது. இதனையும் மீறி சஞ்சிகையை வெளிக் கொணர்ந்தாலும் அதன் வாழ்க்கைக் காலம் சில மாதங்களாகவே இருக்க வாய்ப்புண்டு.

நிலைமை இவ்வாறிருக்க, ஞானச்சுடர் மாத்திரம் தொடர்ந்து இடையூறின்றி வெளிவருவதன் இரகசியந்தான் என்ன? இதற்கு ஒரே விடை ஆற்றங்கரையானின் பேரருள் என்பதாகும்.

சந்நிதி வேற்பெருமான் தன்னை முழுமையும் உணர்ந்து போற்றும் சிவத்திரு மோகன் சுவாமிகளையும் ஆச்சிரம அன்பர்களையும் துணையாக்கி இந்நூல் வெளிவருவதற்கு முதற்காரணமாக இலங்குகின்றான்.

சந்நிதியானைத் தேடிவந்து தரிசிக்க முடியாவிடினும் ஞானச்சுடர் ஊடாகச் சந்நிதியெம் பெருமான் எம் இருப்பிடங்களுக்கு விபூதிப் பிரசாதத்துடன் வருகிறான் என்ற உணர்வு எம்மவரிடத்திற் காணப்படுகின்றது. இதுவே ஞானச்சுடரின் பிரசவிப்பிற்கான மூலபலம்.

காலத்தின் தேவையுணர்ந்து ஆச்சிரமத்தார் முன்னெடுக்கும் இத் தெய்வீகத் திருப்பணியை போற்றுகிறேன். ஞானச்சுடரின் வெளியீடு சூரிய சந்திரர் உள்ளவரை தொடர்ந்து இடம்பெற வேற்பெருமான் அனுகூலமளிப்பாராக!

**திரு ச. லலீசன்**
விரிவுரையாளர்
கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

# ஞானச்சுடர் மார்கழிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

மார்கழிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை திரு சோ. பரமநாதன் (கிராம சேவையாளர்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில், ஆற்றங்கரை வேலவனின் அருட்கடாட்சம் நிறைந்த ஆச்சிரமத்தில் ஞானச்சுடர் எனும் பொக்கிஷத்தை வெளியிட்டு வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன் என்று கூறினார்.

தொடர்ந்து கூறுகையில், ஆச்சிரமத்தினால் அறிவுப்பசிக்காக ஞானச்சுடர் மலரையும், வயிற்றுப் பசிக்காக அன்னதானப் பணியையும் வழங்கி, ஒரு மனிதனை முழு மனிதனாக்க வேண்டிய காரியங்களைச் செய்து வருகின்றது என்று சபையில் இருந்த அடியார்களுக்குக் கூறினார்.

இறுதியாகத் தனது உரையில், ஞானச்சுடர் மலரானது 2014ஆம் ஆண்டு புதுப் பொலிவுடன் எல்லோர் கைகளிலும் திகழவேண்டும் என்று கூறித் தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

192ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை திரு ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (இளை. பிரதிக் கல்விப்பணிப்பாளர்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில், ஞானச்சுடர் மலரை மதிப்பீடு செய்வதென்பது யாராலும் இயலாத காரியமாகும். அவ்வகையிலும் நான் ஒரு வரையறைக்குட்படுத்தி மதிப்பீடு செய்கின்றேன் என்று கூறினார்.

அடுத்து அவர் தனது உரையில், ஞானச்சுடர் மலரில் இடம்பெற்றுள்ள விடயங்கள் யாவும் ஆழமான கருத்துக்களையும், எளிமையான சொற் பிரயோகங்களையும் கொண்டு மனித வாழ்க்கைக்குத் தேவையான விழுமியக் கருத்துக்களைக் கூறி ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிசெய்கின்றது என்று கூறினார்.

தொடர்ந்து கூறுகையில் இம்மலரானது உலகளாவிய ரீதியில் பெருமதிப்பைப் பெற்றதோடு, சைவர்கள் தமது சுவாமி அறையில் வைத்து வழிபடும் தன்மையையும் கொண்டுள்ளது என்று சபையில் இருந்த அடியார்களுக்குக் கூறினார்.

மார்கழிமாத சஞ்சிகை பற்றி சபையில் இருந்த த. சுகந்தன், ந. விக்கினேஸ்வரமூர்த்தி, சீ. கமலதாஸ் போன்றோர் தத்தமது கருத்துக்களைக் கூறினார்கள். அத்துடன் அன்றைய நிகழ்வுகள் இனிதே நிறைவு பெற்றது.

ஞானச்சுடர் வாழி! வாழி!!

# சுடர் தரும் தகவல்

ஒரு செயற்பாட்டின் வெற்றிக்கு, அல்லது ஒரு மனிதனது செயற்பாட்டின் வெற்றிக்கு அவனால் மேற்கொள்ளப்படும் விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் காரணமாக அமைகின்றது என்பதை நாம் கண்கூடாகக் காணுகிறோம். அந்தவகையில் கிடைக்கும் வெற்றியானது சிறப்பாகவும் பயனுள்ளதாகவும் அமையவேண்டுமானால் இறை நம்பிக்கை அவசியம் தேவை. அந்த நம்பிக்கையின்மூலம் அவனால் தனது இலக்கை அடைய முடியும். இதன் அடிப்படையின்மூலம்தான் பலர் பலவிதமான சாதனைகளை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

அவ்வகையில்த்தான் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்பட்டுவரும் ஞானச்சுடர் மலரின் வளர்ச்சியை நாம் நோக்க வேண்டும். 1998ஆம் ஆண்டு தைமாதம் வெளிவரத் தொடங்கிய மலரானது கடந்த பதினாறு வருடங்கள் நடைபயின்று 2014 தைமாதம் தனது பதினேழாம் வயதில் தடம் பதித்து புது மெருகுடன் வெளிவருவது என்பது ஒரு சாதாரண விடயமல்ல. இக்கருத்தினை வலியுறுத்தி பல வாசகர்கள் பாராட்டினைத் தெரிவித்ததையிட்டு நாம் பெருமிதம் அடைகின்றோம்.

ஆரம்ப காலத்தில் 250 பிரதிகளுடன் வெளிவரத் தொடங்கிய ஞானச்சுடர் மலர் படிப்படியாக வளர்ச்சிகண்டு இரண்டாயிரம் பிரதிகள் மாதாந்தம் வெளியிடப்பட்டு அதன்மூலம் இரண்டாயிரம் குடும்பங்களின் கரங்களில் தவழ்வதோடு, இச்செயற்பாட்டுக்கு அவர்களினது ஆதரவிற்கும் நாம் நன்றி கூறவேண்டியது அவசியம்.

கடந்த பதினாறு வருடங்களாக தொடர்ச்சியாக ஞானச்சுடர் வாசித்தாலும் தொடர்ந்தும் அதனைப் பெற்று வாசித்து தாம் பயனடைகின்ற அதேவேளை எமக்கு உற்சாகத்தை வழங்கி வருகின்ற வாசகர்களின் உணர்வுகளையும் எம்மால் உணர்ந்துகொள்ள முடிகிறது. இதே போன்று தாமாகவே முன்வந்து ஆக்கங்களை வழங்குகின்ற அன்புள்ளங்களும் தொடர்ந்தும் தத்தமது ஆக்கங்களின்மூலம் சுடரைப் பிரகாசிக்க செய்வதையிட்டும் நாம் வாசகர்கட்கும் ஆக்கம் வழங்கிக் கௌரவிக்கும் சான்றோருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

இம்மலர் வெளியீட்டினை சிறப்பாகச் செய்வதற்கு ஆரம்பத்தில் கூறியதுபோல இறை நம்பிக்கையுடன் கூடிய விடாமுயற்சியே காரணம். எவ்வளவோ இடர்பாடுகள் வந்தபோதும் மலர் மென்மேலும் பிரகாசிப்பதென்றால் நாம் முன்பு சொன்னதுபோல் அன்புள்ளம் கொண்ட வாசகர்களும், ஆக்கங்களை வழங்கிக் கொண்டிருக்கும் அன்பர்களும் அதற்கு மேலாக சந்நிதி வேலவனின் பூரண அருட்கடாட்சமும்தான். “அவனன்றி ஓர் அணுவும் அசையாது” என்ற வாக்கிற்கு அமைய நாம் நடப்போமானால் எல்லா வெற்றியும் தானே கிட்டும்.

# சந்நிதிச் செல்வனைப் பாடிப் பாடி சரணம் சரணமென்பேன்



செல்வச் சந்நிதி சேர்ந்த முருகா
தேவா உனை நானே
அல்லும் பகலும் அடைந்து தொழுதே
அன்பு கொள்வேனே
பல்வித துன்பம் எனக்கு வரினும், அப்
பாரம் சுமப்பது நீயன்றோ, என
எல்லை யில்லா இன்ப மடைவேன்
என்தன் குமரை யனே.

தேனே பாலே தீஞ்சுவைக் கரும்பே
திரு ஞானச் சுடரே கேள்
வானை நிகர்த்த நீல மயில்மேல்
வளமாய் வலம் வருவாய்
ஞான வான்கள் உள்ளக் கோயில்
நாடி யமரு நீயே
ஏனோ என்தன் பாடல் கேளா
திருப்ப தழகோ ஐயா!

ஆசை யென்னும் பாச வேரை
அகற்றி னேன் மேலும்
பேசும் எனதை நானென் பதனைப்
பிழிந்து தள்ளி விட்டேன்
நேச மாக உள்ள விளக்கில்
உனக்கே கோயில் கட்டினேன்
வாசஞ் செய்ய ஓடி வருவாய்
வடிவேல் கும ரையனே.

-முதுபெரும் புலவர் வை.க. சிற்றம்பலம் அவர்கள்-

# தைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**சிவகுரு பத்மநாதன்**
(இளை. பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி யாழ்ப்பாணம்)

**வ. சண்முகநாதமுதலி**
(இளை. முகாமையாளர், மக்கள் வங்கி யாழ்ப்பாணம்)

**N. சிவஞானசுந்தரம்பிள்ளை**
(இளை. முகாமையாளர், மக்கள் வங்கி யாழ்ப்பாணம்)

**இ. யோகராசா**
(இளை. முகாமையாளர், மக்கள் வங்கி யாழ்ப்பாணம்))

**ந. நாகேஸ்வரன்**
(உதவிப் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி யாழ்ப்பாணம்)

**இ. கிருஷாந்தி**
(பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி பிரதான வீதி, யாழ்ப்பாணம்)

**திருமதி ரா. பத்மகலா**
(மக்கள் வங்கி, பிரதேச அலுவலகம், யாழ்ப்பாணம்)

**திருமதி கஸ்த்தூரி பீஷ்மன்**
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி பிரதேச காரியாலயம், யாழ்ப்பாணம்)

**திருமதி நீரஜா சத்தியசீலன்**
(உதவி முகாமையாளர் மக்கள் வங்கி, கன்னாதிட்டி யாழ்ப்பாணம்)

**திருமதி வனஜா சுரேஸ்குமார்**
((முகாமையாளர் மக்கள் வங்கி நாவலர்றோட், யாழ்ப்பாணம்)

**திருமதி ரம்மியா பரந்தாமன்**
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி பிராந்திய அலுவலகம் யாழ்ப்பாணம்)

**கந்தசாமி சுசீந்திரன்**
(பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)

**மகேந்திரன் மாலவன்**
(உதவி முகாமையாளர், பிரதேச காரியாலயம், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)

**தெ. கர்ஷன்**
(மக்கள் வங்கி, கன்னாதிட்டி கிளை, யாழ்ப்பாணம்)

**திருமதி H. சிந்துஜா**
(மக்கள் வங்கி பிரதானவீதி யாழ்ப்பாணம்)

**தி. வானதி**
(மக்கள்வங்கி, பிரதானவீதி, யாழ்ப்பாணம்)

**ந. தனேஸ்**
(உதவி முகாமையாளர், பிரதேச காரியாலயம், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)

**ப. பிரதீபா**
(பிரதேச காரியாலயம் மக்கள் வங்கி,யாழ்ப்பாணம்)

**S. ரமேஷ்நேசன்**
(முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி யாழ்ப்பாணம்)

**திருமதி கோ. ரஜீவி**
(பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)

**இ. ஜெயகாந்தன்**
(பிரதேச காரியாலயம் மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)

**திருமதி அனுஜா**
(மக்கள் வங்கி பிரதான வீதி, யாழ்ப்பாணம்)

**செல்வி த. சிந்துஜா**
(மக்கள் வங்கி, பிரதானவீதி, யாழ்ப்பாணம்)

**இ. ரவிகரன்**
(உதவி பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய காரியாலயம், யாழ்ப்பாணம்)

**திருமதி மோ.ப. ஜயானந்தி**
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்)

**K. ஞானசீலன்**
(உதவி முகாமையாளர், பிராந்திய அலுவலகம், யாழ்ப்பாணம்)

**P. உதயணன்**
(உதவி முகாமையாளர், பிராந்திய அலுவலகம், யாழ்ப்பாணம்)

**B. தேவநேசன்**
(உதவி முகாமையாளர், பிராந்திய அலுவலகம், யாழ்ப்பாணம்)

**துரை மோகன்**
(பிராந்திய அலுவலகம், யாழ்ப்பாணம்)

**T. தவேந்திரராஜா**
(பிரதேச காரியாலயம், யாழ்ப்பாணம்)

**திருமதி ஞானேஸ்வரி செல்வராஜா**
(பிரதி முகாமையாளர், பிரதேச காரியாலயம், யாழ்ப்பாணம்)

**திருமதி சிவதீபன் கீர்த்திகா**
(உதவி முகாமையாளர், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)

**திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**
(இளை. முகாமையாளர், மக்கள் வங்கி)

**S. நித்தியானந்தன்**
(முகாமையாளர், மக்கள் வங்கி, ஸ்ரான்லி றோட்)

**T. பாலேந்திரா**
(இளை. பிரதி முகாமையாளர் மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)

**செல்வி சிந்துலா கணேஸ்வரன்**
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ் பல்கலைக்கழக கிளை)
**திருமதி உ. குகன்ஜா**
(மக்கள் வங்கி, கல்வியங்காடு)
**திருமதி விசாகன் பிரியகாந்தி**
(மக்கள் வங்கி, மானிப்பாய்)
**திருமதி செந்தூரன் உஷாநந்தினி**
(மக்கள் வங்கி, மானிப்பாய்)
**செல்வி தயானந்தன் சசிதேவி**
(மக்கள் வங்கி, மானிப்பாய்)
**திருமதி அ. சுகன்யா**
(மக்கள் வங்கி சங்கானை)
**தி. சிவகுமாரன்**
(முகாமையாளர், மக்கள் வங்கி சங்கானை)
**திருமதி கோ. பிரதக்ஷி**
(உதவி முகாமையாளர் மக்கள் வங்கி சங்கானை)
**திருமதி ப. சுதர்சினி**
(மக்கள் வங்கி, சங்கானை)
**செ. உமாசங்கர்**
(மக்கள் வங்கி சங்கானை)
**செல்வி மு. ஹேமப்பிரியா**
(மக்கள் வங்கி, சங்கானை)
**ப. பார்த்தீபன்**
(முகாமையாளர் மக்கள் வங்கி சுண்ணாகம்)
**திருமதி செ. உசாந்திகா**
(மக்கள் வங்கி, சுண்ணாகம்)
**R. சந்திரகோபன்**
(மக்கள் வங்கி, சுண்ணாகம்)
**S. சுஜன்**
(மக்கள் வங்கி, சுண்ணாகம்)
**M. லம்போதரன்**
(மக்கள் வங்கி சுண்ணாகம்)
**ந. ஜிறானு**
(மக்கள் வங்கி, சுண்ணாகம்)
**S. சியாமளா**
(மக்கள் வங்கி, சுண்ணாகம்)
**G. சரண்யா**
(மக்கள் வங்கி, சுண்ணாகம்)

திருமதி யா. சுரேஸ்குமார்
(பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, சுண்ணாகம்)
R. ஆனந்தராஜா
(மக்கள் வங்கி, சுண்ணாகம்)
S. சிவகுமார்
(மக்கள் வங்கி, சுண்ணாகம்)
திருமதி B. ஜெகதீஸ்வரன்
(மக்கள் வங்கி, சுண்ணாகம்)
U. தனுஷியா
(மக்கள் வங்கி, சுண்ணாகம்)
S. துளசிதா
(மக்கள் வங்கி, சுண்ணாகம்)
உ. டிலாகிதன்
(மக்கள் வங்கி, சுண்ணாகம்)
திருமதி S. விஜயகுமார்
(ஓய்வுநிலை அந்தரங்க காரியதரிசி, மக்கள் வங்கி)
த. றஜிந்தன்
(மக்கள் வங்கி, சாவகச்சேரி)
மு. சிவசுப்பிரமணியம்
(இளைப்பாறிய பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, சாவகச்சேரி)
க. சண்முகலிங்கம்
((முகாமையாளர், மக்கள் வங்கி சாவகச்சேரி)
க. ஞானச்சந்திரன்
(மக்கள் வங்கி, சாவகச்சேரி)
சு. சுமணா
(மக்கள் வங்கி, சாவகச்சேரி)
ஞா. அனோஜா
(மக்கள் வங்கி, சாவகச்சேரி)
க. ஜனனி
(மக்கள் வங்கி, சாவகச்சேரி)
சி. பானுஜா
(மக்கள் வங்கி, சாவகச்சேரி)
த. உஷா
(மக்கள் வங்கி, சாவகச்சேரி)
மு. தெய்வேந்திரம்
(மக்கள் வங்கி, சாவகச்சேரி)
க. ஸ்ரீதரன்
(மக்கள் வங்கி சாவகச்சேரி)

**செல்வி நாகேந்திரம் நிலோசனா**
(மக்கள் வங்கி, சாவகச்சேரி)
**நா. கிருஷிகா**
(மக்கள் வங்கி, சாவகச்சேரி)
**செல்லன் சற்சொரூபன்**
(மக்கள் வங்கி, சாவகச்சேரி)
**திருமதி கா. மீரா**
(முகாமையாளர் மக்கள் வங்கி, கொடிகாமம்)
**கா. தவராசா**
(மக்கள் வங்கி, கொடிகாமம்)
**க. சீராளன்**
(மக்கள் வங்கி, கைதடி)
**பி. கிருஸ்ணானந்தன்**
(முகாமையாளர் மக்கள் வங்கி, பருத்தித்துறை)
**கந்தப்பு கலையரசன்**
(மக்கள் வங்கி, பருத்தித்துறை)
**கதிரித்தம்பி வாசு**
(மக்கள் வங்கி, பருத்தித்துறை)
**திருமதி சுகந்தி தயாபரன்**
(மக்கள் வங்கி, பருத்தித்துறை)
**திருமதி சங்கீதா தமயந்தன்**
(மக்கள் வங்கி, பருத்தித்துறை)
**செல்வி யாழினி சௌந்தரராஜன்**
(மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)
**செல்வி மாதங்கி சிவகுருநாதன்**
(மக்கள் வங்கி, பருத்தித்துறை)
**செல்வி சசிதா இராசையா**
(மக்கள் வங்கி, பருத்தித்துறை)
**திருமதி நிமாலினி ஜெயதாபன்**
(மக்கள் வங்கி, பருத்தித்துறை)
**செல்வன் அரியரெட்ணம் ஹரிகேஷன்**
(மக்கள் வங்கி, பருத்தித்துறை)
**செல்வி சுபாஷினி கணேசலிங்கம்**
(மக்கள் வங்கி, பருத்தித்துறை)
**க. ஸ்ரீகரன்**
(முகாமையாளர் மக்கள் வங்கி, பரந்தன்)

**சி. ராஜீவன்**
(மக்கள் வங்கி, பரந்தன்)
**த. சிவகுமார்**
(பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, காங்கேசந்துறை)
**த. லிங்கராஜ்**
(மக்கள் வங்கி, பரந்தன்)
**K. தேவராசா**
(மக்கள் வங்கி, பரந்தன்)
**திருமதி M. அகிலா**
(மக்கள் வங்கி, பரந்தன்)
**K. கோகுலன்**
(மக்கள் வங்கி, பரந்தன்)
**T. ஜெகதீசன்**
(மக்கள் வங்கி, பரந்தன்)
**N. கோபி**
(மக்கள் வங்கி, பரந்தன்)
**சி. பாமினி**
(மக்கள் வங்கி, பரந்தன்)
**பு. சவுந்தரராசா**
(உதவி முகாமையாளர் மக்கள் வங்கி, கிளிநொச்சி)
**செல்வி வ. கனகசபை**
((முகாமையாளர் மக்கள் வங்கி, காரைதீவு)
**கு. கோடீஸ்வரன்**
((முகாமையாளர் மக்கள் வங்கி, வவுனியா)
**K. ஐங்கரன்**
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி திருகோணமலை)
**திருமதி வைஜெயந்தி குலேந்திரராஜா**
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, திருகோணமலை)
**ம. பிறேம்குமார்**
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி பிராந்திய காரியாலயம், திருகோணமலை)
**ஏகாம்பரம் செல்வேஸ்வரன்**
(மக்கள் வங்கி, திருகோணமலை)
**திருமதி விஜேந்திரன் நிதர்சனி**
(மக்கள் வங்கி, பிரதான வீதி திருகோணமலை)
**திருமதி மணிவண்ணன் கிருஸ்ணானந்தி**
(மக்கள் வங்கி, பிரதான வீதிக் கிளை, திருகோணமலை)

**க. மதிவதனன்**
(முகாமையாளர் மக்கள் வங்கி, சேருநுவர)
**S. சிவஞானராசா**
(முகாமையாளர், மக்கள் வங்கி செங்கலடி)
**சௌந்தரலிங்கம் துஷாந்தன்**
(மக்கள் வங்கி, சேருநுவர)
**வைத்திலிங்கம் வினோத்**
(மக்கள் வங்கி, நெல்லியடி)
**கி. அமிர்தலிங்கம்**
(மக்கள் வங்கி, நெல்லியடி)
**ஸ்ரீ பகீரதன்**
(மக்கள் வங்கி, நெல்லியடி)
**திருமதி ஸ்ரீகாந்தநிர்மலா நிமலேந்திரன்**
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)
**செல்வி இராசன் பிரசாந்தினி**
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)
**திருமதி மீரா அஜந்தன்**
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)
**செல்வி பாலசுந்தரம் உதயசாந்தி**
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)
**திருமதி ராதிகா ஸ்ரீபாஸ்கரன்**
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)
**தில்லைநாதன் கார்த்திகா**
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)
**செல்வி ராதாகிருஸ்ணன் வாகினி**
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)
**விஜயராசா பிரகாஷ்**
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)
**S. சர்வானந்தன்**
(முகாமையாளர் மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)
**சி. மனோராஜ்**
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)
**திருமதி K. பால்ராஜ்**
(சபாபதிவீதி, வண்ணார்பண்ணை கிழக்கு)
**பொ. பாலசிங்கம்**
(காசாளர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)

**த. கணேசமூர்த்தி**
(இளநிலை அதிகாரி, இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)
**தம்பையா புவனேந்திரன்**
(முகாமையாளர் இலங்கை வங்கி, அச்சுவேலி)
**பா. இராசேந்திரம்**
(இளை. கி. சேவகர், உடுப்பிட்டி)
**செ. மதியாபரணம்**
(வளர்மதி புடவை அகம், கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்)
**நீ. சுப்பிரமணியன்**
(இளை. உத்தியோகத்தர், ப.நோ.கூ.ச, உடுப்பிட்டி)
**செல்வி தட்சாயிணி செல்வமாணிக்கம்**
(நாவலடி, உடுப்பிட்டி)
**வே. இரத்தினசிங்கம்**
(சிவசக்தி மோட்டோர்ஸ், பருத்தித்துறை)
**சி. கணேசலிங்கம்**
(தமிழ்ப்பூங்கா, நெல்லியடி)
**E.A. ஏகநாதன்**
(இளைப்பாறிய நீதிபதி, யாழ்ப்பாணம்)
**உரிமையாளர்**
(பெசன் ஹவுஸ், யாழ்ப்பாணம்)
**உரிமையாளர்**
(பெற்றா ஏசென்ஸ் விநியோகத்தர், யாழ்ப்பாணம்)
**சிவஞானம் கிருபாகரன்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
**மு. சரவணபவான்**
(கலைமகள் விலாஸ், சங்கானை)
**செல்வி நா. ஜெயராணி**
(அதிபர், யா/ சித்தங்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாசாலை)
**இ. கோபாலசுந்தரம்**
(சதா வெதுப்பகம், உரும்பராய்)
**J. பிரபாகரன் மாஸ்ரர்**
(நெல்லியடி)
**செ. கமலநாதன் (கமல்)**
(கணபதி களஞ்சியம். கரவெட்டி)
**க. நாகராசா**
(பூம்பதிவீதி, வடலியடைப்பு)

**இ. சொக்கலிங்கம்**
(இளைப்பாறிய ஆசிரியர், நாவற்குழி, கைதடி)
**கு. கங்கைவேணியன்**
(உரிமையாளர், வேணி களஞ்சியம், யாழ்ப்பாணம்)
**ந. சத்தியரூபன்**
(சிறி நதியா நகைமாடம், யாழ்ப்பாணம்)
**க. சோமசேகரம்**
(மகாராணி புடவையகம், யாழ்ப்பாணம்)
**ஐ. சிவகுமார்**
(சுதுமலை கிழக்கு, மானிப்பாய்)
**செ. தபேந்திரன்**
(உப அஞ்சல் அதிபர், குப்பிளான்)
**க. இராசநாயகம்**
(பிள்ளையார் ஸ்ரோர்ஸ், தொட்டிலடி, சங்கானை)
**R.S. தனபாலன்**
(பாலன் மில், வட்டுக்கோட்டை)
**சி. சச்சிதானந்தம்**
(சச்சியா இரும்பகம், வட்டுக்கோட்டை)
**உரிமையாளர்**
(V.M.K. நகைமாளிகை, யாழ்ப்பாணம்)
**வே. பொன்னம்பலம்**
(பாக்கியரெத்தினம் இரும்பு விற்பனை நிலையம், சங்கானை)
**உரிமையாளர்**
(சாரங்கா நகைமாடம், யாழ்ப்பாணம்)
**இ. குமாரசாமி**
(சுவர்ணா வெதுப்பகம், K.K.S. றோட், சுன்னாகம்)
**உரிமையாளர்**
(வெங்கடேஸ்வரா, யாழ்ப்பாணம்)
**இ. இராசநாயகம்**
(துர்க்கா மரக்காலை, சண்டிலிப்பாய்)
**ஆ. சுந்தரலிங்கம்**
(இளை. பிரதம அஞ்சல் அதிபர், அஞ்சல் திணைக்களம்)
**நா. கந்தப்பு**
(தோப்பு, அச்சுவேலி)
**க. தர்மலிங்கம் J.P.**
(நீர்வேலி)

**மு. தர்மலிங்கம்**
(சிங்காரராசா வாசா, உடுப்பிட்டி)
**உரிமையாளர்**
(வே. கந்தையாப்பிள்ளை அன்சன்ஸ், யாழ்ப்பாணம்)
**உரிமையாளர்**
(மலாயன் கபே, யாழ்ப்பாணம்)
**ஜெ. இராஜகோபால்**
(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)
**சேனாதிராசா சற்குணராசா**
(பண்டத்தரிப்பு)
**திருமதி பாலகிருஸ்ணன் சிவனேஸ்வரி**
(முருகமூர்த்தி வீதி, சங்கானை)
**தெ. கோபாலசிங்கம்**
(சிவபூமி முதியோர் இல்லம், சுழிபுரம்)
**து. மகேந்திரன்**
(கைதடி மேற்கு, கைதடி)
**த. சிவசுப்பிரமணியம்**
(லீலா வெதுப்பகம், சங்கானை)
**Dr சி. இராசலிங்கம்**
(இளை. வைத்திய பொறுப்பதிகாரி, அச்சுவேலி)




# முருக வழிபாட்டின் தொன்மை

– திரு வை. சிந்துஜன் அவர்கள் –

சைவத்தின் சிறந்த, உச்ச வழிபாடாகவும், தொன்மையான வழிபாடாகவும் முருக வழிபாடு திகழ்கின்றது. முருகனை வேலாயுதத்தின் வழியே பண்டைய மக்கள் வழிபட்டனர். முருக வழிபாடு தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் மிகச்சிறப்புற விளங்குகின்றது. தென்னிந்தியாவிலே ஆதிச்ச நல்லூரிலே மேற்கொள்ளப்பட்ட புதைபொருள் ஆராய்வுமூலம் வேல் வழிபாட்டு தொன்மைச் சான்றுகளான வேலாயுதங்களும், சேவற்சிலைகளும் கண்டெடுக்கப்பட்டன. அதுமட்டுமல்லாது இலங்கையில் மாதோட்டம் (மன்னார்), கந்தரோடை போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுமூலம் சேவற்சிலைகளும், காவடிச் செடில்களும், வேலாயுதங்களும் மீட்கப்பட்டன. இவை சைவ மக்களது உயரிய வேல் வழிபாட்டை உணர்த்தி நிற்கின்றன.



அழகன் முருகனை, குறிஞ்சிவாழ் கந்தனை கதிர்காமத்தில் பௌத்தரும் ஏத்தி வணங்கும்முறை மூலம் முருக வழிபாட்டின் மேன்மை புலப்படுவதைக் காணலாம். வேலின் மூலம் முருகனை வழிபடும் வழமை இன்றும் காணப்படுகிறது. அதேவேளை இதன் தொன்மை, சிறப்பை குமாரதந்திரம் விளக்குகின்றது. முருக வழிபாடு பற்பல நூற்றாண்டிற்கு முற்பட்டது. முருகனின் ஆறுபடைவீடுகள், அவனுடைய புகழ் கூறும் கந்த புராணம் முதலியன முருகனின் தோற்றம் பற்றி விளக்குகின்றன. சங்ககாலத்திற்கூட வேல்வழிபாடு சிறப்புற்று விளங்கியமையை நாம் காணமுடிகின்றது. ஔவையின் வாழ்விலே வந்த சிறுவனை ஔவை முருகனாக எண்ணுகின்றாள். அவளது எண்ணத்திற்குக் காரணம் முன்னர் நிலவிய முருக வழிபாடே ஆகும். முருகனும் சிவனும் ஒருவரே. இதை "தனக்குத் தானே மகனாகிய தத்துவன்" எனும் தணிகைக்கூற்று விளக்குகிறது.

இதனால் சிவவழிபாட்டின் பழமையை, முருக வழிபாட்டின் பழமையாக எண்ணலாம். சிந்துவெளியில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியில்கூட முருக வழிபாட்டைக் காட்டும் சில பொருட்கள் கண்டெடுக்கப்பட்டதாக நம்பப்படுகின்றது. சிவனின் ஒருருவம்

**உன்னுடைய மனப்பாங்குதான் உன் உயர்வைத் தீர்மானிக்கிறது.**

போன்று சர்வஞ்ஞுத்துவம், பரிபூரணத்துவம், அநாதிபேதம், அலுப்தசக்தி, சுதந்தரத்துவம், அநந்த சக்தி கொண்டவராக முருகன் கருதப் படுகின்றார். முருகன் சிவனின் ஒரு உச்சவடிவ மாக கணிக்கப்படுவதூடே அவரின் பெரு மையை அறியலாம். ஆகமொத்தத்தில் சிவ வழிபாட்டின் ஆதி முதலே முருகவழிபாடும் நிலவுகின்றது.முருகன் சிவனின் வேறுபட்ட தற்ற ஒருமை நிலையை "உலகுக்கு ஒரு முதல்வன் சிவனே. அவரே கந்தசாமியாகவும் வந்தார். இருவரும் ஒருவரே, வேறல்லர்" என கச்சியப்பர் கந்தபுராணமூடாக உணர்த்துகின் றார். இவ்வாறாக முருகவழிபாடு பன்நெடுங் காலமாக தமிழின் வடிவாக, அழகின் ரூப மாக, அருளின் உச்சமாக, அறிவின் ஜோதி யாக, அன்பின் அன்பனாக, சிவனாக, இச்சா சக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி கொண்ட ஐந்தொழில் ஆற்றும் பதியாக மக்கள்போற்றி வழிபடுவதைக் காணலாம். இத்துணை தொன் மையான முருகவழிபாட்டின் உச்சத்தை, தொன்மையை நாமும் பேணி முருகனின் அருட்கடாட்சத்தைப் பெறுவோமாக.

## இடர் நீக்கும் சுடர்

முழுவதுமாக 62 பக்கங்களைக் கொண்ட மார்கழிமாத ஞானச்சுடர், 58 அமுத மொழிகளையும், 20 கட்டுரைகளையும், 07 கவிதைகளையும், 27 படங்களையும் கொண்டதாக, அழகான முகப்பு அட்டை எமது கண்களையும், கரங்களையும் வணங்கவும், வாழ்த்தவும், வரம் பெறவும் செய்கிறது.

சுடர் தரும் தகவல்மூலம், கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமத்தின் தேவைகளை, யாழ் வணிகர் கழகத்தின் இதயங்கள் 23 மில்லியன் பெறுமதியான புதிய கட்டிடத்தையும், உதவிக்கான உறுதியையும் வழங்கியிருப்பது அறம் தோற்கவில்லை என்பதை உயிர்பெறச் செய்துள்ளது. தொடரட்டும் யாழ் வணிகர் கழகத்தின் அறப்பணிகள். 325 பேரை ஆச்சிரமம் பராமரிப்பது என்பதும், நாளாந்தம் 65000 ரூபாவினை செலவு செய்து பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவது என்பதும், சாதாரண விடயமல்ல. யாழ் வணிகர் கழகத்தை சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன்.

மார்கழி ஞானச்சுடர் தேடிப்பிடித்து தகவலாகத் தந்தமை, சுடரின் பெறுமதியைக் காத்திரமாக்கிற்று. மற்றும், தைப்பூச நன்னாள், வட இந்திய தல யாத்திரை, ஸ்ரீ ரமண நினைவலைகள், மனித வாழ்க்கையில் மனதின் ஆதிக்கம், ஸ்ரீ சாரதாதேவி அம்மையார், கண்டோம் கதிர்காமம் ஆகிய கட்டுரைகளால் சுடர் பிரகாசிக்கிறது. அருள் பிரவாகிக்கிறது.

குறள் வழியும், நற்சிந்தனையும் ஞானச்சுடரை கைகளால் இறுகப் பிடிக்க வைக்கிறது இல்லை; குறள் எம்மை இறுக்கிப் பிடிக்கிறது. 143, 144 குறள் இரண்டும் ஐயன் வள்ளுவனை வணங்க வைக்கின்றது. அமுதமொழிகள் 58உம் ஒருமுறை படித்தால் மட்டும் போதும். படிப்பவர் பசி தீரும். அதில் ஒன்று [பக்கம்-58] "மற்றவர்களைக் கீழே தள்ளிவிட்டு நீ ஏணியில் ஏற முயற்சி செய்யாதே" - அற்புதமானது. இது பலருக்குப் புரிவதுமில்லை, தெரிவதுமில்லை, அதை ஏற்றுக் கொள்வதுமில்லை.

இன்னுமொன்று [பக்கம்- 25] படைகளைவிட, வல்லமை உள்ளவை கருத்துக்களே. சுருங்கச் சொல்லி விளங்க வைப்பன.- என்பதில் அமுத மொழிகள் ஆரோக்கியமானவையே.

ஆம், 30ரூபா மட்டும்தான் சுடரின் பெறுமதி. ஆனால் அது அள்ளித் தரும் ஞானத்தின் பெறுமதியோ கோடி பெறும். நாடி அதனுள் இருக்கும் ஞானத்தைத் தேடுவோமாக.


-கே.எஸ். சிவஞானராஜா-

தீயை மிஞ்ச வைத்தாலும் பகையை மிஞ்ச வைக்கலாகாது.

# திருமுறைகளை ஓதிய சமயகுரவர்கள்

– திரு மூ. சிவலிங்கம் அவர்கள் –

ஆதியும் அந்தமும் இல்லாத தனிப்பெரும் சோதியாகத் தோன்றிய சிவப் பரம்பொருள் எங்கும் நிறைந்துள்ளார்.



இப்பூமண்டலத்தில் யாவரும் உய்யும் வண்ணம் எண்ணற்ற உயிரினங்களையும் படைத்துக் காத்து வினைப் பயனுக்கேற்ப அழித்தும் வருகிறார். இவ்வுயிரினங்கள் யாவற்றையும் அவற்றின் வினைப்பயனுக்கேற்ப ஓரறிவு முதல் ஆறறிவு வரை படைத்துள்ளார். இவற்றுள் மனித குலத்தை மட்டும் சிந்தித்துச் செயலாற்றும் வண்ணம் பகுத்தறிவென்னும் ஆறாம் அறிவையும் தந்து வாழ்வாங்கு வாழ வழி செய்தார்.

இறைவனின் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலுக்கும் உலக மகாசக்தியவள் உறுதுணையாக இருந்து யாவற்றையும் இயக்குகிறாள். சக்தியின் ஆற்றலினால் சகல உயிரினங்களும் சிறப்படைகின்றன. சிவமும் சக்தியும் நெறிப்படுத்தும் நல்வினை தீவினைகளுக்கு அமைவாக மனித குலம் வாழும் நியதியுண்டு. மனித குலம் தமது பகுத்தறிவின் மூலம் இறைவன் காட்டிய நற்பயனை அடையத் தீவினைகளை விலக்கி நல்வினைகளைச் செய்ய வேண்டும். எந்த மனிதனும் தமது வினைப்பயன்களை ஆராய்ந்து நல்லறம் காத்து வாழ இறைவனால் வகுக்கப்பட்ட சிவநெறி உதவுகிறது. இறைவன் மனித குலம் வாழ்வாங்கு வாழவென வேதாகமங்களையும் படைத்து அதனை நெறிப்படுத்தி உய்விக்கிறார். நல்வழியை நெறிப்படுத்த இறைவன் சிவநெறியை யாவரும் அனுசரிக்க வைக்கிறார்.

வேதாகம விதிமுறைகளுக்கமைவாக ஒழுகுமாறு தாமே போதித்தும் வழிகாட்டியாக வாழ்ந்தும் காட்டுகிறார். ஆரம்ப காலத்தில் முனிவர்கள், சித்தர்கள், யோகிகளுக்குப் போதித்து நெறிப்படுத்தினார். இறைவனால் நெறிப்படுத்தப்பட்ட ஒழுக்க சீலர்கள் தமது அறிவையும் செயல்முறைகளையும் ஏனையோரும் கற்க உதவினர். முற்பிறவியில் நல்வினை தேடியோர் இப்பிறவியில் மேலும் நற்பயனை அடைய தமக்கொரு சற்குருவை நாடி நலமடைகின்றனர். இவ்வாறு தமது சிவநெறி மூலம் யாவரும் உய்யும் வழியை நாடினர்.

இவ்வுலகில் சைவநெறி தழைக்கச் சிவப்பரம்பொருள் தாமே குருவாக அமைந்து சமய குரவர்களை வழிப்படுத்தினார். இறைவன் சிவநெறியை உய்விக்கும் பக்குவ நிலையை நேரிற் போதித்து மாணிக்கவாசகரை இவ்வுலகம் போற்றும் வண்ணம் செயற்பட வைத்தார். மாணிக்கவாசகரின் சிறப்பினை வேறொரு பந்தியில் அறிவோம்.

சிலர் சிவநெறி சிறக்கச் சிவப்பரம்பொருளை ஒரு மனதாகக் காதலித்து அறப்பணி பூண்டனர். சிவநெறியை தமது மூச்சாக எண்ணி இறைவனை இசைவிக்க இனிய பாடல்களைப்

பாடி இறையருள் பெற்று அரும்பணியாற்றினர். காரணமின்றிக் காரியமில்லை. இதற்கமைவாகவே அவ்வப்போது பல தவசீலர்கள் சிவநெறி பரப்பும் பணிக்காகத் தோற்றுவிக்கப் பெற்றனர்.

அனாதியான தூய சைவநெறி எம்மவராற் பன்நெடுங்காலமாக பேணிப் பாதுகாக்கப் படுகிறது. இடைக் காலத்திற் தோன்றிய பௌத்தம், சமணம், இஸ்லாமிய மதங்களால் இடையிடையே சைவம் நலிவுற்றது. புற சமயத்தவர் அரசர்களையும் மத வாதத்தையும் தமதாக்கியே சைவத்தை நலிவுற வைத்தனர். இச்சமகாலத்தில் சைவம் அருகுவதைப் பொறுக்காத பலர் வெதும்பினர். சோழ நாட்டின் தெய்வீகத் திருவூரான சீகாழியில் வாழ்ந்த வேதியரான சிவபாதவிருதயர் சைவத்தை வளரச் செய்யவல்ல சற்புத்திரரொருவரைத் தமக்குப் புதல்வனாகத் தருமாறு இறைவனை வேண்டினார்.

## திருஞானசம்பந்தர்




எல்லாம் அறிந்த எம்பெருமான் தமது முருகனின் அம்சமான பாலகனை சிவபாத விருதயரிடம் அவதரிக்கச் செய்தார்.

காரணத்தைக் காரியமாக்க உதித்த பாலகன் மழலை மொழிபேசும் மூன்று வயதில் நியமம் தவறாத தந்தையுடன் தாமும் சீகாழியூர் பிரமாபுரம் மேவிய தோணியப்பரைத் தரிசிக்கச் சென்றார். தந்தை பாலகனைக் குளக்கரையில் இருத்திவிட்டு நீராடினார். தந்தையைக் காணாத பாலகன் எதிரேயுள்ள ஆலயக் கோபுரத்தை நோக்கி "அம்மையே அப்பா" என அழுதது. உலக மாதாவும் இறைவனும் பாலகனின் குரல் கேட்டு அவ்விடத்தை அடைந்தனர். அப்பாலகனின் அழுகையை மாற்ற உமையவள் தமது திருமுலைப்பாலைச் சிறு கிண்ணத்திற் சுரந்தளித்தார். அன்னையின் ஞானப்பாலுண்ட குழந்தை ஞான தேசிகனானான். இறைவன் இறைவி மறைந்தருளவும் சிவபாதவிருதயர் அவ்விடம் வந்தார். மகனின் வாயிலிருந்து வடிந்த பாலைக் கண்டதும் உனக்குப் பாலூட்டியது யாரென அதட்டினார். இதுவரை ஓதி உணராது அமுதமொழியாம் மழலை மொழியில் உலக மாதாவின் பெற்கரிய பேரமுதாம் திருமுலைப்பாலுண்ட ஞான உணர்வால் எதிரேயுள்ள கோபுரத்தைச் சுட்டிக் காண்பித்து "தோடுடைய செவியன்" என்ற தொடரில் அமுதமொழியாம் தேவாரத்தைப் பாடினார். யாவரும் வியப்புற்றனர். இறைவனின் திருவருளை எண்ணி இன்புற்றனர்.

இப் பாலகன் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டதால் "ஆளுடைப் பிள்ளை" எனவும் ஞானப்பாலுடன் சம்பந்தப்பட்டதால் ஞானசம்பந்தர் எனவும் இவரின் சிறப்பு நோக்கி "திரு"வும் சேர "திருஞான சம்பந்தர்" எனவும் அழைக்கப்படலானார்.

இறைவனின் திருவிளையாடலினால் "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க பூத பரம்பரை

பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத சீதவள வயற்புகலித் திருஞானசம்பந்தர்" (சேக்கிழாரின் அருள்வாக்கு) அவதரித்தார். முன்னதாகவே பலராலும் போதனைகள் செய்யப்பட்டன. யாவரும் உவந்தேற்கும் ஞானப் பாடலை முதன்முதல் (பன்னிரு திருமுறையில் திருஞானசம்பந்தரின் தோடுடைய செவியன் என்னும் பாடல்) பாடிய பாடல் சிறப்புடையதாகும். திருஞானசம்பந்தர் தென்னிந்திய சிவத்தலங்கள் அனைத்தையும் தரிசித்துப் பாமாலைகள் பாடியும் அற்புதங்கள் செய்தும் தாம் அவதரித்த நோக்கத்தை நிறைவு செய்தார். இவரின் பணிசெய்யும் பாதைக்கு ஞான உணர்வு வழிகாட்டியது. இராமேஸ்வரம் வந்தபோது தமிழீழப் பெரும் தொன்மைப் பதியாம் திருக்கேதீஸ்வர ஆலயத்தை (கடல் கடந்து வராது அக்கரையிலிருந்தே) "விருதுகுன்றா மேருவினார்" என்னும் தொடரில் ஒரு பதிகம் பாடினார். மேலும் திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை நோக்கி "நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு" என்னும் தொடரில் ஒரு பதிகம் பாடி எம்மை மகிழ்வித்தார். இதனால் தமிழீழத்தில் பாடல்பெற்ற தலங்கள் என்னும் சிறப்பை இவ்விரு ஆலயங்களும் பெற்றன.

தமிழகத்தின் சுற்றுலாவில் வடபால் சென்றபோது இமாலயச் சூழலில் அமைந்த பஞ்சநாதத் தலங்களிலொன்றான திருக்கேதாரத்தையும் நோக்கினார். (நெடுந்தூரம் பயணஞ் செய்யாது தமிழகத்திலிருந்தே திருக்கேதாரநாதரை வணங்கி "தொண்டரஞ்சு களிறும்" எனத் தொடங்கும் பாடலைப் பாடினார். இதனால் பன்னிரு ஜோதி (சுயம்பு) லிங்கத் தலமான திருக்கேதாரநாத் திருத்தலத்துக்கும் பெருமை சேர்ந்தது.

இறைவனின் சித்தப்படி பன்னிரு திருமுறைகள் வகுக்கப்பெற்றன. அவற்றுள் திருஞானசம்பந்தரின் பாடல்கள் முதல் மூன்று திருமுறைகளும் முன்னணியில் இடம்பெறுகின்றன. இவரின் முதற்பாடலே திருமுறையின் முதற்பாடலாக அமைந்தது தனிச்சிறப்பாகும்.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தமது மூன்று வயது முதல் பதினாறு வயது வரை பல்லாயிரம் பாடல்களைப் பாடினார். இவற்றுட் பல பாடல்கள் சிதைந்தபோதும் 384 பதிகங்கள் கொண்ட 4159 பாடல்கள் பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்றை அலங்கரிக்கின்றன. இப்பாடல்கள் யாவும் "திருக்கடைக்காப்பு" என்னும் பெயரால் அடைக்கப்பெறுகிறது.

சமயகுரவர் நால்வரிலும் தேவார முதலிகள் என்றழைக்கப்பெறும் மூவரிலும், இறைவனால் உதிக்கச் செய்த திருஞானசம்பந்தருக்குப் "பாலை"க்கொடுத்து ஞான உணர்வைத் தந்து பாட வைத்தார். இறையருளால் சிவாலயங்களை வலம் வந்து பாடல்கள் பாடியும் அற்புதங்கள் செய்தும் பதினாறாம் வயதில் உலகச் சம்பிரதாயப்படி திருமணஞ் செய்து துணைவி மற்றும் திருமணத்திற் பங்கேற்ற யாவருடனும் சேர்ந்து நல்லூர்ப் பெருமணம் என்னும் ஆலயத்தில் தோன்றிய தனிப் பெருஞ் சோதியுட் கலந்து முத்தி பெற்றனர்.

திருஞானசம்பந்தப் பெருமானை விட ஏனைய மூன்று சமய குரவர்களும் தமது முற்பிறவித் தொடரின் காரணமாகவே தோன்றி 4-8 வரை ஐந்து திருமுறைகளையும் அலங்கரித்தனர். பன்னிரு திருமுறைகளும் சைவ நெறியை மேன்மைப்படுத்தும் அருமருந்தாக அமைவதை உணரலாம்.

**நம்பிக்கை செழிப்பைத் தராது, ஆனால் தாங்கி நிற்கும்.**

## திருநாவுக்கரசர்

சைவ சமய நெறியைத் துலங்க வைத்த சமயகுரவர் நால்வரில் திருநாவுக்கரசர் தவிர்ந்த ஏனைய மூவரும் வேதியர் குலத்தவர்கள். திருநாவுக்கரசர் திருமுனைப்பாடி நாட்டின் திருவாமூரில் வேளாண்குடிப்பிறந்த புகழனார் மாதினியார் தம்பதியினரின் சற்புத்திரராக அவதரித்தார்.




புகழனார் தம்பதியினரின் தவப்புதல்வியாக திலகவதியாரும், தவசீலரான மருணீக்கியாரும் பெற்றோரின் நல்லறத்தை நிலை நாட்டவே அவதரித்தனர். இருவரும் சிவநெறியிலும் பண்பிலும் கல்வியிலும் சிறந்து விளங்கினர். திலகவதியார் திருமணப் பருவத்தை அடைந்ததும் பெற்றோர் திருமண ஏற்பாடு செய்தனர். சிறந்த விவசாயியும் போர் வீரருமான கலிப்பகையாருக்கும் திலக வதியாருக்கும் திருமண நிச்சயதார்த்தம் செய்யப்பட்டது. சில நாட்கள் சென்றதும் நாட்டு நிலைமைக்கேற்ப கலிப்பகையார் போர்முனைக்குச் சென்று வீரச்சாவடைந்தார். இதனால் திலகவதி யார் விதவைக்கோலம் பூண்டு சிவநெறியில் ஆழ்ந்தார். குறுகிய காலத்தில் பெற்றோர் இருவரும் மறுமை எய்தியதால் விதவையாகிய திலகவதியார் சாவைத்தழுவ முனைந்தார். அச்சமயம் மருணீக்கி யாரின் வேண்டுதலின் பேரில் சாவைத் தவிர்த்துக் கொண்டார்.

இறையருளும் எதிர்காலச் சிறப்பும் முன்னின்றதால் இருவரும் சிவநெறியுடன் அறம் போற்றி வாழ முன்வந்தனர். மருணீக்கியார் தமது கல்விச் சிறப்புடன் நிலையற்ற மனித வாழ்வை எண்ணி நற்பணியாற்றினார். தண்ணீர்ப்பந்தல், அறச்சாலைகளை அமைத்தார். குளங்களைத் தோண்டுவித்து நிழல்தரும் மரங்களை நாட்டிச் சோலைகளை அமைத்தார். தம்மை நாடி வருபவர்களுக்கு வேண்டியன தந்து உதவினார்.

இவரின் சிந்தனை கொல்லாமையை எண்ணி சமணமதம் காட்டிய பாதையை நாட வைத்தது. பாழும் சமணசமய வலையிற் சிக்கினார். இதனால் சமண சமய தத்துவங்களில் மேலோங்கி மதத்தலைவராக "தருமசேனர்" என்னும் பெயருடன், தம் வாழ்வில் அரைவாசிக் காலம் சைவத்தை விட்டுச் சமணத்தில் பிரகாசித்தார்.

இதேசமயம் திலகவதியார், மருணீக்கியார் சைவத்தை விட்டுச் சமணத்தில் புகுந்ததால் தாம் சிவநெறிபூண்டு திருவதிகையிலுள்ள வீரட்டானேஸ்வரர் திருத்தலத்தில் தஞ்சமடைந்து ஆலயப்பணியேற்று வாழ்ந்தார். தமது முதுமைக்காலம் வந்ததும் தம்பியை சைவசமயத்துக்கு அழைக்குமாறு இறைவனை வேண்டினார். தவசீலியான திலகவதியாரின் வேண்டுதலை ஏற்ற இறைவன் பின்வருமாறு அசரீரியாக எடுத்துரைத்தார்.

"உன் தம்பி முற்பிறவியில் முனிவராக இருந்து தவஞ்செய்தபோது செய்த தவறுக்காகவே இப்பிறவியில் தண்டனையை அனுபவிக்கிறான். அவனின் தவறுதலுக்காகச் சூலைநோயைக் கொடுத்து ஆட்கொள்வோம்" என்று கூறி மறைந்தருளினார். இறைவனின்

திருவுளப்படி (மருணீக்கியார்) தருமசேனர் சூலைநோயால் அவதியுற்றார். அச்சமயம் சமணர்களால் மாற்ற முடியாத நோயுடன் அவர் திலகவதியாரிடஞ் சரணடைந்தார். திலக வதியார் தன் தம்பிக்குத் திருநீறிட்டு நோயின் வெம்மையைக் குறைத்ததும் அவரை அழைத்துச் சென்று வீரட்டானேஸ்வரரை வணங் கச் செய்தார். சூலைநோயால் தடுத்தாட் கொள்ளப்பெற்ற மருணீக்கியார் இறைவன் சந்நிதியில் வீழ்ந்து வணங்கும்போது இறை யருளால் "கூற்றாயினவாறு விலக்ககலீர..." என்னும் பதிகம் பாடிப் பணிந்தார். இப்பாட லின் சிறப்பினால் அவரைப் பற்றிய சூலை நோய் முற்றாக நீங்கியது. அப்போது "தீந்தமி ழில் அரிய பதிகம் பாடினாய். அதனால் "நாவுக்கரசு" என்னும் பெயரில் விளங்குவாய்" என இறைவன் அசரீரியாக இயம்பினார்.

இறைவனின் பெருங்கருணையை ஏற்ற நாவுக்கரசர் தனது கொடிய நோயி லிருந்து தன்னைக் குணமாக்கிய நன்றிக்காக ஆலயப்பணியினைச் செய்வதே மேல் என உணர்ந்தார். கையில் உழவாரம் ஏந்தி ஆலயச் சுற்றுப்புறச் சூழலில் புல்பூண்டுகளை அகற்றி யும் சுத்தஞ் செய்தும் இதே நேரத்தில் தான் பணி செய்யும் இறைவன் மீது அரிய பதிகங் கள் பாடியும் பணியாற்றினார்.

திருநாவுக்கரசரின் சிவாலயப் பணியி னைக் கண்டு பொறுக்கமுடியாத சமணர்கள் தமது அரசனிடம் முறையிட்டனர். சமணர்கள் பற்பல கொடுமைகளைப் புரிந்தனர். முதலில் சுண்ணாம்பு அறையில் பூட்டி வைத்தனர். நாவுக்கரசர் "மாசில் வீணையும்" என்னும் பதிகம் பாட சுண்ணாம்பறை குளிர்ந்த பொய்கையாக அமைந்தது. கருங்கல்லிற் கட்டிக் கடலினுட் போட்டனர். அகமகிழ்ந்த நாவுக்கரசர் "சொற் றுணை வேதியன்..." என்ற பதிகம் பாட கருங்கல் தெப்பமாக மிதந்தது. இதுபோன்ற பல்வேறு கொடுமைகளாற் கொல்லச் சதி செய்தனர். யாவற்றையும் இறைவன் மீது பாடிய பாடல்கள் தீமைகளை அகற்றி அற்புதங் களைப் புரிய வைத்தது.

திருநாவுக்கரசர் உழவாரப் பணியுடன் மேலும் பல ஆலயப் பணிகளையும் ஆற்றும் போது பாமாலைகளால் இறைவனை அலங் கரித்தார். இவர் பல ஆலயங்களுக்குச் சென்று பாடல் பாடியும் அற்புதங்கள் செய்தும் சம காலத்தில் பாலகனாகப் பாடிப் பணிசெய்த திருஞானசம்பந்தருடனும் கூடிப் பல சிவாலயங் களிற் சேர்ந்து பாடியும் இன்புற்றார். இவர் தென்னகத்திலுள்ள சிவாலயங்களனைத்தை யும் பாடியும் சரீரப் பணி செய்தும் மகிழ்ந் தவர். சமணத்திலிருந்து சைவத்தை நாடிய முதுமைக் காலத்தில் பணி ஏற்றதால் "அப்பர் சுவாமிகள்" எனவும் போற்றப்பட்டார்.

அகவை எண்பதிலும் உள்ளத் துணி வுடன் கயிலைக்குச் செல்ல முன்வந்தார். முதுமையும் உடற்பலவீனமும் அமைந்ததால் நடந்தும், தவழ்ந்தும் நிலத்தில் வீழ்ந்து ஊர்ந்தும் அப்பாற் செல்ல இயலாது அவரின் உடல் நன்கு தேய்ந்து சிதைவடைந்ததால் அசைய முடியாது வருந்தினார். இறைவன் முனிவர் வடிவில் வந்து கயிலை செல்வது கடினம் என்றும் திரும்புமாறும் அருள நாவுக் கரசர் கயிலை செல்லாது இந்த உடம்புடன் திரும்பேன் என்றார்.

அப்பரின் மன உறுதியை மெச்சிய இறைவன் அசரீரியாக "எழுந்திரு" என்றதும் அப்பர் எழவும் சிதைந்த உடல் பூரணமடைந் தது. மேலும் அயலிலுள்ள தடாகத்தில் மூழ் கித் திருவையாற்றில் எழுமாறும் திருவையாற் றில் எமது கயிலைக் காட்சியைக் காணலாம் எனவும் கூறினார். அப்பர் இறைவன் ஆணைப் படி தடாகத்தில் மூழ்கித் திருவையாற்றில் எழுந்து கயிலைக் காட்சியைக் கண்டு வணங் கினார். வணங்கிய மகிழ்வில் "மாதர்பிறைக் கண்ணியானை" என்ற பதிகம் பாடி மகிழ்ந்தார்.

**மனிதனுடைய எல்லா வியாதிகளுக்கும் மூலகாரணம் இரத்தமே.**

திருநாவுக்கரசர் சிவாலயத் திருவுலாவின்போது பல இடங்களில் இறைவன் மாறு வேடத்தில் வந்து பலவாறு உதவினார். இவர் மேலும் பல ஆலயங்களிலும் பல்லாயிரக்கணக்கான பாடல்களைப் பாடினார். காலப்போக்கில் பல பாடல்கள் சிதைவுற்றபோதும் 3045 பாடல்கள் கொண்ட 313 பதிகங்கள் கிடைத்துள்ளன. இப்பாடல்கள் "தேவாரம்" என வழங்கப்பெறுகிறது. திருநாவுக்கரசு சுவாமிகளின் 3045 பாடல்களும் பன்னிரு திருமுறைகளில் முறையே 4,5,6ஆம் திருமுறைகளாக வகுக்கப்பெற்ற பெருமைக்குரியன.

திருநாவுக்கரசர் தமது இறுதிக்காலம் வரை பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசை யாவற்றையும் மனதாலும் தீண்டாது, ஓடும் செம்பொன்னும் ஒப்ப நோக்கிய தூயவர். பல இடங்களிலும் பாடல்கள் பாடிய வண்ணம் திருப்புகலூர் சென்றார். எம்பெருமானை வேண்டி "எண்ணுகேன்" என்ற திருத்தாண்டகம் பாடி முடிவில் "புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்" என்று பாடிய வண்ணம் சிவானந்தத் திருவடியைத் தஞ்சமடைந்தார்.

(தொடரும்...

# மகேஸ்வரன் நினைவு நாளும், பிறந்த நாளும்



ஜனவரி 1 என்பது அன்புள்ளம் கொண்ட மாமனிதன் மகேஸ்வரனின் நினைவு நாளாகும். சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் 01.01.2014இல் நடைபெற்ற மகேஸ்வரன் நினைவு நாள் சிறப்பான பல்வேறு அம்சங்களுடன் நினைவு கூரப்பட்டது. புட்டளை மகாவித்தியாலய அதிபர் திரு ஆ. சிவநாதன் அவர்கள் நினைவுப் பேருரை நிகழ்த்தினார். "மகேஸ்வரனின் சேவைகளும் பணிகளும்" என்னும் தலைப்பில் திரு ஆ. சிவநாதன் ஆற்றிய சிறப்புரை அனைவரையும் கவரும் படியாக அமைந்திருந்தது. தொடர்ந்து உரையாற்றிய ஆச்சிரம சுவாமிகள், சந்நிதியான் ஆச்சிரமத்துடன் மகேஸ்வரன் கொண்டிருந்த அளப்பரிய ஈடுபாடுகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்கள். பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு, நினைவு நாளின் முக்கிய அம்சமாக இடம்பெற்றது.

10.01.2014இல் மறைந்த மகேஸ்வரன் பிறந்த நாளன்று, ஆச்சிரமத்தின் வழமையான வாராந்த நிகழ்வுடன் அன்னாரது பிறந்த நாளும் நினைவு கூரப்பட்டது. பேரவையின் தலைவர் திரு கு. அருணகிரிநாதன் அவர்களும், விசேட சொற்பொழிவாற்றிய சுவாமி சித்ரூபானந்தா அவர்களும் தத்தமது உரையில், அன்னாரது பிறந்த நாளை நினைவு கூர்ந்ததுடன் அவர் ஆற்றிய பணிகள் பற்றியும் ஏற்றிப் போற்றினர்.

ஆசை கண்களைக் குருடாக்குகின்றது காதைச் செவிடாக்குகிறது.

# ஆனந்தம் தரும் ஆனந்தமங்கலம் வீர ஆஞ்சநேயர்

– திரு T. ஸ்ரீரெங்கநாதன் அவர்கள் –

ஆனந்த மங்கலத்திலே உள்ள வீர ஆஞ்சநேயர் கோவில் இந்திய அளவில் பிரசித்திபெற்றது. இந்த ஊரில் உள்ள ஸ்ரீதேவி, பூதேவி சமேத வாசுதேவ பெருமாள் கோவிலில் தனிச்சந்நிதியில் ஆஞ்சநேயர் அருள்பாலிக்கின்றார். இக்கோவிலில் உள்ள ஸ்ரீ திரிநேத்ரசபூஜ வீர ஆஞ்சநேயர் மூன்று கண்களையும், பத்துக் கரங்களையும் கொண்டவர். சங்கு, சக்கரம், சூலம், கபாலகம், மழு, பாசம், வில், அம்பு, சாட்டை, நவசநீதம் ஆகியவற்றை கரங்களில் ஏந்தி, முதுகின் இருபக்கங்களிலும் கருடனுக்குரிய சிறகுகளோடு எழுந்தருளி உள்ளார். இங்குள்ள வீர அனுமனின் தலபுராணம் ராமாயணத்தோடு தொடர்புடையது. இலங்கையில் யுத்தம் செய்து சீதையை சிறைமீட்ட பின் புஷ்பக விமானத்தில் ஸ்ரீராமர், சீதை, லட்சுமணன், அனுமன் ஆகியோர் அயோத்திக்கு திரும்புகின்றனர். வழியில், பரத்வாஜ மகரிஷியின் ஆசிரமத்தில் இறங்கி விருந்து உண்டனர்.



அப்போது அங்கு வந்த நாரதர் ஸ்ரீ ராமரிடம், "ராவணன் அழிந்த பின்னரும் அரக்கர்கள் சிலர் உள்ளனர். அவர்களில் இரக்தபிந்து, இரக்தராட்சகன் ஆகிய இருவரும் மிகக் கொடியவர்கள். அவர்கள் தற்போது கடலுக்கடியில் கடுந்தவம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தவம் நிறைவு பெற்றால் ராவணனைப் போல் வரம் பெற்று உலகை அழித்து விடுவர். ஆதலால் உலக நன்மைக்காக அவர்களை நீ அழிக்க வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார். உடனே ராமபிரான், "மகரிஷியே! நான், பரதனுக்கு வாக்குக் கொடுத்தபடி உடனே அயோத்திக்குத் திரும்பவேண்டும். லட்சுமணனும் என்னைப் பிரிந்து செல்ல மாட்டான். எனவே அந்த அரக்கர்களை அழிக்க, ஆற்றலுடைய மாவீரன் ஆஞ்சநேயனை அனுப்புவோம்'' என்றார். ஆஞ்சநேயரும் பணிவுடன் தன் ஒப்புதலைத் தெரிவித்தார். ஆஞ்சநேயர் ஏற்கனவே அழியாத வரம் பெற்றவர். இருந்தாலும், அரக்கர்களை வெல்லத் திருமால் தமது சங்கையும், சக்கரத்தையும் அனுமனுக்கு அளித்தார். பிரம்மா பிரம்ம கபாலத்தை வழங்கினார். ருத்ரன் மழுவைத் தந்தார். ராமபிரான் வில்லையும், அம்புகளையும் அளித்தார். இந்திரன் வஜ்ராயுதத்தை வழங்கினார். இப்படித் தெய்வங்கள் வழங்கிய ஆயுதங்களை தாங்கி ஆஞ்சநேயர் பத்துக்

கரங்களுடன் காட்சி தந்தார். அப்போது கருடாழ்வார் தம் இரு சிறகுகளையும் அவருக்குத் தந்தார்.

கடைசியாக அங்கு வந்த சிவ பெருமான் தம்முடைய சிறப்புக்குரிய மூன்றாவது கண்ணையே அனுமனுக்கு அளித்தார். மூன்று கண்களும் (திரிநேத்ரம்), பத்துக் கைகளும் (தசபூஜம்) கொண்டு வீர ஆஞ்சநேயர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்று கடலுக்கு அடியில் பதுங்கி தவம் செய்து கொண்டிருந்த இரக்தபிந்து, இரக்தராட்சகன் ஆகிய இருவரையும் சம்ஹாரம் (வதம்) செய்தார்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டு ஸ்ரீ ராமரைச் சந்திக்க வந்தார். வரும் வழியில் கடற்கரையோரத்தில் இயற்கை அழகு நிரம்பியுள்ள ஓரிடத்திற்கு வந்ததும் அவருக்கு ஆனந்தம் மிகுந்தது. அந்த இடத்தில் இறங்கி சற்று நேரம் ஆனந்தமாகத் தங்கி இருந்தார். அந்த இடம்தான் இன்றைய அனந்த மங்கலம் என்கிறது இக்கோவில் தலவரலாறு.

அனுமன் ஜெயந்தி அன்று அவரை வழிபடுவது மிகவும் சிறப்பு. உடல், மனநலம் குன்றியவர்கள், திருமணம் ஆகாதவர்கள், குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள், தொழிலில் நஷ்டம் அடைந்தவர்கள், பில்லி- சூனியம், ஏவலால் பாதிக்கப்பட்டவர்கள், ஊழ்வினையால் துன்புறுகின்றவர்கள் இந்த ஆஞ்சநேயரை வழிபட்டால் அல்லல் அகன்று ஆனந்தம் பெறலாம்.

## ஞானச்சுடரே! வாழ்க!!

நல்ல நல்ல கவிதைகளும் ஆன்மீகக் கட்டுரைகளும்
தன்னகத்தே கொண்டுவரும் "ஞானச்சுடரே" வாழ்க!
இல்லமது சிறந்திடவே இனிய இதழாய் மலர்ந்து
ஈசனார் திருமகனின் இன்னருளையே சுமந்து
கல்லைக் கனியாக்கும் கார்த்திகேயனின் படத்துடனே
கருத்தாழம் மிக்க நல்ல கருத்துக்களைப் பரப்பி
எல்லோரும் எதிர்பார்த்துக் காத்திருக்கும் எழிலார்ந்த
"ஞானச்சுடரே!" பல்லாண்டு வாழ்க! வாழ்க!!

சின்னச் சின்ன ஆக்கங்கள் சிறப்புடனே தாங்கி வரும்
சீரான நல்லிதழே! சுரான வேல் முருகனருளால்
என்ன என்ன தேவையோ அவற்றுக்கு மதிப்பளித்து
ஏழை பங்காளனாம் முருகன் படத்துடனே மலர்ந்து
கன்னத்திலே குழி விழுகின்ற அழகன் குமரனை வணங்கிட
காலத்தின் தேவையறிந்து மாதந்தோறும் மிளிர்ந்து
மன்னவனாய் மகுடஞ் சூடிவரும் "ஞானச்சுடரே" நீ
மாண்புடனே பல்லாண்டு வாழிய வாழியவே!

~இராசையா ஸ்ரீதரன்~

கசப்பான சொல் வெறுப்பை வளர்க்கிறது.



# போற்றித் திருவகவல்

## சகத்திநுற்பத்தி

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

## நிலைமண்டிலவாசிரியப்பா

மறைந்த
சாங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
(யாழ்ப்பாணம் - காரைநகர்)

நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
ஈரடி யாலே மூவுல களந்து
நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்று
அடிமுடி யறியும் ஆதர வதனிற்
கடுமுர ணேன மாகிமுன் கலந்து
ஏழ்தல முருவ விடந்துபின் னெய்த்து
ஊழி முதல்வ சயசய வென்று
வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்
வழுத்துதற் கெளிதாய் வார்கட லுலகினில்
யானை முதலா எறும்பீ ராய
ஊனமி லியோனியி னுள்வினை பிழைத்தும்



**பதவுரை:-**

நான்முகன் முதலா வானவர் தொழுது எழ- நான்கு முகங்களையுடைய பிரமன் முதலாக வானுலகத்துள்ள தேவர்கள் வணங்கிக்கொண்டு எழ, ஈர் அடியாலே மூ உலகு அளந்து- இரண்டு திருவடிகளாலே மூன்று உலகங்களையும் அளந்து அருளுதலும், நால் திசை முனிவரும் ஐம்புலன் மலர போற்றி செய்- நான்கு திசைகளிலுமுள்ள முனிவர்களும் ஐம்புலன்களும் மகிழ்ச்சியால் விரியும்படி வணங்குதலைச் செய்யும், கதிர்முடி திரு நெடு மால்- ஒளியையுடைய திருமுடியை அணிந்த அழகிய உயர்ந்த திருமால், அன்று அடி முடி அறியும் ஆதரவு அதனில்- நான்முகனோடு தான் மாறுபட்ட அந்நாளில் அம்மாறுபாட்டினை நீக்குமாறு தமக்கு மத்தியிற் றோன்றிய அனற் பிளம்பின் அடியின் முடிவினை அறிய வேண்டும் என்ற விருப்பத்தால், கடு முரண் ஏனம் ஆகி- மிக்க வலியினையுடைய பன்றியின் வடிவெடுத்து, முன் கலந்து- முற்பட்டுப் பூமியிற் புகுந்து, ஏழ் தலம் உருவ இடந்து- கீழ் ஏழுலகங்களும் ஊடுருவும்படி பிளந்து, பின் எய்த்து- பின்னர்க் கீழ்ச் செல்ல இயலாது இளைப்புற்று, ஊழி முதல்வ சய சய என்று-

தன்னை அடக்கி ஆளப் பழகினவன் தரணியை அடக்கி ஆள்வான்.

ஊழியைச் செய்யும் முதல்வனே தேவரீருக்கு வெற்றியுண்டாகுக வெற்றியுண்டாகுக என்று, வழுத்தியும் காணா மலர் அடி இணைகள்- பரவியும் காணப்பெறாத தாமரை மலர்போன்ற திருவடிகள் இரண்டும், வழுத்துதற்கு எளி தாய்- துதித்தற்கு எளியவாகி.

பலி என்னும் அரசனால் வருந்திய பிரமன் இந்திரன் முதலிய தேவர்கள் வணங் கித்தொழ தமது இரு திருவடியால் மூவுலகங் களையும் அளந்து பலியின் வலியை ஒடுக்கி அருளுதலும் அத்தேவர்களன்றி எவ்விடத் திலுமுள்ள முனிவர்களும் தமது ஐம்புலன் களும் மகிழும்படி பரவுதலைச் செய்யும் ஒளி முடியையுடைய திருமால் தாம் பிரமனொடு மாறுபட்ட அந்நாளில் தமக்கிடையே தோன் றிய அனற்பிளம்பின் அடியின் முடிவினை அறிய வேண்டுமென்னும் விருப்பத்தால் மிக்க வலியையுடைய ஏனமாகித் தரையுட் புகுந்து கீழ் ஏழுலகங்களையும் ஊடுருவும்படி பிளந்து அவ்வளவில் இளைப்படைந்து ஊழி முதல்வ சயசயவென்று வழுத்தியும் காணா மலரடியிணைகள் வழுத்தற் கெளிதாய் என்க.

"நான்முகன் முதலா" என பிரமனைக் கூறியது திருமால் ஒழிந்த தேவர்களிற் பிர மன் சிறந்தோனாகலின். திருமால் மூவுல களந்து அருளுதலும் நான்முகன் முதலாகிய தேவர்களும் முனிவர்களும் தொழுது வணங் கினமையின், "நான்முகன் முதலா வானவர் தொழுதெழ" எனவும், "நாற்றிசை முனிவரும் போற்றி செய்" எனவும் அருளிச் செய்தார். தொழுதெழ அளந்து என இயையும். மூவுலகு: மண்ணுலகு, விண்ணுலகு, வளியுலகு என்பன. மால் உலகளந்தமை "வையந் தன்னை உரிதாய வளந்தானும்" (ஞான 119:9) "இரு நிலந் தாவினானும்" (நாவு 51:9) எனத் தேவாரத்தும் "உலக மூன்றும் அளந்துழி ஆங்கவன், ஈரடி நிரம்பிற்றும் இலவே" (கோயில் நான்மணி 11:2) எனப் பதினொராந் திருமுறை யிலும் கூறப்படுதல் காண்க. எல்லா இடங் களிலுமுள்ள முனிவர்களையும் உளப்படுத்தி "நாற்றிசை முனிவரும்" என்றார்.

திருமாலின் அருளமுதைப் பெறுத லாற் சுவையின்பமும், நெடிய திருவுருவைக் காண்டலால் ஒளியின்பமும், திருவடிகளைப் பரிசித்தலால் ஊற்றின்பமும், திருவருளுரை யைக் கேட்டலால் ஓசையின்பமும், தெய்வீக நறுமணத்தை நுகர்தலான் நாற்றவின்பமும் நிறைவுறப் பெறுதலின் "ஐம்புலன் மலர" என்றார். மலர- மகிழ்ச்சியால் விரியும்படி. மலரப் போற்றி செய் என இயையும் அடிமுடி- அடியினது முடிவு. முடி முதனிலை வினைப் பெயர்.

அனற் பிளம்பின் அடியினது முடி வினை அறியுமாறு ஏன வுருக்கொண்டு சென்று காணாது எய்த்த திருமாலின் செயலைக் கூறவே அந்நாளில் அவ்வனற் பிளம்பின் முடி யின் முடிவினை அறியுமாறு அன்ன வடிவங் கொண்டு சென்று காணாது எய்த்த நான் முகன் செயலும் தானே பெறப்படுமாதலின் நான்முகன் முடிதேடச் சென்று எய்த்தமை கூறாதொழிந்தார் என்க.

கடுமுரண்- மிக்க வலி. கடு ஈண்டு மிகுதிப் பொருளில் வந்தது. "கடுமுடையார்க் குங் காடு" (ஐங் 335) என்புழிப்போல. முரண்- வலி. இப்பொருட்டாதல் "மூரி முடுகல் முரண் வயம் பாழி... முன்பு மொய்ம்பு வலம், தாவுதா நம் மாநமுரம் வலி" எனத் திவாகரத்து (பண்பு) வருதலானுமறிக. ஏனம்- பன்றி.

முன் கலந்து என்றது தாம் மாறுபட்டு நின்ற பூவுலகத்தைப் பிளந்து என்றவாறு. ஏழ்தலம் என்றது கீழ் ஏழு உலகங்களை, அவை: அதலம், விதலம், சுதலம், தலாதலம், ரசாதலம், மகாதலம், பாதாளம் என்பன.

"அதல விதல சுதல நிதல தராதல ரசாதல மகாதலமென்ன பாதள மோரேழெனப்பகர்வர்" என்றார் திவாகரத்தும். (பல்பொருட்) உருவுதல்- ஊடுருவுதல். இடந்து- பிளந்து.

எய்த்து என்றது அனற்பிளம்பின் அடி கீழேழுலகங்களுக்கு அப்பாலும் சென்றமையின் அதன் முடிவினைக் காண முடியாது இளைப்படைந்து என்றவாறு. எய்த்தல்- இளைத்தல். "ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை" (அம் 14) என்புழியும் இப் பொருட்டாதல் காண்க. ஊழியைச் செய்யும் முதல்வனாகிய இறைவனே தம்மத்தியில் அனற்பிளம்பாய் நின்றான் என்று எய்த்த அளவில் அறிந்த திருமால் "ஊழி முதல்வ சயசய என்று வழுத்தியும் திருவடியைக் காணாராயினர்.

"திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை"
தெள். 1

"அம்மால், திணிநிலம் பிளந்து காணாச் சேவடி" அச்சப். 5

என இத் திருவாசகத்தும்,

"இளைய னாகிய தனிமுதல் வானவன்
கேழல் திருவுரு வாகி யாழத்
தடுக்கிய ஏழும் எடுத்தனன் எடுத்தெடுத்
தூழி ஊழி கீழுறக் கிளைத்தும்
காண்பதற் கரியநின் கழலும்" (12;14-8)

எனக் கோயில் நான்மணிமாலையிலும்,

"புகவுகிர் வாளெயிற் றால்நிலங் கீண்டு பொறிகலங்க
மிகவுகு மாற்கரும் பாதத்தனேல்" (18)

எனக் கோயில் திருப்பண்ணியர் விருத்தத்திலும் வருவன காண்க. திருவடியைக் காணாமை அவர் செருக்கு முழுவதும் நீங்காமையாலாகும். பின்னர் திருமால் திருவடியிணைகளைக் காணுமாறு தில்லைக்கண் தவங்கிடப்ப ஒரு திருவடியினைக் காட்டியருளினர். மற்றைத் திருவடியினையும் காட்டுக என்று திருமால் தில்லை முன்றலில் வரங்கிடந்தான் என அறிக. இதனை

"புரங்கடந்தா னடிகாண்பான் புவிவிண்டு புக்கறியா
திரங்கி டெந்தா யென்றிரப்பத் தன்னீரடிக் கென்னிரண்டு
கரங்கி டந்தானொன்று காட்ட மற்றாங்கதுங் காட்டிடென்று
வரங்கி டந்தான் தில்லையம்பல முன்றிலம் மாயவனே" (86)

எனத் திருக்கோவையாரில் வருதலானுமறிக.

வழுத்துதல்- பரவுதல். திருவடியிணைகள் என வந்தமையின் எளிதாய் என்னும் ஒருமைக் குறிப்பு வினையெச்சத்தை எளியவாக எனத் திரிக்க. திருவடியிணைகள் எளிது என ஒருமை கூறியது. "கண்ணிரண்டுஞ் சிவந்தது" என்பதுபோலப் பால்வழுவமைதியாகக் கொண்டு எளியதாவ எனப் பொருள் உரைக்கப்பட்டது. எளிதாய் (10) வந்து (75) என முடியும். இவ்வாறு ஒருவினை இடைவிட்டுச் சென்று வினையைக் கொண்டு முடிதல் "மாட்டு" என்னும் உறுப்பாம். என்னை?

"அகன்றுபொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும்
இயன்றுபொருண் முடியத் தந்தன ருணர்த்தல்
மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்"

என்றார் தொல்காப்பியனாராதலின். இவ்வினையெச்சத்திற்கும் அது கொண்டு முடியும். "வந்து" என்னும் வினைக்கும் இடையே "வார்கடலுலகினில்" என்பது முதலாகக் "கனவிலும் நினையாது" (74) என்பது ஈறாக வந்தனவெல்லாம் இடைப்பிறவரலாயின. இவ்வாறு வருதல்.

"தத்த மெச்சமொடு சிவணுங் குறிப்பின்
எச்சொல் லாயினு மிடைநிலை வரையார்" தொல் வினை 40

என்பதனாற் கொள்ளப்படும்.

வார்கடல் உலகினில் வழுத்துதற்கெளிதாய் என மாற்றிக் கூட்டிவந்து (75) என்னும் வினையொடு முடித்தல், "அவனியில் வந்து" எனப் பின்னர்க் கூறப்படுதலாற் கூறியது கூறலாகும். ஆதலால் வார்கடல் உலகினில் யானை முதல் எறும்பீறாய் எனக் கூட்டிப் பொருள்கோடலே சிறப்புடையதாம் என்க.

வார் கடல் உலகினில்- நெடிய கடல் சூழ்ந்த நிலவுலகத்தில், யானை முதலா எறும்பு ஈறாய- மிகப்பெரிய யானை முதலாக மிகச்சிறிய எறும்பு இறுதியாகவுள்ள, ஊனம் இல் யோனியில் உள் வினை பிழைத்தும்- கெடுதல் இல்லாத கருப்பையினுள்ளே இருக்கும்போது அதனுள் நிகழும் செயல்களுக்குத் தப்பியும்,

கட்புலனுக்குத் தோன்றுகின்ற இயங்கும் உயிர்களுள் மிகப் பெரியது யானையும், மிகச் சிறியது எறும்புமாதலின் "யானை முதலா எறும்பு ஈறாய" என்றார். எறும்பினும் சிறிய உயிர்கள் உளவாயினும் அவை கட்புலனாகாமையின் அவற்றைக் கூறுவாராயினர். இப்பிறவிகளெல்லாம் கேடின்றித் தொன்றுதொட்டு இடையறாது தொடர்ந்து வருதலின் "ஊனமில் யோனி" என்றார். ஊனம்- கேடு. யோநி- கருப்பை. வடசொல்.

(தொடரும்...

## குருபூஜை தினங்கள்

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி 21 | தை08 | செவ்வாய் | சண்டேசுரர் |
| ஜனவரி 25 | தை12 | சனி | திருநீலகண்டர் |
| | | | தாயுமானவ சுவாமிகள் |
| ஜனவரி 29 | தை16 | புதன் | நயினாதீவு முத்துக்குமாரசாமி |
| பெப்ரவரி 17 | மாசி05 | திங்கள் | திருவள்ளுவர் |
| மார்ச் 07 | மாசி23 | வெள்ளி | அநந்த பத்மநாப தீர்த்த சுவாமிகள் |
| மார்ச் 09 | மாசி 25 | ஞாயிறு | கச்சியப்பசிவாச்சாரியார் |
| மார்ச்20 | பங்குனி06 | வியாழன் | காரைக்காலம்மையார் |
| மார்ச்28 | பங்குனி14 | வெள்ளி | பரமகுரு சுவாமிகள் |
| மார்ச் 30 | பங்குனி16 | ஞாயிறு | குழந்தைவேற் சுவாமி |




நித்திய அன்னப்பணியே சந்நிதியான் ஆச்சிரமத்தின் முதற்பணி. சந்நிதியானையே தஞ்சமெனத் தங்கியிருக்கும் 70 முதியவர்களின் மூன்றுவேளை உணவு, 2 நேர தேநீர், வருடத்தின் மூன்று முறை உடுபுடவைகள், மாரிகாலத்திற்கென போர்வைகள் என அவர்களுக்கான பணிகள் நிறைவாகவே நடைபெறுகிறது. இதைவிட சந்நிதியானைத் தினமும் தரிசிக்கவரும் அடியார்கள் - அவர்கள் எத்தனை பேராக இருந்தாலும் சரி-அன்னமளித்து வருவதுடன், பாடசாலைகள்-முன்பள்ளிகள் - தனியார் கல்வி நிறுவனங்களிலிருந்து அடிக்கடி சந்நிதியானைத் தரிசிக்கவரும் மாணவர்களுக்கு (முன்னறிவித்தலுடன்) மதிய உணவளிக்கும் அன்னப் பணியும் தொடர்கின்றது.

சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் மாதாந்தம் வெளியிடப்படும் ஆன்மீக சஞ்சிகையான ''ஞானச்சுடர்'' பதினாறு ஆண்டுகள் கடந்தும் மாதம் தவறாது வெளியாகி ஆன்மீக அன்பர்களின் அறிவுப்பசி போக்கி வருகிறது. ஆர்வமுள்ள பல புதிய எழுத்தாளர்களையும் இப்பணிமூலம் ஊக்கப்படுத்தி வருவதும் கண்கூடு.

அன்னப்பணிக்கு இணையாக இலவச மருத்துவ சேவையும் கடந்த 13 ஆண்டுகளாக வாரத்தில் இரு நாட்கள் (புதன்+ ஞாயிறு) தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இரு நாட்களிலும் இரு டாக்டர்கள் கடமை செய்து வந்தபோதும், டாக்டர் பொன். சின்னத்தம்பி அவர்கள் தமது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற, டாக்டர் சி. சிவயோககுரு அவர்கள் தனி ஒருவராகத் தனது கடமையினைச் சிறப்புற ஆற்றி வருகிறார். டாக்டர் பொன். சின்னத்தம்பி அவர்கள் பல்லாண்டுகள் ஆற்றி வந்த அரிய சேவைக்காக ஆச்சிரமம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

பிரதி வெள்ளிதோறும் அறுபத்து மூவர் குருபூசைகள், மறைந்த மயில்வாகனம் சுவாமிகளின் குருபூசை தினம், முருகேசு சுவாமிகளின் குருபூசை தினம், சேக்கிழார் விழா, திருவாசக விழா, அருணகிரிநாதர் விழா, பண்ணிசைப் போட்டி, வாசகர் போட்டி எனப் பல்வேறு நிகழ்வுகளும் ஆண்டு முழுவதும் தொடர்வதுடன், வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்படுகிறது.

வாழ்க்கையின் ஏற்றத்தாழ்வுகளை நிதானத்துடன் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இவற்றிற்கும் மேலாக, மாதாந்தம் அரிசி முதலான உணவுப் பொருட்களுடன், குடும்ப தரத்திற்கு ஏற்றபடி பணமும் மாதம் தவறாது வழங்கப்பட்டு வருகிறது. யுத்த சூழ்நிலையின் பின்னர் இந்த உதவிபெறுவோர் தொகை மாதாமாதம் அதிகரித்துச் செல்வதையும் காணமுடிகிறது.

* 22.02.2013- வெள்ளிக்கிழமை - முன்னூறு வீட்டுத்திட்டம், நாவற்குழியைச் சேர்ந்த திருமதி சோமசுந்தரம் சறோஜினிதேவி என்பவருக்கு கண் சிகிச்சைக்காக ரூபா 5000 வழங்கப்பட்டது.

* 15.03.2013- வெள்ளிக்கிழமை- குட்டியப்புலம் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த சின்னையா சின்னராசா என்பவருக்கு மூக்குக் கண்ணாடி பெற்றுக் கொள்வதற்காக ரூபா 6000 வழங்கப்பட்டது.

* 28.03.2013- வியாழக்கிழமை- கற்கோவளம், புனித நகரைச் சேர்ந்த அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்காக ரூபா 5000 பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.

* 31.05.2013- வெள்ளிக்கிழமை- இமையாணன் கலைமகள் சனசமூக நிலையத்தால் நடாத்தப்படும் விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு கலைமகள் முன்பள்ளி மாணவர்களுக்காக பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டது.

* 27.09.2013- வெள்ளிக்கிழமை- மருதங்கேணி பிரதேச செயலகத்தில் முதியோர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற விழாவில் 30 முதியவர்களுக்காக உடுபுடவைகள் வழங்கப்பட்டன.

* 27.09.2013- வெள்ளிக்கிழமை யா/ கெருடாவில் இந்து தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும், வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள 15 மாணவர்களுக்கான மாதாந்த கொடுப்பனவாக ரூபா 11250 தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

* 04.10.2013- வெள்ளிக்கிழமை- கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயம்- "நவசக்தி" எனும் மலர் வெளியீட்டின் அச்சுப்பதிப்பு செலவுப்பணமாக ரூபா 20000 வழங்கப்பட்டது.

* 11.10.2013- வியாழக்கிழமை- பருத்தித்துறை பிரதேச செயலகத்தினரின் முதியோர் தின விழாவில் 15 முதியவர்களுக்கான உடுபுடவைகள் வழங்கப்பட்டன.

* 11.10.2013- வெள்ளிக்கிழமை- சந்நிதிச்சூழலில் தங்கியிருக்கும் இ. குமாரசிவம் அவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது.

* 15.11.2013- வெள்ளிக்கிழமை- அல்வாய் கொக்கட்டியாபதி ஞானவைரவர் ஆலய கட்டிட நிதிக்காக ரூபா 5000 வழங்கப்பட்டது.

**திருப்தி மாதிரி பொக்கிஷம் வேறெதுவும் கிடையாது.**

* 27.12.2013- வெள்ளிக்கிழமை- உடுப்பிட்டி முன்பள்ளி கொத்தணி நடாத்தும் கலை இலக்கிய விழாவை முன்னிட்டு 140 முன்பள்ளி மாணவர்களுக்கான பரிசுப்பொருட்கள் வழங்கப்பட்டன.

* பல்கலைக் கழக மாணவர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு:

யாழ், பல்கலைக்கழகம், கண்டி பேராதனைப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் கல்வி பயின்றுவரும் 50 மாணவர்களுக்காக மாதாந்தம் ரூபா 1லெட்சத்துக்கும் மேற்பட்ட பணம், அந்தந்த மாணவர்களின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்படுகிறது. இந்த மாணவர்களில் அநேகர் யுத்த சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட பல்கலை மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நடைமுறை பல வருடங்களாகத் தொடர்ந்து வருவதும் நோக்கத்தக்கது.

இவ்வாறான அனைத்துப் பணிகளும்- சேவைகளும் சந்நிதி முருகனின் திருவருட் கடாட்சத்தாலும், சந்நிதியான் ஆச்சிரம பீடாதிபதி மோகனதாஸ் சுவாமிகளின் திட்டமிட்ட நிர்வாக அமைப்பினாலும் தடங்கல் எதுவுமின்றித் தொடர்கிறது. இனிமேலும் தொடரும்...

# சந்நிதிக் கந்தன்

## கழற்கோர் கவிமாலை - 48

## "போக மெலாம் வழங்கி அருள்வான்"

அறுகு மாலை நனிவி ரும்பைங் கரனி னோடு அரிவை பங்கி
லமர வாச மலர்பு னைந்து -முத்தேரில்
அழகொ டேறி யுருகு தொண்ட ரளிநல் பாடல் தருந லின்பி
லடிமை யாகி யருளு கின்ற -மயில்வீரா!
முறுகி வீதி யுலவி வந்த தறுக ணாளர் தலைய ரிந்த
முருக னாகு மெனவி ளம்பப் -பெருகாராம்
பசுவி லேறி யிசைமு ழங்க உனது வீதி தனிலெ ழுந்து
பவிசி னோடு வலம்வ ருந்திண் -புயவீரா!
இறுகு தேர டியைவி ரும்பி இவரு மோர்செம் பரிய மர்ந்து
இனிய தாளை மிகவ ணங்கு -மடியார்கள்
இகம தாசை தனையு ணர்ந்து சகல யோக மவைவ ழங்கு
இறைவ னாறு முகவ னென்ற -புகழோனே!
மறுவி லாத தினைகொ ணர்ந்து நறவி னோடு நனிபி சைந்து
மகிமை ஆவி னெய்க லந்து -விளக்கேற்றி
மகிழு வாரி னுளமி ருந்து மனமுள் போக மவை வழங்கி
யருள வேசந் நிதிய மர்ந்த -வேலோனே!

-இராலசையா குகதாசன்-

வாய்ப்பு ஏற்படும்போது உடனடியாக நல்லது செய்துவிடுங்கள்.

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி

(தொடர்ச்சி...

– வாரியார் சுவாமிகள் –



35. விதிகாணும் உடம்பை விடா வினையேன்
கதிகாண மலர்க்கழல் என்றருள்வாய்
மதி வாணுதல் வள்ளியை அல்லது பின்
துதியா விரதா சுரபூ பதியே

## பதவுரை

மதிவாள் நுதல்- பிறைச்சந்திரனை ஒத்த ஒளி வீசுகின்ற நெற்றியையுடைய, வள்ளியை அல்லது- வள்ளியம்மையைத் தவிர, பின் துதியா- வேறு ஒருவரையும் புகழாத, விரதா- நோன்பு பூண்டவரே, சுரபூபதியே- விண்ணுலகிற்கும், மண்ணுலகிற்கும் தலைவரே! விதி காணும்- பிரமதேவன் படைத்த, உடம்பை விடா வினையேன்- உடம்பை விடாத வினைகளையுடைய அடியேன், கதிகாண- நல்ல கதியை அடையும்படி, மலர் கழல்- தாமரை மலர்போன்ற உமது திருவடியை, என்று அருள்வாய்- எப்போது என் தலைமீது சூட்டி அருள் புரிவீர்?

## பொழிப்புரை

பிறைச் சந்திரனைப் போன்றதும், ஒளி வீசுவதுமாகிய நெற்றியை யுடைய வள்ளிப் பிராட்டியைத் தவிர வேறு யாரையும் புகழாத விரதம் உடையவரே! விண்ணுலகிற்கும் மண்ணுலகிற்கும் தலைவரே! பிரமதேவன் படைத்த இந்த உடம்பை விடாத வினையையுடைய அடியேன், நற்கதியடையுமாறு, உமது தாமரை போன்ற திருவடியைத் தலைமேல் சூட்டி எந்நாள் அருள் புரிவீர்?

## விரிவுரை

**விதிகாணும் உடம்பை விடா வினையேன்:-**

விதி- பிரமன். அல்லது முன்னை விதி எனினும் அமையும். விதிக்கப்பட்டது விதி. விதிக்கின்றவன் பிரமன்.

வினையினால் உடம்பு வருகின்றது; உடம்பால் வினை யேறுகின்றது. வினையின்றி உடம்பில்லை; உடம்பின்றி வினை இல்லை. வித்தால் மரம்

வருகின்றது; மரத்தால் விதை விளைகின்றது. வித்து முந்தியா? மரம் முந்தியா? என்ற ஐயப்பாடு நிகழும். சுத்தியால் அடித்துக் குறடு செய்யப்படுகின்றது. குறடு பிடித்து சுத்தி செய்யப்படுகின்றது. "எது முந்தி" என்பதும் ஒரு வினா.

இதனைச் சிவஞான சுவாமிகளும் பின்வருமாறு கூறுகின்றார்.

நீயுள்ள தென்றன்று நானுமுளன் அன்றுமுதல்
நீங்காமல் என்னிடத்தில்
நேசம்வைத் தேநீ யிருக்கநான் மலமாகி
நின்றதேது உடலெனக் கங்கு
ஏயுமுறை எங்ஙனே வினைகள் தரும் எனிலவைகள்
ஏறியா தநுவிலால்
எட்டதா கேவலம் இருப்பமேல் ஒரு கன்மம்
ஏயா(து) அவிச்சை கண்டு
காயம தளிப்பதெனில் இன்பதுன் புறமுன்பு
கன்மம்ஏ(து) இதனை யருள்வாய்
ககனமுக டுங்கடத் தள்விபுவ னங்களும்
கரைபுரண் டெங்கும் ஓங்க
ஆயுமறை காணா(து) அகண்டமாய் நின்றதிரு
அக்கினி சுரர்மருவு நீள்
அருள்ஞான வாரியே! ராசைமேவியசெல்வ
அகிலாண்டம் என்னும் அரசே.

இதற்கு விடை காணவேண்டும்.

கேவல திசையில் ஆன்மாக்கள் இருட்டறையில் கட்டுண்டு கண்ணிலாக் குழவிகள் போலக் கிடந்தன. அங்ஙனம் இருந்த ஆன்மாக்களுக்கு இறைவன் கண்ணிலாத ஒருவனுக்குக் கோல் தருவதுபோல், கருணையினால் சூட்சும சரீரத்தைப் படைத்து வழங்கியருள் புரிந்தார்.

அந்த நுண்ணுடம்புடன் கூடிய ஆன்மாக்கள் விருப்பு வெறுப்பு எய்தி மனத்தால் செய்த நல்வினை தீவினை காரணமாக இந்தத் தூலவுடம்பு எய்தியது. பிறகு தூல உடம்பால் செய்யப்படுகின்ற நல்வினை தீவினை காரணமாக, அவிச்சின்ன தாரையாக உடம்பும், உடம்பால் வினையுமாக வந்து கொண்டேயிருக்கின்றன.

ஆதி கன்மம், மூல கன்மம் என்று விடை கூறுவாரும் உள்ர்.

"தூளேறு தூசுபோல் வினையேறு மெய்யேனும்
தொக்கினுட் சிக்கி நாளும்
சுழலேறு காற்றிடை அழலேறு பஞ்செனச்
சூறையிட் டறிவையெல்லாம்
நாளேற நாளேற வார்த்திக மெனுங்கூற்றின்
நட்பேற உள்ளு டைந்து
நயனங்கள் அற்றதோர் ஊரேறு போலவே
நானிலந்தனில் அலையவோ"

தாயுமானார்

"வினைபோகமேயொரு தேகங் கண்டாய்" என்கிறார் பட்டினத்தடிகள்.

முயற்சி இல்லாதவன் முன்னேற முடியாது.

வினையா லசத்து விளைதலால்; ஞானம்
வினைதீரி லன்றி விளையா - வினைதீர
ஞானத்தை நாடித் தொழவே அதுநிகழும்
ஆனத்தால் அன்பில் தொழு.

-சிவஞானபோதம் (உதாரண வெண்பா)

"உடம்பின் கண்ணதாகிய பிராரத்த வாசனை உயிர்க்குத் தாக்குவதாயுள்ள துணையும்; அதனால் வரும் விருப்பு வெறுப்புகளும், அவைபற்றிக் காட்சிப்படும் மண் முதல் மாயைகளும், அவைபற்றி நிகழும் விபரீத உணர்வுமாகிய அசத்துக்குள் ஒருவிய வழியும் வந்து கூடி மேம்படுவனவாகலான்; அவ்வளவிற் கெல்லாம் மூலமாகிய பிராரத்த வாசனை சற்றறக் கழிந்தாலன்றி, அவசத்தைக் கீழ்ப்படுத்தும் மெய்யுணர்வு மேம்படுதல் கூடாதாகலின் வினைதீர ஞானத்தை நாடித் தொழவே அது நிகழும்" என்ற சிவஞான சுவாமிகளின் உரையாலறிக.

உயிர்கள் செய்த நல்வினை தீவினைகளின் பயனை நுகருமாறு, சிவன் ஆணையால், பிரமன் அவ்வினைகளுக்கு ஏற்ற நியாயத் தீர்ப்பைத் தலையில் எழுதிப் பிறப்பிக்கின்றான்.

சிவபிரான் ஆணையாலேயே பிரமன் விதிக்கின்ற படியால்,

"இட்டமுடன் என்தலையில் இன்னபடி என்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ?"

என்றார் ஔவையார்.

முருகனுடைய அநுபூதி பெற்ற சிவஞானிகள் தலையில் அயன் எழுத முடியாது.

"தீட்டப்படா இனி உன்னால் என்சென்னி கறைப் பிறப்பில்
தீட்டப் படாவியவரல்லன் யான்திசாமுகனே"

-கந்தரந்தாதி (72)

ஞானிகள் ஞானவாளால், பிரமன் பிணித்த வல்வினைப் பிணிப்பை அறுத்தெறிவார்கள்.

பிரிந்தேன் பிரமன் பிணித்ததோர் பாசம்
தெரிந்தேன் சிவகதி செல்லும் நிலையை
அரிந்தேன் வினையை அயில் மனவாளால்
முரிந்தேன் புரத்தினை முந்துகின்றேனே.

-திருமந்திரம் (2961)

**வினைகள் பற்றி விளக்கம்:-**

வினை நல்வினை, தீவினையென இருவகைப்படும். இரண்டும் பிறவிக்கு ஏதுக்களே.

நல்வினை பொன், விலங்கு; தீவினை இரும்பு விலங்கு. இப்போது செய்கின்ற வினை ஆகாமியம்.

முன்செய்து பக்குவத்துக்கு வராமல் இருப்பதாகக் குவிந்துள்ள வினை சஞ்சிதம்.

பக்குவப்பட்டு இப்போது நுகர்கின்ற வினை பிராரத்தம்.

ஆகாமியம்- அப்பொழுது வயலில் விளைவிக்கின்றது போன்றது.

சஞ்சிதம்- குதிரில் சிறை கட்டப்பட்ட நெல் போன்றது.

பிராரத்தம்- குத்திய அரிசி சமையலறையில் அன்றாடம் சமைத்து உண்பது போன்றது.

**மனிதர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைக் காட்டுவது துன்பங்களே.**

ஞானிகட்குப் பிராரத்தம் உடலூழாய் நுகர்ந்து கழியும்.

சஞ்சிதம் ஞானாக்கினியால் எரிந்து கரிந்து போகும்.

ஆகாமியம் நிஷ்காம்ய தவத்தால் விளையாது.

ஆகவே வினைகள் மாய்ந்து பிறப்பு எய்தாது.

காணுதல்- படைத்தல். சதா பிரமன் படைத்துக்கொண்டேயிருக்கிறான். ஆதலின் "காணும்" என்று நிகழ்காலத்தால் கூறினார்.

உடம்பை விடா என்றது ஆகு பெயராய் உடம்பிலுள்ள பற்றை விடாதிருத்தலாகும். ஞானிகளுக்கு உடம்பும் மிகையாகும்.

மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க்(கு) உடம்பும் மிகை. -திருக்குறள்

"உடம்பென்ற பொதுமையான் உருஉடம்பும் அருவுடம்பும் கொள்ளப்படும்; அவற்றுள் அருவுடம்பாவது பத்து வகை. இந்தியவுணர்வோடும், ஐவகை வாயுக்களோடும், கர்மவினை விளைவுகளோடுங் கூடிய மனம்; இது நுண்ணுடம்பெனவும் படும். இதன்கட் பற்று நிலையாமையுணர்ந்த துணையான் விடாமையின் விடுதற்குபாயம் முன்னர்க் கூறுப. இவ்வுடம்புகளால் துன்பம் இடையறாது வருதலையுணர்ந்து இவற்றானாய கட்டினை இறைப்பொழுதும் பொறாது வீட்டின் கண்ணே விரைதலின் உடம்பு மிகை என்றார்" என்ற பரிமேலழகர் உரையாலறிக.

உடற்பற்றை விடாதிருத்தல் உடலை யான் என்றும், உடலால் நுகரும் பொருள்களை எனது என்றும் அபிமானித்து, யான் எனது என்னும் செருக்கை விடாதிருத்தலாகும்.

**கதிகாண மலர்க் கழல் என்றருள்வாய்:~**

கதி- ஆன்மா அடையும் நற்கதியாகும். சிவகதி என்றும் முத்திநலம் என்றும் சொல்லப்படும்.

காண- என்பது உணர்தலாகும்.

"ஒன்றி நின்றுள்ளே உணர்ந்தேன் சிவகதி"
-திருமந்திரம்

காண என்ற எதிர்கால வினையெச்சம், அருள்வாய் என்ற வினைமுற்றைக் கொண்டு முடிந்தது.

மலர்- தாமரை மலர் ஆகும்.

கழல்- வீரக்கழல்; முருகன் வீர மூர்த்தியாதலின் வீரக் கழலைத் திருவடியில் புனைந்திருக்கின்றார். இது தானியாகு பெயராகத் திருவடியைக் குறித்தது.

திருவடியை அருள் என்றது, அடியேன் தலைமீது சூட்டியருள் என்று வேண்டுகின்றார். திருவடி தீட்சை பெறுதலாகும்.

"இணையார் திருவடியென் தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையுந் துறந் தொழிந்தேன்"
-திருவாசகம்

தனித்து நில்லாத இயல்புடைய சதசத்தாகிய ஆன்மா உடலினைப் பற்றி உலகிலும், அல்லது இறைவனைப் பற்றி இறைவனிடத்திலும், வாழும் இயல்பினையுடையது.

உயிரானது உடலினைப் பற்றி, உலகில் வாழும்போது இருவினைகளும், அவற்றினால் உண்டாகிய விருப்பு வெறுப்புகளும் உடையதாய் மயங்கி, சிற்றின்பம் நுகர்ந்து பிறந்திறந்துழலும்.

உயிர் இறைவனைப் பற்றி நிற்கும்போது, இருவினைப் பற்றும், அது பற்றிய துவந்துவ மயக்கங்களும் உண்டாவதற்கு ஏதுவாய உடற்பற்றினை நீங்கி மெய்யுணர்வு பெற்று, இறைவனுடைய திருவடிகளையடைந்து, பேரின்ப வாழ்வில் நிலைபெற்றிருக்கும். ஆதலால் "மலர்க்கழல் என்றருள்வாய்" என்று அடிகளார் வேண்டுகின்றார்.

"அருளைக்
காட்டித் தேவநின் கழலிணை காட்டிக்
காயமாயத்தைக் கழித்தருள் செய்யாய்"

-(ஆட்டுத்) திருவாசகம்

**மதி காணுதல் வள்ளி:~**

மதி- அட்டமிப் பிறைச் சந்திரன்; இது நெற்றிக்கு உவமையாகும்.

வாள்ஒளி; வள்ளியம்மையின் நெற்றி அஷ்டமிச் சந்திரனைப் போலவும், ஒளியுடனும் அழகாக விளங்கும்.

**வள்ளியை யலலது பின் துதியா விரதா:~**

வள்ளியை முருகன் துதிக்கின்றார் என்றது, வள்ளி இச்சாசக்தியாகலின், இச்சா சக்தியின் குறிப்பின் வழியே முருகன் ஞானசக்தியால் விண்ணுலகிலும் மண்ணுலகிலும் உயிர்களுடைய பக்குவம் அறிந்து அவைகட்கு அருள் புரிகின்ற அருள் திறத்தைக் குறிக்கும்.

துதியா- ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் துதியாத என்று பொருள்படும்.

**சுரபூபதியே:~**

சுரபூபதியே! பூபதியே! என்று ஆகும். விண்ணுலகிற்கும் மண்ணுலகிற்கும் முருகனே தலைவன்.

**கருத்துரை**

வள்ளி மணவாளா! பிறப்புக்கள் தீர உன் திருவடி தீட்சை செய்தருள்.

(தொடரும்...

**வாகடத்தில் இல்லாத மருந்து**

செல்வம் என்பது ஒரு நோய். அந்த நோய் வந்தால் பலருக்குக் கண் தெரியாது. "தெரிந்திடும் செல்வமாம் பிணிவந்து உற்றிடில் உருத்தெரியாமலே ஒளி மறைந்திடும்". அதற்கு மருந்து உண்டா என்றால் வாகடத்தில் இல்லை.

மருந்துளதோ எனில் வாகடத்தில் இல்லை தரித்திரம் என்னும் ஓர் மருந்தில் தீருமே வறுமை வந்தால், தான் இந்த நோய் தீரும்.

-அறநெறிச் சிந்தனைகள்-

பணிவான சொல் பாதையை எளிமையாக்குகிறது.

# சைவத்தையும் தெய்வத்தையும் மதியுங்கள் மிதியாதீர்கள்

– திரு முருகவே பரமநாதன் அவர்கள் –

தெய்வநிந்தனை வந்தனையின் எதிரி, உடன் இருந்து கொல்லும் நோயைப்போல. தெய்வம் இகழேல் என்பது ஆத்திசூடியின் அறிவுரை மட்டுமல்ல, அறவுரையும்கூட. தேசந் தோறும் தெய்வந்தொழு, ஊரானோர் தேவ குலம். தெய்வந் தெளிமின். தெளிந்தோர்ப் பேணுமின் என்பது இளங்கோவடிகளின் இறுதி வாக்கு. தெய்வம் - கடவுள் - இறை- ஈசன்- பகவன் என்பன அதியுயர்ந்த மெய்ப்பொருளைக் குறிப்பன. சமையம் வேறாகலாம். வணக்கம்- வழிபடுபொருள் ஒன்றுதான். தெய்வம் ஒன்றென்பதை பட்டினத்தார், திருமூலரில் இருந்து, மகாகவிவரை (இதை) நியாயப்படுத்தியுள்ளனர். இன்றைய சைவம் தெய்வங்களைப் புகுத்தி ஆலயங்களையும் விரிவுபடுத்தியுள்ளமை வெளிப்படை. எல்லாக் கொள்கை கோட்பாட்டையும் உள்வாங்கி தனக்கோர் தத்துவக் கோட்பாட்டை உடையது சைவம். இன்று சைவமும் சிவமும் மதிக்கப்படுவது இல்லை. காரணம் ஒரு கலப்படமான வாழ்க்கையைப் பலர் விரும்புவதாற் சைவம் வெறுக்கப்படுவது இன்றைய நிலை. இவ்வீழ்ச்சியை நீக்கி ஒப்பற்ற சைவத்தைக் கட்டிக்காப்பது ஒவ்வொரு சைவசமயிகளின் பிறப்புக்கடமை யாகும். நாவலர் வரவில்லையானாற் சைவம் அழிக்கப்பட்டிருக்கும். இதனைப் புரிந்து கொண்டு நாமெல்லாம் செயற்படுவோம். முதல் நம் சமயத்தையும் தெய்வத்தையும் மதிப்போம். இந்த மதிப்புத்தான் எம்மையும் வாழ வைத்து, சமயத்தையும் வாழவைத்து சமூகம் சிறக்கவும், உயரவும் வடிகாலமைக்கும். இந்த மதிக்கும் பக்குவம் தெய்வம் சமயம் இரண்டுடன் பேதமின்றிக் கலக்க வேண்டும்.

சிவபெருமான் சடாபாரத்திலே- மதி சூடியுள்ளானே! மதித்துத் தொழுங்கள் என் பதற்காகவே இறைவன் மதி சூடியுள்ளான். பித்தா பிறைசூடி, தூவெண்மதிசூடி, இளம் பிறையாளன், முற்றாத பான்மதியம் சூடினானை என்ற பிரயோகங்கள் பிரகாசப்படுத்துகின்றன. இந்தநிலைப்பாட்டை நாம் ஆழமாக மனதில் வைக்க வேண்டும். இறையும் இறையோடிசைந்த வாழ்வும் மனிதத்தின் மூச்சும் உயிருமெனலாம்.

பெரியாரை, ஆசிரியரை, பெற்றாரை, நண்பனை, முதியோரைக் கற்றுவல்லாரை, அரசனை எல்லாம் மதிக்கிறோம். அஃதே போலத் தெய்வமும் தொடர்பான சமயமும் மதிக்கப்பட வேண்டும். மிதிக்கப்படக் கூடாது. மிதித்தால் நமக்கே அழிவு. இது நிட்சயம். நிந்தனை, தெய்வநிந்தனை, தெய்வ தூசனை, சமயத்தை எம் சமயத்தை நாமே இழிவு செய்வதாகும். இது நம் பெற்றோரைப் போற்றாதிருத்தல் போல. தந்தை தாய் பேண், அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். தந்தைசொல் மிக்க மந்திரமில்லை. தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை என்ற மந்திரங்களின்று உதாசீனம் செய்யப்படுகிறது. பிள்ளைகளே பெற்றோரைக் கேலி செய்யும் காலமிது. இந்தப் பெற்றோர் வழிபாடு, தெய்வ வணக்கம். சமய ஈடுபாடு (எச்சமயத்தவராயினும்) நன்மை தருமன்றித் தீமை தராது. "தூய உள்ளங்களோடு நாம்

வாழ்வை மேற்கொண்டால் வாழ்வு ஜொலிக்கும். முதியோரை, வயோதிபரை, நோயாளரை, குழந்தைகளைப் போற்றி மதித்தது நம் சமுதாயம். சமுதாயம் தனி மனிதனல்ல. பலர் ஒன்றுபட்டு இணைந்ததுவே சமுதாயம். நாவலர் பெருந்தகை மட்டுமன்றி, பகவான் சத்தியசாயி பாபாகூட மொழி அபிமானம், சமய அபிமானம், மனிதாபிமானம், சமூக அபிமானம், தேசாபிமானம் ஒவ்வொரு மனிதத்தின் பிறப்புரிமை என வற்புறுத்தியுள்ளனர் அன்றோ.

மதிப்பும் மரியாதையும் பற்றி ஔவைப் பிராட்டி நமக்கு அறிவுறுத்தியுள்ளார். அதை நாம் முதல் உள்வாங்கி வாழ்வோம்.

ஈட்டும் பொருண் முயற்சி எண்ணிறந்த வாயினும் ஊழ்
கூட்டும் படி அன்றிக் கூடாவாம் தேட்டம்
மரியாதை காணும் மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணும் தனம்

நல்வழி 8

மகிதலம்- உலகம், எண்ணிறந்த- அளவில்லாத, தரியாது- நிலைத்திராது, மரியாதை- பிறரைக் கனம் பண்ணல், ஒழுங்கும்- ஒழுக்கமும், பெரியாரைக் கனம் பண்- பெரியாரைத் துணைகொள்- ஔவையின் அமுதமொழி.

சோழமன்னன் கேட்ட நான்கு கோடியை, தமிழ்மூதாட்டி செய்யுளிலே வடித்துத் தந்துள்ளார்.

மதியாதார் முற்றம் மதித்து ஒருகாற் சென்று
மிதியாமை கோடிபெறும்
உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார்
தன்மனையில் உண்ணாமை கோடிபெறும்
கோடி கொடுப்பினும் தன்னுடை நாக்
கோடாமை கோடி பெறும்
கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்முடனே
கூடுவதே கோடியுறும்.

ஔவை தனிப்பாடல்.

முன்னோர் எழுதி வைத்த சிந்தனைகள் காலத்தையும் கடந்து நிலவுவன. இந்த வரிசையிலே ஆழ்வார்களின் அருட் செயல்கள் இன்று நம்மை விழிப்படையச் செய்கின்றன.

மதிகண்டாய் நெஞ்சே மணிவண்ணன் பாதம்
மதிகண்டாய் மற்றவன் பேர்தன்னை - மதிகண்டாய்
பேராழிநின்று பெயர்ந்து கடல்கடைந்த
நீராழி வண்ணன் நிறம்.

இரண்டாம் திருஅந்தாதி 51
பூதத்தாழ்வார்.

மதித்தாய் போய் நான்கின் மதியார் மதியார் போய் வீழ
மதித்தாய் மதிகோள் விடுத்தாய்- மதித்தாய்
மடுக் கிடந்த மாமுதலை கோள்விடுப்பான் ஆழி
விடற் கிரண்டும் போயிரண்டின் வீடு

நான்முகன் திருஅந்தாதி 12
திருமழிசை பிரான்.

அழியானை மதி என்கின்றன இப்பாசுரங்கள். இந்த மதிப்பு மரபு வழி பாரம்பரியமாய் நடைமுறைப் படுத்தப்படும். வள்ளுவப் பெருந்தகையும் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தார்.

மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை குறள் 636

மதிநுட்பம் இயற்கையான நுண்ணறிவு. இயற்கையான நுண்ணறிவைச், செயற்கையான நூலறிவோடு உடையராகிய அமைச்சர்க்கு, மிக்க நுட்பத்தையுடைய சூழ்ச்சிகளாய் முன் நிற்பனயாவையுள. பரீட்சைகளிலே மதிப்பெண் கூடுதலாகப் பெறுவோர் உயர் கல்விக்குத் தகுதி பெறுவர். இந்த மதிப்பு- கணிப்பு தெய்வம். தெய்வம்சார் சமயத்துக்கும் இன்றியமை யாதனவாம். நாம் சமயிகள். யாம் முருக பக்தர்கள்- ஐயப்பதாசர்கள் பாபாவின் அடியவர்கள் இச்சமைய உண்மையை சாதனை பண்ண வேண்டும்.

எச்சமயத்தினர்க்கும் வணக்கத்தலம் வேண்டும். சைவம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முப்பெருமைகளை உடையது.

மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கு
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே.
தாயுமானவர். பராபரக்கண்ணி 156

மூர்த்தி எல்லாம் வாழி எங்கள் மோனகுரு வாழி அருள்
வார்த்தை என்றும் வாழி. மேலது 229

வழிபாடும் ஆலய அமைப்பும் மூலமூர்த்தியும் சைவத்தின் தூண்கள். ஒரு ஞானியினதோ, ஆத்மீகச் செல்வனதோ சரீர அமைப்புடையது ஆலயம். ஆகமம் இதன் சட்ட ஏடு. சிற்றாலயங்கள் மகா சேத்திரங்களாயின. இவைபாடல் பெற்ற தலங்களெனவும் பிரிக்கப்பட்டன.

இத்தலங்களின் ஆரம்பநிலை மரங்கள். அவைதான் தலவிருட்சமாயின. ஆலய வளர்ச்சியை நான்காகப் பிரித்துள்ளனர்.

1. மண்தளிக்காலம்
2. செங்கற் கோயிற்காலம்
3. குடைவரைக் கோயில். குகைக்கோயில்
4. கற்றளிக் காலம். தளி- ஆலயம்.

அப்பர் பெருமான் ஆலய அமைப்பை அவதானித்து சினகரங்களை ஒன்பதாக வகுத்துள்ளார்.

1. பெருங்கோயில்- வானளாவிய மாடங்களைக் கொண்டது.
2. கரக்கோயில்- மரக்கை (மரம்) பரப்பிப் புல்லாலும் ஓலையாலும் வேய்ந்தது.
3. ஞாழற் கோயில்- அடர்ந்து வளர்ந்த பல மரங்கள் சூழ்ந்த கூடாரம் போன்றது.
4. கோகுடிக் கோயில்- ஒருவகை முல்லைப் பந்தரின் கீழ் அமைந்தது இக்கோயில்.
5. இளங்கோயில்- கருப்பக்கிருகம் மட்டும் உள்ளது.
6. மணிக்கோயில்- வர்ணம்பூசி, சுதைவேலை செய்தது.
7. ஆலக்கோயில்- நாற்பக்கமும் நீராற் சூழப்பட்டது.
8. மாடக்கோயில்- யானை ஏறாதபடியமைந்த உயரமான கருவறையை உடையது.
9. தூங்கானை மாடக்கோயில்- தூங்குகின்ற யானையின் பின்புறம் போன்றது. விண் இழி விடானம் உடையது.

பல்லாயிரம் ஆண்டுப் பழைமையான தொல்காப்பியம் நிலங்களை நான்காக வகுத்து தெய்வங்களையும் கூறியுள்ளது. முல்லை- திருமால், குறிஞ்சி- முருகன், மருதம்- இந்திரன், நெய்தல்- வருணன், பாலை நிலம் வர- கொற்றவை தெய்வ மானாள்.

தெய்வம் பலவாய் இருக்க நியாய மில்லை. ஒன்றுதான் என்பது ஒப்ப முடிந்த முடிவு. ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று அலையும் அறிவிலிகாள் அறிவே தெய்வ மென்றான் பாரதி. கடந்த சில தசாப்தங் களாக வெளிநாடுகளில் ஐயப்ப வணக்கம், அநுமார் வணக்கம் புகுந்து சமய நலிவை ஏற்படுத்தியுள்ளமை சைவ நம்பிக்கைகளை வேரோடு கிளறி எறிவதாகும்.

கோயிலமைப்பு எப்படியிருக்க வேண்டு மென ஆகமங்கள் வரைந்து காட்டியுள்ளன. ஒரு ஆலயத்தை ஆரம்பிக்க முன் அடிப் படைத் தத்துவங்கள் தரவுகளாம். நிலத்தைத் தெரிந்தெடுத்து உழுது. வரகு விதைத்து உழுவர். அதுவளர்ந்து பயிரானபின் அது விளைவானதும் வெட்டி நிலத்திற் புதைத்து- சற்றுக்காலத்தின் பின் கோயிற் கட்டுமான வேலை நடைபெறும்.

இன்று வெளிநாடுகளில் இந்தக் கட்டுக்கோப்பை மீறி ஆலயங்கள் உரு வாகின்றன. திருப்பணியே இன்றி ஆலயம் திறக்கப்படும் "இது திறப்பு விழா" எனப்படும். ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் வசிப்போர் வர்த்தக நோக்கில் ஆலயங்களை அடுக்கடுக் காகத் திறந்துள்ளனர். அவை மதுபானச்சாலை யாக, கசாப்புக் கடையாக, பழைய சேர்ச்சாக, நடன மாதர்களின் களியாட்டு நிலையமாக இருந்தவையாய் இருக்கும். ஒட்டுப் பலகை கள் காட்போட்டுகள், கள்ளிப் பெட்டிகளால் ஆலயம் அமைக்கப்பட்டு உருவங்கள் தாபிக் கப்பட்டு எண்ணெய்க் காப்போடு ஆரம்பமாகி கொடித்தம்பம் முளைத்துத் திருவிழாவும் நடைபெறும். ஒரு ஆலயத்தில் பல உற்சவங் கள் நடைபெறும். சாஸ்தாவுக்கும், ஆஞ்சநேய ருக்கும் சந்நிதிகள் அமைத்து விழாவும் ஜாம்ஜாம் என நடக்கும்.

இவை சைவ சமயிகளின் வணக்கத்துக் குரிய தெய்வங்களா? சைவம் இதை ஏற்றுக் கொள்ளுமா? ஆகமவிதிக்கு அமையாத ஆல யங்களை எப்படி அழைப்பது? இந்த சாஸ்தா வணக்கம் (ஐயப்பன்) ஐயனார் வணக்கம் பற்றிய தெளிவான விளக்கத்தை ஆசாரியர் களோ, அறிஞர்களோ தாரமல் இருப்பதாற் சைவப் பெருங்குடி மக்கள் தடுமாறி நிற்கின் றனர். இவ் ஆலயங்களை நாம் அதிகரிக்க வேண்டுமா? உலகிலே சிதம்பரம் ஒன்றுதான் உள்ளது. ஒரு வணிக நோக்கோடு இன்னொரு சிதம்பரம் உருவாவது சமய நாட்டமா? சம் பாத்திய நோக்கமா? எனவே சமயமும், தெய் வமும் ஏழனத்துள்ளாகக் கூடாது அன்றோ?

கலண்டர்களிலே தெய்வப் படங்களை அடித்து இலவசமாய் வழங்குவது தெய்வத்தை ஏளனம் செய்வதாகும். இறைவன் பூரணன். அவனது திருக்கோலங்களை சினிமா போஸ்தரில் வெளியிடுவது- அரை கால் முக்கால் வடிவங்களில் அச்சடிப்பதும் நீதியா. ஈற்றில் இவையெல்லாம் குப்பைத் தொட்டியில் தஞ்சம் புகுவதும் சைவநீதியாகுமா?

ஆலயங்கள் திருவிழாக்கள் வளர்ந்த அளவுக்கு சமயம் வளரவில்லை. சமயிகள் சிறக்கவில்லை. இந்த அநியாயத்தில் இருந்து நம்மினத்தைப் பாதுகாக்க ஆண்டவனே ஒரு வரைத் தரவில்லையானாற் சமயமும் சமயி களும் வீழ்ச்சிபெறும்.

எனவே சைவப் பெருங்குடி மக்களே சிந்தியுங்கள். இந்த அவலத்தில் இருந்தும் தெய்வத்தையும் சமயத்தையும் மீட்டெடுங்கள். சேரவாரும் ஜகத்தீரே? உதவாதினி ஒரு தாமதம்.


உண்மையை நீ அழித்தால் அது உன்னையே அழித்துவிடும்.

(தொடர்ச்சி...

# வட இந்திய தல யாத்திரை

–செ. மோகனதாஸ் சுவாமிகள்–

நானும் கார்த்திகேசனும் அந்த அம்மையாருக்கு தைரியம்ஊட்டி, அவரது கையைப் பிடித்துப் படகில் ஏற்றுவதற்கு முயற்சித்தோம். எம்முடன் வந்த அனைவரும் படகில் ஏறி அமர்ந்துவிட்டார்கள். அன்று கங்கையின் நீரோட்டம் மிகவும் வேகமாக இருந்ததன் காரணமாக படகுமூலம் கங்கையில் பிரயாணம் செய்பவர்கள் மிகவும் குறைவாக இருந்தமையால் கங்கைப் படித்துறையில் படகில் ஏறுமிடத்தில் யாத்திரிகர்கள் மிகக் குறைவாகவே காணப்பட்டனர். நீர் ஓட்டம் காரணமாக நாம் ஏற வேண்டிய படகும் ஒரு



நிலையில் இல்லாது ஆடிக்கொண்டு இருந்தது. ஒருவழியாக அம்மையாரை படகில் ஏற்றும் கைங்கரியத்தில் நாம் ஈடுபட்டபொழுது சுமார் 12 வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் கார்த்திகேயனின் மேலங்கியின் மார்புக்கு பக்கத்தில் உள்ள பொக்கற்றில் வைத்திருந்த ரூபா அறுபதினாயிரத்துக்கு மேலே பெறுமதியான படம்பிடிக்கும் கருவியோடு சேர்ந்த தொலைத் தொடர்புக் கருவியினை கண் இமைக்கும் நேரத்திற்குள் லாவகமாக எடுத்துக் கொண்டு ஓடத் தொடங்கினான். தற்செயலாக இச்செயற்பாட்டைக் கண்ட கார்த்திகேசனும் நானும் திருடன் திருடன் என்று கூவிக்கொண்டு ஒருவழியாக அம்மையாரை படகில் இருந்த குழுவினரிடம் கையளித்துவிட்டு அவனைப் பின் தொடர்ந்தோம்.

துன்பம் இன்றி வாழ விரும்புவோர் பிறருக்குத் துன்பம் இழைக்கமாட்டார்.

நாம் கண்டுவிட்டதையும் பின் தொடர்வதையும் கண்ட அச்சிறுவன் தான் எடுத்ததை படகுத்துறைக்கு இறங்கும் படிக்கட்டில் எறிந்துவிட்டு கூட்டத்திற்குள் ஓடி மறைந்து விட்டான். எறிந்த வேகத்தில் அத் தொலைத்தொடர்புக் கருவியின் மேற்புறமுள்ள கண்ணாடி இரண்டாக வெடித்து விட்டது. ஆனாலும் நாம் அதனைக் கைப்பற்றியது எமது குழுவினருக்கு ஆச்சரியமான விடயமாக இருந்தது. நாம் ஒரு கணநேரம் அசந்திருந்தாலும் அக்கருவியைப் பறிகொடுத்திருப்போம். இச்சம்பவம் இடம்பெற்ற இடத்தில் கூட்டம் குறைவாக இருந்தமை யால்த்தான் எம்மால் இத் திருட்டைத் தடுக்கக் கூடியதாக இருந்தது. ரிஷிகேசத்தில் இடம்பெற்ற இச்சம்பவமானது எக்காலத்திலும் மறக்கமுடியாத சம்பவமாக அமைந்துவிட்டது. நடைபெற்ற இந் நிகழ்வை எமது குழுவினர் அனைவரும் நினைத்தபடியே படகின்மூலம் கங்கையின் மறுகரையை அடைந்து எமது பேருந்தின்மூலம் மாலை 5மணி அளவில் ஹரித்துவார் அடைந்ததோடு எமது அன்றைய பொழுது கழிந்தது.

**காலம்: 15.06.2013 சனிக்கிழமை**

ஒருவழியாக ஹரித்துவாரில் எமது வழிபாடுகளை பூர்த்திசெய்து எமது மதிய போசனத்தையும் முடித்துக்கொண்டு பிற்பகல் 2.30 மணியளவில் அலகாபாத் செல்லும் புகையிரதத்தின்மூலம் எமது குழுவினர் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7மணி அளவில் அலகாபாத்தை சென்றடைந்தோம். புகையிரதத்தில் ஏறி இறங்குவதென்பது ஒரு அசாதாரண விடயமாகவே எமது குழுவினருக்கு இருந்தது. காரணம் என்னவெனில் எம்மோடு வந்தவர்களில் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் தாங்கள் கொண்டு வந்த பொருட்களோடு மேலதிகமாக போகும் இடங்களில் வாங்கிய பொருட்களால் அவர்களது பிரயாணப் பைகள் நிரம்பி வழிந்தன. அதன் காரணமாக அப் பைகளை புகையிரதத்தில் ஏற்றி இறக்குவதற்கும் அதனை எடுத்துக்கொண்டு புகையிரத நிலையத்திற்கு வெளியே கொண்டு வருவதற்கும் நிலையத்தில் உள்ள போட்டர்களோடு (சுமை தூக்கும் கூலிகள்) பேரம் பேசித்தான் வெளியே கொண்டுவர வேண்டி இருந்தது. நாமே தூக்கிக்கொண்டு வருவதானால் அங்கே உள்ள புகையிரத நிலையங்கள் மிகப்பெரிது. மேலே பொருட்களோடு ஏறி, இறங்குவதென்பது மிகவும் சிரமம். இதனைக் கருத்தில் கொண்டே எமது முகவர், ஸ்ரீரெங்கநாதன் அளவான பொருட்களோடு வருமாறு வலியுறுத்துவார். அதனை நாம் எங்கே கடைப்பிடித்தோம்? அத்துடன் வழியில் காணப்படும் பொருட்களை வாங்க வேண்டும் என்ற பேரவா இதனடிப்படையில் கூலியாட்களோடு பேரம்பேசி அச்செயற்பாடுகளை முன்னின்று நடத்தி எல்லோரையும், எல்லோரது உடமைகளையும் பாதுகாப்பது போன்ற காரியங்களில் முன்பும் பல தடவை வட இந்திய தல யாத்திரையில் புகைவண்டிப் பிரயாணத்தில் அடைந்த அநுபவம் எனக்குக் கை கொடுத்தது.

**காலம்: 16.06.2013 ஞாயிற்றுக்கிழமை**

காலை 7 மணி அளவில் நாம் அனைவரும் அலகாபாத்தை அடைந்து எமக்கென ஒழுங்கு செய்யப்பட்ட சத்திரத்தை அடைந்தோம். எமது பிரயாண அலுப்பின் காரணமாக ஏற்பட்ட உடல் அசதியினைப் போக்கும் வண்ணம் பகல் 10மணிவரை சத்திரத்தில் சற்று இளைப்பாறி காலை உணவை முடித்துக்கொண்டு எமக்கென ஏற்பாடு செய்யப்பட்ட

பேருந்தில் திரிவேணி சங்கமம் நோக்கி புறப்பட்டோம். இங்கே முப்பெரும் நதிகளான கங்கை, ஜமுனை, எதிர் எதிரே வந்து கலப்பதாலும், சரஸ்வதி நிலத்தோடு ஓடிச் சேர்வதாலும் திரிவேணி சங்கமம் என்று எல்லோராலும் அழைக்கப்படுகின்றது. கங்கை நீர் வெண்மையாகவும் ஜமுனை நீர் கருநீல நிறத்திலும் எதிரெதிரே வந்து சந்திப்பதை நாம் நேரில் காணலாம். மூன்று நதிகளும் ஒன்று சேரும் திரிவேணி சங்கமத்தில் நீராடுவது என்பது எமது பூர்வ ஜென்ம புண்ணியம் என்றே சொல்ல வேண்டும். அதுவும் மூன்று நதிகளும் சங்கமிக்கும் இடத்தில் பிதிர்க்கடன் செய்யும் நிகழ்வு பிரசித்தம் பெற்றது.




அந்தவகையில் மிதந்து செல்லும் சிறிய படகுகள்மூலம் கரையிலிருந்து பிதிர்க்கடன் செய்யும் மேடை அமைந்த பகுதியினை நோக்கி நாம் சென்று பிதிர்க்கடன்களை நிறைவேற்றினோம். நாம் சென்ற வேளை கங்கையில் நீர் ஓடும் வேகம் குறைவாக இருந்தமையால் கழுத்தளவு நீரில் இறங்கி நீராடினோம். கரையில் இருந்து பிதிர்க்கடன்களை செயலாற்றும் பூசகர்கள் எமது படகில் வந்து பிதிர்க்கடன்கள் செய்பவர்களது கருமத்தை நிறைவேற்றினார்கள். அவர்களது செயற்பாட்டிற்கு எமது குழுவினர் நிதி உதவி வழங்கி திரிவேணி சங்கமத்தில் செய்யவேண்டிய நிகழ்வை முடித்து கரையிலுள்ள கோட்டையில் நிலத்துக்கு அடியில் உள்ள பாதாள காளிதேவியைத் தரிசிக்கும் எண்ணத்துடன் சென்றோம். ஆனால் அக்கோட்டையின் நிர்வாகம் இராணுவவசம் இருந்தபடியால் எம்மால் உட்சென்று வழிபாடு இயற்ற இயலாமல் போய்விட்டது. ஆனாலும் கடந்த காலங்களின்போது இடம்பெற்ற

யாத்திரையின்போது இவ்வாலயத்திற்குச் சென்று வழிபாடு இயற்றியது பற்றி எமது குழுவினருக்கு கூறியபடி அருகில் அமைந்துள்ள சயன ஆஞ்சநேயர் ஆலயம் நாடிச் சென்றோம். நிலமட்டத்திற்குக் கீழே சயன நிலையில் உள்ள பிரமாண்ட அமைப்போடு விளங்கும் ஆஞ்சநேயரை தரிசனம் செய்தோம். தரிசனம் முடிந்தபின் அங்கே கொடுக்கப்படும் பிரசாதம் தேவாமிர்தம் என்றுதான் சொல்லவேண்டும். அத்தனை ருசி. அதனை அநுபவித்தபடி அதன் பக்கத்தில் சங்கராச்சாரியரால் அமைக்கப்பட்ட 4மாடி கொண்ட வழிபாட்டுத் தலத்தை அடைந்தோம். இலங்கையிலிருந்து வந்துள்ளோம் என்றதோடு குறிப்பாக யாழ்ப்பாணம் என்று சொன்னவுடன் அங்கே உள்ளவர்கள் எம்மை இன்முகத்துடன் அழைத்துச் சென்று ஒவ்வொரு இடமாக எமக்குக் காண்பித்து எமது வழிபாட்டிற்கு ஆதரவு நல்கினர். மாலை 3மணிஅளவில் நாம் அனைவரும் சத்திரம் திரும்பி பகல் உணவை முடித்து திரிவேணி சங்கமத்தில் நாம் அடைந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டோம். நான் ஏற்கனவே அங்கே போய்வந்தபடியால் ஒவ்வொருவரும் கூறும் கருத்தை செவிமடுத்தபடி இருந்தேன். ஒருவழியாக இரவு உணவை சத்திரத்தில் முடித்து 9 மணி அளவில் பேருந்து மூலம் கயா நோக்கி புறப்பட்டோம்.

(தொடரும்...

## வாழ்த்துகின்றோம்

மக்கள் வங்கிக்கும் அதனூடாக மக்களுக்கும் மகத்தான சேவை புரிந்து தனது 60ஆவது வயதில் ஓய்வுநிலையை அடைந்திருக்கும் மக்கள் வங்கி யாழ் பிராந்திய முகாமையாளர் திரு சி. பத்மநாதன் அவர்களை சந்நிதியான் துணைகொண்டு வாழ்த்து கின்றோம். போட்டிமிகு வேலைச் சூழலில் தனது பிராந்தியத்தை வழிநடத்திச் செல்லும் பாரிய வேலைப்பழுவின் மத்தியிலும் எமது சந்நிதியான் ஆச்சிரமத் தோடு நல்லுறவைப் பேணி வந்தார். எமது செயற்பாடுகளில் தன்னையும் ஈடுபடுத்தி தான் சார்ந்தவர்களையும் ஈடுபடுத்தினார்.



எமது ஞானச்சுடர் சஞ்சிகை யினை தனது வங்கிசார் உத்தி யோகத்தர்களுக்கும் கிடைக்க வழிசமைத்து பயனடையச் செய்து எமது சமய வளர்ச்சிக்கும் துணை புரிந்தார். அதுமட்டுமன்றி கிழக்கு மாகாணத்தில் எமது ஞானச்சுடர் சஞ்சிகையினை அறிமுகப்படுத்தியதும் இவரே. மட்டக் களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் இன்றும் பலர் ஞானச்சுடர் சஞ்சிகையினைத் தவறாமல் பெற்றுப் பயனடைந்து வருகின்றனர். இதற்குக் காரணகர்த்தா பத்மநாதன் அவர்களே. தனது ஓய்வுக் காலத்தில் மனைவி மக்களோடு மகிழ்ச்சியாகவும், நிம்மதியாகவும் வாழ சந்நிதியானை வணங்கி வாழ்த்துகின்றோம்.

**இல்லை என்கிற வீட்டில் பல்லியும் சேராது.**

# ஐயப்ப சுவாமி

– திரு அ. சுப்பிரமணியம் அவர்கள் –

கேரள மாநிலத்தில் திருவிதாங்கூர் நகரில் பந்தளநாடு என்பதை இராஜசேகரப் பாண்டியன் ஆண்டு வந்தான். ஆயினும் தனக்குப் பிறகு நாட்டை ஆட்சி செய்ய வாரிசு இன்மையால் அரசியாருடன் சிவபெருமானை வழிபட்டு வந்தான்.

இத்தருணத்தில் அரம்பன் எனும் அரக்கனது மகனாகிய மகிஷாசுரன் பிரமதேவரிடம் பெற்ற வரவலிமையால் மனிதரையும் தேவரையும் துன்புறுத்தினான். துன்பம் பொறுக்கமுடியாத தேவர்கள் மும்மூர்த்திகளாய அயன், அரி, அரன் ஆகியோரிடம் முறையிட்டனர். அவர்கள் தத்தமது சக்தியர் மூவரையும் ஒன்று சேர்த்து சண்டிகாதேவியெனப் பெயருமிட்டு மகிஷாசுரனைக் கொல்லும்படி ஏவ அவளும் அசுரனை வதம் செய்து மீண்டாள். விண்ணவரும் மண்ணவரும் துன்பம் நீங்கி இன்பம் எய்தினர். மகிஷாசுரனின் சிறிய தந்தையான கரம்பன் மிகவும் கொடியவன். அவனுடைய மகள் மகிஷி அவள் அண்ணன் கொல்லப்பட்டதையறிந்து வருந்திக் கோபங்கொண்டு தேவர்களை அழிக்கும் நோக்கில் கடுந் தவவலிமையால் பிரமனிடம், சிவன், விஷ்ணு அம்சம் கொண்டவனாலன்றி வேறொருவராலும் கொல்லமுடியாத வரம் பெற்றுத் தேவர்களைத் துன்புறுத்தி வரலானாள்.



இத்தருணத்தில் துர்வாசமுனிவரது சாபத்தால் ஏற்பட்ட நோய் நீங்க வேண்டித் தேவர்கள் அசுரர்களது துணையுடன் பாற்கடலைக் கடைந்து அமுது பெற்றபோது அசுரரால் பறிக்கப்பட மோகினி வடிவு கொண்ட விஷ்ணு; அசுரரை மயக்கி அமுதைத் தேவரிடம் கொடுத்து நோய் நீக்கினார்.

சிவன் மோகினியைக் கலந்து ஆண்குழந்தை ஒன்றைப் பெற்றனர். அதன் கழுத்தில் மணிமாலையொன்று சிவனால் அணியப்பட்டுத் தமது பக்தனான பாண்டியனிடம் சேரும்பொருட்டுப் பம்பை நதிக்கரையில் விட்டுச் சென்றார். அங்கு வேட்டையாட வந்த மன்னன் மணிமாலையுடன் குழந்தையைக் கண்டு அதிசயித்து நிற்க அவ்விடம் வந்த முனிவரொருவர் குழந்தைக்கு மணிகண்டன் எனப் பெயர்சூட்டி இவன்மூலம் 12 வயதில் பல அற்புதங்கள் நிகழும். இவன் மானிடரின் தெய்வமாகிப் பூவுலகில் விளங்குவான் எனக்கூறி மறைந்தார். குழந்தையை எடுத்துவந்து ராணியிடம் கொடுத்துச் சிவனது திருவருட்

உடல் அமைதி பெற மனதை அமைதியாக வைத்துக்கொள்.

கருணையை எண்ணி மகிழ்ச்சி கொண்டனர். நாட்டு மக்களும் பேரானந்தமடைந்து ஆடிப் பாடினர்.

ஆனால் மன்னனுக்குப்பின் மகுடம் சூடலாம் என்றெண்ணியிருந்த அரசவைத் திவான் மணிகண்டனை அழிக்க முனைந் தான். இதன்போது தெய்வக் குழந்தையாகிய குழந்தையிதனைப் பொருட்படுத்தாது, தக்க குருவை நாடிச் சகலகலா வல்லவனாகிக் குரு தட்சணை தருவதற்காகக் குருவிடம் சென்றான். குருவின் வேண்டுதலின்படி அவரது பிறவியிலே குருடும் ஊமையு மாயிருந்த மகள் பார்க்கவும், பேசவும் செய்த தோடு இவ்வித ஆற்றல் பற்றி எவரிடமும் வெளியிடக்கூடாதென வேண்டிக் குருவைப் பணிந்து ஆசீர்வாதம் பெற்று அரண்மனைக் குத் திரும்பினான். இதன்போது அரசிக்கு ஆண்குழந்தை பிறந்திருந்தது.

சகலகலா வல்லவனாக மகன் வந்தமை கண்ட மன்னவன் மகிழ்ந்து மணி கண்டனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டத் தீர மானித்தான். இது கண்ட திவான் மணிகண்ட னுக்கு நஞ்சு பருக்கினான். தெய்வம் தந்த குழந்தை

**“பெயக்கண்டு நஞ்சுண்டமைவர் நயத்தக்க**
**நாகரீகம் வேண்டுபவர்” குறள் எண் 580**

எனும் பொய்யாமொழிப்படி நஞ்சு அமுதமாகிப் போனதால் அவனை ஒழிக்க அரசியுடன் சேர்ந்து சூழ்ச்சி செய்தான். தனக் குப் பிறந்த மகனுக்கு அரசுரிமை பெற்றுக் கொள்ளலாமென்ற நப்பாசையால் திவானுடன் சேர்ந்து நோயாளியாக நடித்து வைத்தியர் மூலம் புலிப்பால் கொடுத்தால் மட்டுமே நோய் குணமாகுமெனப் பொய் கூற வைத்து மணி கண்டனைக் காட்டுக்கனுப்பி அவனை அழிக்க முயன்றனர். ஆனால் இவையெல்லாமறிந்த தெய்வீகக் குழந்தை தந்தையிடம் தாமே முன் வந்து அனுமதி பெற்றுப் பூதகணங்கள் துணைதரக் காட்டினுள் நுழைந்தான்.

இந்நிலையில் அமுதுண்டு நோய் நீங்கப்பெற்ற தேவர்களின் இன்ப வாழ்வு கண்டு பொறுக்கமுடியாத மகிஷியாய அரக்கி அவர்களைத் துன்புறுத்துவதை உள்ளுணர் விலுணர்ந்த மணிகண்டன் வானுலகேகி மகிஷியைக் கொன்று பூமியில் எறிந்து பிறப்பின் ரகசியத்தை வெளிப்படுத்திப் புலிப் பால் எடுக்கப் புறப்பட்டவனுக்கு உதவவந்த தேவர்கள் பெண் புலிகளாகி ஆண்புலியாகிய இந்திரன்மீதமர்ந்து மணிகண்டன் நாட்டினுட் புகுந்தான். இதுகண்ட அரசன் ஆச்சரியமுற்று அன்று முனிவர் கூறிய அதிசயம் இன்று நிகழ்வது கண்டு இன்புறலானான். மனை புகுந்த மணிகண்டன் தந்தையே புலிகளைக் கொண்டுவந்துள்ளேன். பாலைக் கறந்து தாயாரது நோயைத் தீருங்கள் என்றான். கேட்ட தந்தையார் ஐயனே! நடந்த சதியைக் கண்டுகொண்டேன். புலிகளைக் காட்டுக்கனுப்பி விடுங்கள் என்னை மன்னியுங்கள் என்று பணியப் புன்னகை பூத்த மணிகண்டன் நான் பூமியில் பிறந்த கடமை முடிந்துவிட்டது. எனவே வானுலகேகிறேன் என்றதும், ஐயனே! தங்கள் நினைவாக ஒரு கோயில் கட்டிவழிபட அனுமதித்து இடமும் காட்டவேண்டுமென்று வேண்டினான். உடனே மணிகண்டன் வில்லில் அம்பு தொடுத்து இதுபோய் விழுமிடத்தில் கோயில் கட்டு என்றான். சபரிமலைக் காட்டில் கோயில் எழுப்பியபோது மணிகண்டன் தனக்கு 18 படிகொண்ட கிழக்கு நோக்கிய கோவிலும் பக்கத்தில் மாளிகைப்புறத்தம்மனுக்கும் கோயில் கட்டுமாறு கூறி வானுலகு அடைந் தான். அவனது உத்தரவுப்படி பாண்டியன் கோவில் அமைத்து மக்களை வழிபட வைத்

**அறிவுக்கு வேலி மௌனம்.**

தான். ஜாதிமத பேதமின்றி மாலையணிந்து ஆண்டுதோறும் மகர சங்கிராந்திக்கு முன் 41நாள் விரதமிருந்து ஐயப்ப தரிசனம் செய் கின்றனர். பூசைக்கு நெய் தேங்காய் அடங் கிய ஒரு முடியும் உணவுப் பொருளடங்கிய முடியுமாக இருமுடி கட்டி அவன் நாமம் பாடிக் கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை யாக நடந்து வருவர்.

இதனிடையே வாபர் என்னும் பெய ருடைய இஸ்லாமியர் கடற்கொள்ளையிலீடு பட்டு ஏழைகட்கு உதவி வந்தார். கொள்ளைப் பணத்திலிலொருசதம் கூடத் தனக்கெடுப் பதில்லை. ஆயினும் சட்டப்படி குற்றவாளி யென அவனைப் பிடிக்க ஐயப்பனிடம் உதவி கோரினர். வாபரைச் சந்திக்கச் சென்ற ஐயப் பனைக் கண்டவன் குழந்தை போரிட வருகிற தெனச் சிரித்தான். நடந்த போரில் தோற்ற வாபரை நண்பனாக்கினார். இறுதிவரை வாபர் துணை நின்றதால் என்னைத் தரிசிக்க வருப வர்கள் உன்னைத் தரிசித்த பிறகே என்னைத் தரிசிக்க முடியும் என்றதால் ஐயப்ப தரிசனத் துக்கு வரும் பக்தர்கள் முதலில் வாபரின் பள்ளி வாசலுக்கு சென்று வழிபட்டபின்பே ஐயப்ப சாமியிடம் வழிபடச் செல்கிறார்கள். இந்நிலையில் ஐயப்பசாமியைத் தரிசனம் செய்ய விரும்பிய பாண்டிய மன்னன் கல்லும் முள்ளும் நிறைந்த காட்டு வழி தெரியாது தயங்கியபோது "கலங்காதீர் கருடன் வழி காட்டுவான்" என்று ஐயப்பசாமி அருள் வாக்கின்படி அரசன் வரும் போதெல்லாம் கருடன் வழிகாட்டுவான். அவ்வாறே சாமிக் குரிய ஆபரணப்பெட்டி வரும்போதும் கருடன் பாதுகாப்பளிப்பான். நாம் வாழ்வில் முன்னேற நம்மை நிழல்போல் தொடர்ந்து காத்தருளும் ஐயப்பசாமி கோவில் கொண்டிருக்கும் சபரி மலையின் 18 படிகளையும் ஒருமுறையேனும் ஏறிக்கடந்து சரணம் ஐயப்பா சரணம் என்று பாடி வழிபட்டு உய்வோமாக. சரணம் ஐயப்பா சரணம்.

சபரிமலை ஐயப்பசாமி கோவிலின் அமைப்பு முறையிலேயே புலம்பெயர் நாடு களிலும் கோவில் அமைத்து வழிபட்டு வரு கிறார்கள். கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர் ஐயப்பசாமிக்கு ஆலயம் அமைத்து இருமுடி கட்டி நடந்து வழிபாடு செய்து வருவ தாகவும் அங்கெல்லாம் அந்நாட்டு அரசாங்கம் தாராள நில நிதி உதவிகள் செய்வதையு மறிந்து நாம் மகிழ்ச்சியடையாது இருக்க முடியாது.

சபரிமலை யாத்திரை செல்லமுடியாத முதியவர்கட்காகத் தமிழகத்தின் பல இடங் களிலும் ஐயப்பசாமிக்குச் சபரிமலையின் ஆலய அமைப்புமுறை சிறிதும் குறையாது கோவில் அமைத்து அன்னதானம் வழங்கி வருவது கண்கூடு. எமது நாட்டிலும் கோண்டா விலிலும் கட்டுவன் பிரதேசத்திலுள்ள கரண்டக்குளம் ஸ்ரீ ஐயப்பசாமி கோவிலிலும் பல ஐயப்பசாமி பக்தர் இல்லங்களிலும் வழி பாடும் அன்னதானமும், திருவிழாவும், மகேசுர பூசையும் நிகழ்வதைக் காணலாம். சபரிமலை யாத்திரை செய்யமுடியாதவர் இக்கோவில் களுக்காகவேனும் சென்று தரிசனம் செய்வது உத்தமோத்தமம் ஆகும். தத்துவார்த்தமாக அமைக்கப்பட்டுள்ள 18 படிகளையும் தாண் டும்போது அந்த அந்தப் படிகளுக்குரிய பாட்டினை இசைப்பர்.

ஸ்வாமியே சரணம் ஐயப்பா.

**சேமிப்பு இல்லாத குடும்பம் கூரை இல்லாத வீட்டுக்குச் சமம்.**

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

(தொடர்ச்சி...


## 11. தயாபர ரமணன்

"மாரிஸ் பிரிட்மன் மகரிஷியின் வேதவாக்கு (Maharshi's Gospel) என்ற புத்தகத்தை தொகுப்பதற்குக் காரண கர்த்தாவாக இருந்தவர். நாற்பதுகளில் (1940- 50) ஆச்ரமத்திற்கு தவறாமல் வந்து கொண்டிருந்தார். அதில் வரும் கேள்விகள் அனேகமாக அவர் கேட்டவைதான்.

இத்தனை காலம் நான் அரங்கில் நின்றேன் நின் மகிழ்வுக்காக,
நின் நாடக ஒளியில் என் கண்கள் இருண்டன,
நின் நகைப்பின் இடித்வனியில் என் செவிகள் துளைபட்டன,
வறண்ட துன்ப ஜ்வாலையில் என்னுள்ளம் எரிந்து சாம்பலாயிற்று.

என் ஐயனே, உனை மகிழ்விக்க நான் என்னையே மூடனாக்கிக் கொண்டேன்,
இன்றோ இந்நாடகத்தின் வேதனையை அகற்ற வழியறியேன்,
என் அண்ணலே அரங்கினின் றென்னை இழுத்திறக்கி விடு,
உள் நுழையும் வழியும், வெளியேறும் மார்க்கமும் மறந்து நிற்கிறேனே!

பகவான் இவற்றை மகிழ்வுடன் படித்துவிட்டு, "சில நூற்றாண்டுகளுக்கு முன் அப்பய்ய தீஷிதரும் தன் சமஸ்கிருத நூல்களில் ஒன்றில் இக்கருத்தையே சொல்லியிருக்கிறார். அவை இன்னும் ஓலைச் சுவடிகளிலேயே உள்ளன. "அரசனின் முன் ஆடும் நர்த்தகி, என்னதான் கால் வலித்தாலும், எப்படி அரசன் ஆணையின்றித் தன் நாட்டியத்தை நிறுத்த முடியாதோ, அதேபோல், நான் மாறி மாறி ஜனனமும் மரணமும் எடுத்தெடுத்திளைத்தேன். என் ஐயனே நின்னருள் பார்வை ஒன்று போதுமே, அந்த என் பிறப்பிறப்பென்ற பேயாட்டத்தை நிறுத்த. அந்த அமுதப் பார்வை எனக்கு அரிய நிதியாகும்.



மாரிஸ் பிரிட்மன் தன் பாடலுக்கு பகவான் பதில் கூறுவதுபோல் மற்றொரு பாட்டெழுதினார்.

"என் குழந்தாய் நம் நாடகத்திற்கதுவே யதன் இறுதி
அதை நாடகமென் றறிந்த வுடன் நிகழுமதன் முடிவு.
துன்பங்களுனது; மேடையில் நீ என்றுமில்லை,
நினைப் பிரிந்து நானில்லை தாங்குபவன் நான்,
உன் மகிழ்வில் ஆனந்தமும் நான்; உன் கண்ணீரின் உப்பும் நானே.
உன் பொருட்டே நானெனை மூடனாக்கிக் கொண்டேன்,
ரவியாக, நிலமாக, அதனுள் உன் உலகாக நான் நடிக்கின்றேன்.
நானே உன் உடல் உன் மனம், அவற்றி னாசைகள் இச்சைகளனைத்தும் நானே,
எவையெல்லாம் நீ இல்லையென்றெண் ணுகிறாயோ, அதெல்லாம் நான்;

சொர்க்கமும் நரகமும் திருமணத்தில் தீர்மானிக்கப்படுகிறது.

இது நானென்று நீ எண்ணும்போது, நானுமது வாகிறேன்.

நாடக மென்றதனை நீ காணும்போது அந்த நாடகம் முடிகிறது,

இவ்வுலகினை நீ "நான்" என்றெண்ணும்போது அதன் இருப்பு மறைகிறது".

இந்த மேற்கத்திய அடியாரிடம் பகவானுக்குத்தான் எவ்வளவு பரிவு! ஆனால் கட்டுப்பாடு என்று வந்தால் பிரிட்மனுக்கு தனிச்சலுகை ஒன்றும் பகவான் காண்பிப்பதில்லை என்பதற்கு இதோ ஒரு உதாரணம்.

ஒருநாள் பிரிட்மன் ஒரு பெரிய தம்ளரில் பழரசத்துடன் ஹாலுக்கு வந்து, அதைப் பகவானிடம் கொடுத்தார். "இது போதாதே" என்றது பகவான். தனக்குத்தான் இன்னும் அதிகமாகக் கேட்கிறதென்றெண்ணி அவர் "இதைக் குடியுங்கள். நான் மேலும் கொண்டு வருகிறேன்" என்றார். "நல்லது, ஹாலில் எல்லோருக்கும் இதைப் போலவே பெரிய தம்ளர்களில் பழச்சாறு தரமுடியுமா? என்றது பகவான். "அவர்களுக்கு அவசியமில்லை" என்றார் அவர். "எனக்கும் தேவையில்லை" என்றது பகவான். பிரிட்மன் விடவில்லை. "ஆனால், நீங்கள் உடல்நலம் குன்றி வெளிறி இருக்கிறீர்கள்! என்றார். அதற்குப் பகவான் "நீங்கள்தான் என்னைவிட வெளுப்பு. அதனால் நீங்களே அதைக் குடியுங்கள்" என்றதும் எல்லோரும் சிரித்துவிட்டனர். குரு வாக்ஜையைத் தலைமேல் ஏற்று, ஹாலின் ஒரு மூலைக்குச் சென்று, முழு தம்ளர் சாற்றையும் அவர் தானே குடித்தார்.

* * * * *

G.L.N. என்று நம் வாசகர்களிடையே அறிமுகமான G.L. நரசிம்மராவ், பகவானிடமே தமிழ் கற்று, உள்ளது நாற்பதின் விளக்கத்தையும் அதனிடமே கேட்ட பாக்கியசாலி. அவர் எனக்கு விவரித்த நிகழ்ச்சிகளில் இரண்டு பின்வருவன.

ஒருநாள் மாலை சுமார் நான்கு மணிக்கு நான் பகவான் சந்நிதியில் உட்கார்ந்திருந் தேன். ஹால் அனேகமாகக் காலியாக இருந்தது. பகவான் தானாகவே அருணாசல பதிகத்தின் கடைசிப் பாடலை விளக்க ஆரம்பித்தது.# "இந்த மலையை 'பரம்' என்று கருதினேன். நான் கெட்டேன். (நானென்ற அகந்தை அழிந்தது) என்னைப் போல் 'அவனா'ல் கெட்டவர்கள் எத்தனை பேர்களோ! (அந்த 'அழிவே' வாழ்வு, விடுதலை, முக்தி) பகவான் வாக்கிலேயே இதைக் கேட்ட எனக்கு மெய் சிலிர்த்தது. பரவசமானேன். என்னுள் ஒரு எண்ணம் தோன்றி வெளிப்பட்டது. "பகவானே, 'அருணாசலம்' என்ற நாமம் பிள்ளைப் பருவத்திலேயே தங்களுக்குள் தோன்றி, தங்களை இங்கு இழுத்து வந்தது. ஆனால் என்னையும் என் குடும்பத்தையும் பாருங்கள். வெகு தூரத்திய கிராமத்திலிருந்த நாங்கள், உங்களை ஒருக்காலும் நினைக்கவில்லை. ஆயினும் எல்லையற்ற கருணையினால் எங்களை

---

#கிரியிது பரமாக் கருதிய வென்போற்
கெட்டவர் எத்தனை கொல்லோ!
விரிதுய ராலிப் பிழைப்பினில் விழைவு
விட்டுடல் விட்டிட விரகு
கருதியே திரிவீர் கருத்தினுள் ஒருகால்
கருதிடக் கொலாமலே கொல்லும்
அருமருந்து ஒன்றுண்டு அவனியில் அதுதான்
அருணமா திரம்என அறிவீர்.

---

**சோற்றுக்கும் கருப்புண்டு சொல்லுக்கும் பழுதுண்டு.**

வலியப் பிடித்திழுத்து, தங்கள் பாத கமலங்களில் நிரந்தரமாகப் பிணைத்துக் கொண்டீர்கள். இது பெரிய அதிசயமல்லவா?" என்றேன். இதைக்கேட்ட பகவான் உவப்புடன் அருள் புன்னகை பூத்தது.

புத்தகங்களின் கடைசி ப்ரூப் திருத்தத்துக்கு கட்டுகள் வந்தால், அவற்றில் ஒரு பிரதியையே பகவான் அட்டைபோட்டு, சுழலும் அலமாரியில் வைத்துக்கொள்வது வழக்கம். ஜாக்கிரதையாக திருப்பித் தரவேண்டுமென்ற கண்டிப்பான நிபந்தனையுடன் பகவான் அவற்றை அடியார்களுக்கு வாசிக்க கொடுப்பதுண்டு. ஒரு சமயம் சில சின்ன அட்டையிட்ட புதிய தெலுங்கு புத்தகங்களை என் மனைவிக்கு பகவான் வாசிப்பதற்காகக் கொடுத்தார். அவளுக்கு அவற்றைப் படிக்க சில நாட்களாயின. வாசித்தபின் அவற்றை ஆச்ரம சமையலறையில் வைத்தாள். அன்று ஹாலுக்கு வந்தவுடன் புத்தகங்களைக் கேட்டது பகவான். சமையலறையில் தான் வைத்திருப்பதாக உண்மையைக் கூறினாள் என் மனைவி. பகவான் சற்று எரிச்சலடைந்தது போல், உரத்த குரலில், "ஓகோ, சமையலறையில் வைத்திருக்கிறாயோ? ஏன்? இங்கே வைத்து விட்டு வாசிக்க வேண்டிய போதெல்லாம் எடுத்துப் போவதற்கென்ன! அவற்றில் ஏதாவது பார்க்க வேண்டியிருந்தால் நான் என்ன செய்வது? அதை மீண்டும் வாங்குவதற்குத் தேவையான பணம் என்னிடம் இருக்கிறதா?" என்று கேட்டது. மிக இளைய வயதினளான என் மனைவி உடனே சமையலறைக்கு ஓடிச் சென்று புத்தகங்களை எடுத்து வந்து, கண்ணீர் சிந்த, அவற்றை பகவான் முன்னிருந்த ஸ்டூலில் வைத்தாள். ஆனால் பகவானோ மௌனமாகவே இருந்தது. என் மனைவி உண்மையிலே மிகவும் அதிர்ந்து போயிருந்தாள். பிற்பகலில் ஆபீஸ் ஊழியர் ஒருவர், புதிதாக அச்சிடப்பட்ட புத்தகங்களை என் மனைவியிடம் கொடுத்து, "பகவான் இவற்றை உனக்களிக்கச் சொல்லியது" என்றார். இம்முறை அவள் சிந்தியது பேரானந்தக் கண்ணீர்! பகவானுக்குத்தான் தன்மீது எத்தனை கரிசனம்! ஒழுங்கும் நேர்மையும் நிலைநாட்டுவதற்காக கடுமையாகக் காணப்பட்ட அதே பகவான்தான், குழந்தைகளின் தேவையறிந்து கனிந்துருகும், தாயினும் மிக தயாபரனுமாவர்!

* * *


பழைய ஹாலின் கூரையில் அணில்கள் கூடு கட்டும். ஒரு சமயம். அப்போதே பிறந்த சில அணில் குஞ்சுகள், பகவானின் சோபா மேல் விழுந்தன. அவற்றின் கண்கள் கூடத் திறக்கவில்லை. ஒரு அங்குல நீளந் தானிருக்கும். கன்றிச் சிவந்த, மிகமிக மிருதுவான தோல்; தொட்டால் மெத்தென்றிருந்தன. தாய் அணில் அவற்றை கண்டுகொள்ளவே இல்லை. இப்போதென்ன செய்வது? ஒவ்வொரு சின்னஞ்சிறு குஞ்சும் பகவானின் உள்ளங்கையில் அபயகரத்தில், இருந்தன! (புண்ணிய ஜீவன்கள்!) பகவானின் முகக் கமலம் அன்பினால் கசிந்து, விகசித்து ஒளிர்ந்தது. சுற்றியிருந்தவர்களின் முகங்களில் கேள்விக்குறி தோன்றினாலும், பகவான் கவனமாக மகிழ்வுடன் அவற்றிற்கு "மெத்"தென்று படுக்கை தயாரித்தது. பின்னர் பஞ்சை ஊசி போல் திரித்து, பாலில் நனைத்து அவைகளின் சின்னஞ்சிறு வாய்களில் பிழிந்து விட்டது. அவையும் உறிஞ்சிக் கொண்டன. பகவான் அலுப்பு சலிப்பின்றி இப்படியே பாலூட்டி வந்தது. அவை வளர்ந்து ஓடியாடி விளையாடும்வரை அந்த அருட்கடல் மிகக் கருத்தாக பேரன்புடன் அக்குஞ்சுகளை காத்து வளர்த்தது. வளர்ந்த பின்னும் அவை எங்கும் போக மறுத்து, இந்தத் தாயினும் மிக தயாபரனையே சுற்றிச் சுற்றி விளையாடின.

(தொடரும்...


# படங்கள் தரும் பதிவுகள்



வாராந்த நிகழ்வின்போது...



விருப்பத்தினால் ஆகாதது வீம்பினால் ஆகாது.




சிறப்புப்பிரதி பெறுவோர்...




வாயும் கையும் சுத்தமாக இருந்தால் உலகம் முழுவதும் செல்லலாம்.



சிறப்புப்பிரதி பெற்றவர்களிற் சிலர்




மணவாழ்க்கை என்பது முற்றுகையிடப்பட்ட ஒரு கோட்டை மாதிரி.



சிறப்புப்பிரதி பெற்றவர்களிற் சிலர்.....

ஆச்சிரம சமூகப் பணிகளில் ஒன்று.....



# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

தொடர்ச்சி

| | | | |
|---|---|---|---|
| சு. சிவபாலன் | கந்தசாமி கோயிலடி | திருகோணமலை | 1000. 00 |
| மங்களகாந்தி | | நவாலி | 5000. 00 |
| டெற்றா பூட் | | கனடா | 100டொலர் |
| சுந்தரமூர்த்தி ஜெயந்தன் | | கொழும்பு | 5000. 00 |
| கந்தையா செல்லத்துரை | | கொழும்பு | 1500. 00 |
| திரு தவம் | | மல்லாகம் | 5000. 00 |
| சபாபதிப்பிள்ளை தேவமலர் | | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| முகுந்தன் சிவபாலன் | | கனடா | 10000. 00 |
| திருமதி பொன்னம்மா இரத்தினசோதி | | பருத்தித்துறை | 5000. 00 |
| திரு ஸ்ரீனிவாசகம் | | கல்வியங்காடு | 2000. 00 |
| வன்னியசிங்கம் சிவசயனம் | | வளலாய் | 2000. 00 |
| பசுபதி கந்தப்பா | | வத்தளை | 5000. 00 |
| க. விவேகானந்தராசா | | சித்தங்கேணி | 3000. 00 |
| க. மங்கையற்கரசி | | சித்தங்கேணி | 1000. 00 |
| தம்பிராசா ஞானேஸ்வரி | | நீர்வேலி (அவுஸ்திரேலியா) | 5000. 00 |
| K.V. துரைசாமி நினைவு | | மயிலிட்டி | 1000. 00 |
| புண்ணியமூர்த்தி சானுஜா (சர்மிளன் மரக்காலை) | | நீர்வேலி | 1மூடை அரிசி |
| தர்ஷினி மகேந்திரன் | | திருநெல்வேலி | 1000. 00 |
| இ. ஹர்ஷினி | | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| J. சந்திரப்பிரகாசம் | | பருத்தித்துறை | 8000. 00 |
| திருமதி U. ராஜேந்திரா | | கொழும்பு-4 | 24500. 00 |
| ச. தயாநிதி | | தெகிவளை | 5000. 00 |
| சஞ்சயன் பார்த்தீபன் | | தெகிவளை | 1000. 00 |
| இ. நடராசா | | தாவடிச்சந்தி 1மூடை அரிசி | 2000. 00 |
| ச. ரவீந்திரநாதன் | | திருநெல்வேலி 1மூடை அரிசி | 2000. 00 |
| N. சிவசுப்பிரமணியம் | காலிவீதி | தெகிவளை | 2000. 00 |
| மு. இராஜசிங்கம் | | உடுப்பிட்டி | 2000. 00 |
| திரு ஸ்ரீகரன் | | லண்டன் | 10000. 00 |
| சிவயோகம் ஹரிஸ் | | வல்வெட்டி | 1000. 00 |
| திருமதி சிவகணேஸ் | | நோர்வே | 5000. 00 |
| K. கணேசலிங்கம் | | | 2000. 00 |
| மதிவதனி | | சாவகச்சேரி | 1000. 00 |

நிழலின் அருமை வெயிலில் போனால் தெரியும்.

| | | |
|---|---|---|
| கண்ணன் மோகன் | இமையாணன் | 2000. 00 |
| திருமதி துரைசாமி நினைவு | கோப்பாய் | 100பவுன்ஸ் |
| மகாலிங்கம் ருக்மணிதேவி | அச்செழு | 2000. 00 |
| மதனதீபன் ரிதுஷன் | தோப்பு (U.K) | 5000. 00 |
| புனிதவதி சிவசுப்பிரமணியம் | கனடா | 20000. 00 |
| ஈசன் பிரவீனா | சண்டிலிப்பாய் | 2500. 00 |
| ஈசன் கிஷானா | சண்டிலிப்பாய் | 2500. 00 |
| K. குமாரசாமி | கரவெட்டி | 1000. 00 |
| சுப்பிரமணியம் இராசலிங்கம் | லண்டன் | 3000. 00 |
| சி. செல்லையா | கரவெட்டி | 500. 00 |
| திருச்செல்வம் குடும்பம் | கனடா | 5000. 00 |
| செ. சிவராமலிங்கம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| க. நந்தகுமாரன் பிறவுண்றோட் | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| திருமதி S. உமாரதி | உடுப்பிட்டி | 500. 00 |
| ச. ஜெயதாசன் கருகம்பனை | காங்கேசன்துறை | 1500. 00 |
| வருணிகா | நீர்வேலி | 2000. 00 |
| சி. சந்திரசேகரம் | திண்ணைவேலி | 2000. 00 |
| சோ. பரமநாதன் G.S | குப்பிளான் | 1000. 00 |
| ந. கோபிநாத் | தாவடி | 500. 00 |
| சி. ஸ்ரீஸ்கந்தராசா நவிண்டில் | கரணவாய் | 5000. 00 |
| K.K.K.S. கோகுலதாசன் ஸ்ரோர்ஸ் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| வெங்கடேஸ்வரா | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| புதிய விஞ்ஞானக் கல்வி நிலையம் கன்னாதிட்டி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| ஸ்ரீ. சாந்தினி | மீசாலை மேற்கு | 1000. 00 |
| T. அருந்ததி | பளை | 2000. 00 |
| பாபு வெதுப்பகம் | புன்னாலைக்கட்டுவன் | 2மூடை அரிசி |
| ஸ்ரீராம் ரேடர்ஸ் | யாழ்ப்பாணம் | 1புட்டி பருப்பு |
| அ. சுதாகரன் | திக்கம் | 1000. 00 |
| சிவசக்தி | வவுனியா | 10மூடை அரிசி |
| மு. முருகதாஸ் | நீர்வேலி | 500. 00 |
| வே. பரமேஸ்வரன் | நீர்வேலி | 1000. 00 |
| திருமதி S. விஜயகுமார் பழம்றோட் | இருபாலை | 10000. 00 |
| சு. சுரேந்திரரெட்ணம் பழம்றோட் | இருபாலை | 5000. 00 |
| கி. சங்கீதா | பருத்தித்துறை | 2000. 00 |
| செ. தெய்வேந்திரம் | பருத்தித்துறை | 2000. 00 |
| க. திருச்செல்வம் | அல்வாய் தெற்கு 1மூடை அரிசி | 2000. 00 |
| சிவானந்தம் பவானி (லண்டன்) | பத்தமேனி | 5000. 00 |
| திருமதி யுவான்ராசா பிறவுண்றோட் | யாழ்ப்பாணம் | 15000. 00 |

(தொடரும்...

**ஒருவனுடைய மனைவி சொர்க்கத்தின் விசித்திரமான பரிசு.**




## மடல்பெரிது தழை மகிழ் இனிது

"மடல் பெரிது தழை மகிழ்இனிது கந்தம்
உடல் சிறியர் என்று இருக்கவேண்டா - கடல் பெரிது
மண்ணிரும் ஆகாது, அதன் அருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்"

தாழம்பூவின் மடல் அதிகம் இருப்பினும் பெரியதாக இருந்தாலும் அதனால் யாருக்கும் பயனில்லை. வாசமும் இல்லை.

ஆனால் தாழம்பூவைவிட மகிழம்பூ மிகவும் சிறியதாக இருப்பினும் அதற்கு மணம் அதிகம் உண்டு.

அதைப்போலவே கடல் மிகவும் பரந்து விரிந்து பெரிய பரப்பில் தண்ணீரைக் கொண்டுள்ளது. அதன் நீர அழுக்கைப் போக்கக்கூட உதவாது. ஆனால் அதன் அருகிலேயே இருக்கும் சிறிய குழிகளில் உள்ள ஊற்றுநீர் குடிப்பதற்கு அருமையான சுவையைக் கொண்டதாக அமைந்துள்ளது. பலரும் விரும்பி உபயோகிக்கவும் அது ஏற்றதாக அமைந்துள்ளது வெள்ளிடைமலையே. ஆகவே ஒருவருடைய சிறிய உருவத்தைக் கண்டு அவரை அலட்சியப்படுத்திப் பேசிவிடக்கூடாது என்பர்.

அகத்தியர் குள்ளமானவர். அவர் ஏழுகடல் நீரையும் குடித்தார் என்பர். பொன்னியைக் கமண்டலத்தில் அடைத்துக் காவிரியைத் தந்தார். தமிழுக்கு இலக்கணத்தை வகுத்தார்.

வாமனனாக வந்தவரும் சிறியவரே. இந்த உலகையே ஓர் அடியால் அளந்தார். சிறிய எறும்பும் யானையைச் சார்த்திவிடும். சிறிய அம்பும் கொடிய விலங்கை மாய்த்து விடும். சிறுதுளி மழையே பெரிய வெள்ளமாய் மாறுகிறது. சிறிய உளியானது பெரிய மலையைக் கூடப் பிளந்துவிடும். இருளாய் இருக்கும் இடத்தில் சிறிய அகல்விளக்கின் ஒளியும் பிரகாசமளிக்கும்.

சிறியவனாய் இருந்தபோது குமரகுருபரர் கந்தர் கலிவெண்பா பாடியதும் திருஞானசம்பந்தப் பெருமான் இளைய வயதிலேயே தோடுடைய செவியன் என்று தேவாரத்தைப் பாடிப்பல அதிசயங்களை ஏற்படுத்தியதும் நாம் அறிந்திடுவோம்.

ஓர் ஊரில் ஒரு பெரிய பெருச்சாளி இருந்ததாம். அது விநாயகப் பெருமானுக்கு வாகனமாய் இருப்பது ஒரு சுண்டெலியாகத் தானே!

**நல்ல மனிதன் ஒருபோதும் உயிர்களைத் துன்பப்படுத்தமாட்டான்.**

அப்பெருச்சாளிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதை நாளொரு மேனியும் பொழு தொரு வண்ணமுமாய் நன்கு வளர்த்து வந்தது. அதற்கு நல்ல முத்தைக் கொண்டு மூக்குத்தியும் தலையில் சுட்டியும் நெற்றியில் திலகமுமிட்டு பட்டுப்போட்டு பொத்தி வளர்த்த தாம். அந்தப் பெண்ணுக்கும் உரிய பருவம் வந்தது. அதைச் சிறந்த ஒருவருக்கு கொடுப் பது என்று முடிவெடுத்தது.

அதற்கேற்றவாறு நன்கு அலங்கரித்து அதை மையிட்டு மயிலாசனத்தில் அமர்த்திக் கொண்டு பெருச்சாளி முதலில் சூரியனிடம் சென்று "அறிவிலும் ஆற்றலிலும் மிகச் சிறந்த வரான சூரிய பகவானே! உலகுக்கு ஒளி தருபவரும் சான்றோர்க்கு உபதேசக் கல்வி யைக் கற்றுத் தருபவரும் வான்மழைக்குக் காரணமான தங்களுக்கே என் மகளைத் தரு வதென நான் முடிவு செய்து இருக்கிறேன்" என்றது எலி. இது கேட்ட சூரியன், "எலியாரே, நீங்கள் நினைத்தது முற்றிலும் தவறாகும். ஏனெனில் நான் அத்தனை பலசாலியல்ல. என்னைவிட பலசாலியானது மேகமே. அது என்னை மறைக்கும்பொழுது என்னால் ஏதும் செய்ய முடிவதில்லை. ஆகவே என்னைவிட மிகவும் பலசாலியான மேகத்திற்கு உன் மகளை மணம் முடித்துவை" என்றது.

எலியும் மேகத்திடம் சென்று, "மேகமே, என்னுடைய மகளைக் கண்போன்று வளர்த் தோம். அவளை பலசாலிக்குப் பெண்கொடுக்க நினைத்தோம். சூரியன் பலசாலி என்றனர். அங்கு சென்றால் அவர் மேகமாகிய தாங் களே பலசாலி என்றார். ஆகவே தாங்கள் ஏற்றருளிட வேண்டும்'' என்று மன்றாடியது.

மேகம், "எலியாரே, தாங்கள் நினைத்த படி அடியேன் அத்தனை பலசாலியல்ல... அடியேன் சூழ்ந்து மறைக்கும்போதும் உடனே பலத்த காற்று வீசினால் நான் இருக்கும் இடமே தெரியாமலாகிவிடுமே. அக்காற்றுக்கே உமது மகளை அளிக்கலாம்" என்றது மேகம்.

உடனே மூஷிகனார் தன் மகளை அழைத்துக் கொண்டு "காற்று, வருணர், தென்றல், சூறாவளி என்றெல்லாம் சொல்லக் கூடிய தாங்கள்தான் என் மகளை மணக்கத் தகுதியான பலசாலியென்று கேள்விப்பட்டேன். ஆகவே தட்டாமல் என் மகளை ஏற்றுக் கண்கலங்காது காப்பாற்ற வேண்டும்" என்று வேண்டியது. காற்று உடனே "பெருச்சாளி யாரே, தங்களின் சிறப்பை நன்கு அறிவேன். சிலர் நான் பலசாலி என்று கூறியுள்ளது அடியேனுக்கு எந்தவிதத்திலும் பொருந்தாதே. எவ்வளவு பலமாக வீசினாலும் என்னை அந்தச் சுவர்கள் தடுத்து விடுகின்றன. எனவே என்னைக் காட்டிலும் சிறந்த பலசாலியாக உள்ளது சுவர்தான். அதனால் அதனிடம் சென்று தங்கள் மகளைத் திருமணம் செய்து கொள்ளச் சொல்லுங்கள்" என்றது.

சுவரிடம் சென்று விண்ணப்பித்தது. ஆனால் சுவர் அதைக் கண்டிப்பாக ஆட் சேபித்தது. "நான் எந்தவிதத்திலும் பலசாலி யாக இருக்கத் தகுதியற்றவன். ஆனால் என்னைவிட பலசாலிகள் உங்கள் இனத் திலேயே இருக்கின்றனர். அவர்கள் என் னையே குடைந்து இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் நடம் புரிந்து என்னையே நடு நடுங்கச் செய்து விடுகின்றனர். ஆகவே அப்படிப்பட்ட எலிகளே சிறந்த பலசாலி" என்றது சுவர். அதைக் கேட்டு சலிப்படைந்த எலி சோகமாக வீடு திரும்பியது.

எலி சென்ற இடங்களையும் அந்தப் பலசாலிகளைப் பலவீனப்படுத்துவோரையும் அறிந்து விட்டது. அதன்படி பார்த்தால் எலி யின் உறவினர்களே சிறந்த பலசாலிகள் என்று உறுதியானது. அதனால் உற்றார் உற வினருடன் கூடிப்பேசி எலி ஒரு முடிவெடுத் தது. தன் இனத்தவருக்கே பெண்ணைக் கொடுத்து நன்கு வாழ வைத்தது. சிறிய எலியும் சிறந்ததன்றோ!

**பிரச்சனையே இல்லாத மனிதன் விளையாட்டிலிருந்து விலகி விடுகிறான்.**

(தொடர்ச்சி...

# சைவத் திருக்கோயிற் கிரியைநெறி


– உயர்திரு கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் –

## தீபாராதனை

பூசை வேளையில் நிகழும் நிகழ்ச்சிகளில் தீபாராதனை மிக முக்கியமானதாகும். வழிபடும் மக்கள் பூசை நிகழும் வேளை ஏனைய அம்சங்களைத் தவறவிடினும் தீபாராதனை நடக்கும்பொழுது வீசும் தீப ஒளியில் இறைவன் திருக்கோலங் கண்டு தரிசிப்பர். தீபாராதனையின்போது தரிசித்தல் பெரும் பேறுகளையளிக்கும்.

தூபதீபங்காட்டி நைவேத்தியம் நிகழ்ந்ததும் தீபாராதனை தொடங்கும். பெரு வழக்கில் உள்ள தீபங்கள் அடுக்குத் தீபம், நட்சத்திரத் தீபம், பஞ்சமுக தீபம், வில்வ தீபம், நாகதீபம், விருஷப தீபம், புருஷாமிருக தீபம், ஒற்றைத் தீபம், கும்ப தீபம், ஈசானாதி தீபங்கள் கற்பூர தீபம், பஞ்சாராத்திரிகைக்கு உரிய தீபம் என்பன. இத் தீபங்களைக் காட்டும் முறை ஆகமத்தில் கூறப்பட்டுள்ளது.








பரிசாரகர் தரும் தீபத்தை நிரீக்ஷணம் முதலிய சமஸ்காரங்கள் செய்து, புஷ்பத்தால் அருச்சித்துக் கையில் வாங்கி சுவாமிக்கு நேரே உயர்த்தி, முதலில் இடது கண்ணுக்கு நேரிலும், பின்னர் வலதுகண், நெற்றி ஆகிய இடங்களிலும் காலிலிருந்து தலைவரையும் மூன்றுமுறை சுற்றிக் காட்டல் வேண்டும். தலையிலும், நெற்றியிலும், கழுத்திலும், மார்பிலும், பாதங்களிலும் தனித்தனி பிரணவாகாரமாகச் சுற்றிக் காட்டும்முறை தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

தீபங்கள் காட்டும்போது **கற்பூர நீராஜனம்** இவ்வரிசையில் இறுதியாக இடம்பெறும். இதையடுத்து இடம்பெறுவது **பஸ்மரக்ஷை**. நெற்றிக்கண்ணுக்கு மேல் தலைப்பாகை பொருந்தும் **பட்டபந்தனம்** எனப்படும் இடத்திலும், மேல் முகத்தில் **வட்ட** வடிவமாகவும், கிழக்கு முகத்தில் **திரிபுண்டர** வடிவமாகவும், தெற்கு முகத்தில் **சூல** வடிவமாகவும், மேற்கு முகத்தில் **நாற்கோண** வடிவமாகவும், வடக்கு முகத்தில் தீபசுவாலை வடிவமாகவும், பின்னர் இறைவனின் இரு கரங்களிலும், கொப்புளிலும், இரு கால்களிலும். அதைத் தொடர்ந்து உடம்பெங்கணும் உத்தூளனமாகவும் உரிய மந்திரங்களுடன் இரட்சை சாத்துதல் விதியாகும்.

இரட்சை நிகழ்ந்ததும் இறைவனுக்கு உபசாரங்களை வழங்குதல் வேண்டும். கண்ணாடி, குடை, சாமரை, விசிறி, கொடி, ஆலவட்டம் என்பன உபசாரப் பொருள்கள். இவற்றையும் தீபங்களைப்போல் காட்டி உபசரிக்கும் மரவு நிலவி வருகின்றது.



தீபங்களை மூன்றுமுறை சுற்றிக்காட்டல் வேண்டும் எனக் கூறும் ஆகமம், முதலில் சுற்றிக் காட்டுவது உலக நன்மைக்காகவும், இரண்டாவதாகச் சுற்றிக் காட்டுவது கிராமத்தின் நன்மைக்காகவும், மூன்றாவதாகக் காட்டுவது உயிர்களின் நன்மைக்காகவும் எனக் குறிப்பிடப்படுகின்றது.

தீபாராதனையின் பொழுது அவ்வத்தீபத்துக்கு உரிய மந்திரங்களை முறைப்படி வேதாத்தியயனம் பயின்ற அத்தியனபட்டர் ஓதுவர். மங்கல வாத்தியமும் ஏனைய இசைக் கருவிகளும் இவ்வேளை ஒலிக்கப்படும்.

## நாட்டியம்:

தௌர்யத்திரிகம் என்பது நிருத்தியம், கீதம், வாத்தியம் என்னும் மூன்றினையுந் தொகுத்துச் சுட்டும். இம்மூன்றினாலும் இறைவனை வழிபட வகுக்கப்பட்ட முறை இந்நுண்கலைகளைப் பேணத் திருக்கோவில் வழிபாடு வழிகோலியதைக் காட்டுகிறது. இவற்றுள் வாத்தியங்கள் அபிஷேகத்தின் பொழுதும், ஆராதனையின் பொழுதும் மீட்டப்பட வேண்டியன. இவை மத்தளம், தாளம், படஹம்பேரி, டக்கா, காஹலீ, சல்லரி, கும்பவாத்தியம், நாடி, குழல், சங்கு, நிருத்த வாத்தியம் முதலியன. நாதசுரம், மேளம் முதலியவற்றால் அமையும் மங்கலவாத்தியம் மட்டும் பெரு வழக்கில் நிலவ, ஏனைய வாத்தியங்கள் சிறிது சிறிதாக வழக்கில் அருகிக் கொண்டே வருகின்றன. சாமகானத்தில் ஸ்தோபங்கள் அமைத்துக் கானம் இசைக்கும் பொழுதும், தேவாரங்களைப் பண்ணோடு இசைக்கும் வேளையும், ஏனைய திருமுறைப் பாக்களை உரிய இராகங்களிற் பாடுங் காலத்திலும் கீதத்தால் இறைவனின் நாதோபாசனை நிகழும். கீதம், வாத்தியம் என்னும் இரண்டின் பின் இடம்பெற வேண்டியது நிருத்தியமாகும்.

பரதநாட்டியக் கலை உலகில் விளங்கும் கலைகளில் உயர்ச்சி மிகுந்த கலை. பார்ப்பவர்களுக்குப் பரவசமூட்டும் நுண்கலை. இக்கலை சிலை வடிவில் நடராசத்தோற்றம் பெறும்வேளை அதனழகில் மயங்காதவர்களே இல்லை. இதனைக் கண்டு மேனாட்டு மக்களும் வியப்பெய்துவர். எம் இறைவனுக்கும் பரதநாட்டியத்திற்கும் உள்ள தொடர்பினை நாட்டியசாஸ்திரம் கூறும். அவ்வக் காலத்திற்கு உரிய நிருத்தங்களை அவ்வப்பூசை முடிவில் உரியவாறு இடம்பெறச் செய்தல் ஆகம மரபு. இவ் வழக்கு சிறிது சிறிதாக மறைந்து இன்றைய சூழ்நிலையில் அருகிக் காணப்படுவது விசனத்திற்குரியதே.

(தொடரும்...

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்

## (விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)



“ஒரு நூல் பழைமையானது என்பதை வைத்தே அது சிறந்ததாகத்தான் இருக்கும் என்று முடிவு செய்தல் கூடாது. அவ்வாறே, இன்று தோன்றிய நூல்தானே என்று கருதி ஒன்றைக் குறைவாக மதிப்பிடுதலும் கூடாது.”

இத்திறனாய்வுக் கருத்தினை வெளியிட்டிருப்பவர் அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்தவராகிய ஒரு சைவப் பெரியார் என்று கூறினால் பலரும் வியப்படைதல் கூடும். ஆம், அவர்தான் உமாபதி சிவம்.

மெய்கண்டாரோடு தொடங்கிய சைவ சித்தாந்த ஆசாரிய பரம்பரையில் நான்காம் ஆசிரியராக வந்தவர் அவர். மெய்கண்டார் செய்தருளிய சிவஞானபோத நூலுக்குச் சார்பாகச் சிவப்பிரகாசம் என்ற நூலைச் செய்தவர். அந்நூலில்தான் அவர் மேற்குறித்த கருத்தினை வெளியிட்டுள்ளார்.

**சிவப்பிரகாசமும் திருவருட்பயனும்**

உமாபதி சிவம் செறிவும் திப்ப நுட்பமும் அமையத் தாம் செய்த சிவப்பிரகாச நூலைச் சைவவுலகம் விளங்கிக் கொள்ளுதற்குத் துணையாகும்படி மற்றொரு சிறந்த நூலையும் ஆக்கி அளித்தார். அதுவே இந்தத் “திருவருட்பயன்” எனும் நூல்.

“சிவப்பிரகாசம்” சிவாகமம் ஆகிய கடலைக் கடத்தற்கு உதவும் மரக்கலம் போன்றது. “திருவருட்பயன்” அம் மரக்கலத்தைச் செலுத்தும் மாலுமி போன்றது என்பர். மாலுமி இல்லாத மரக்கலம் திசைகெட்டுத் தடுமாறும். அதுபோல முன்னே திருவருட்பயனைப் பயிலாமல் அதன் உதவியின்றிச் சிவப்பிரகாசத்தைக் கற்கப் புகுந்தால் அக்கல்வி தெளிவைத் தராது; முழுமை பெறாது.

சிவப்பிரகாசமும் திருவருட்பயனும் இணைந்து செல்பவை. பெயரிலும் அவை ஒற்றுமை உடையவை. சிவப்பிரகாசம் என்பது சிவனது ஒளி எனப் பொருள்பட திருவருளையே குறிப்பதாகும்.

**திருவருட்பயன் - பெயர் விளக்கம்**

திருவருட்பயன் என இந்நூலுக்குப் பெயர் வைத்த காரணத்தை அறிவதற்கு நாம் சிவப்பிரகாச நூலை நோக்கவேண்டியுள்ளது. சிவப்பிரகாசம் இரண்டு பகுதிகளை உடையது.

அதிகப் பழங்கள் பழுத்த மரம்தான் அதிகம் கல்லெறிபடுகிறது.

பின் பகுதியை ஏழு தலைப்புக்களாக வகுத்துக்கொண்டு விளக்கிச் சொல்லுகிறார் ஆசிரியர். அத்தலைப்புக்களுள் இரண்டினை இங்கே குறிப்பிடுதல் வேண்டும். அவை "பொங்கொளி ஞான வாய்மை" அதன் பயன் என்பவை. பரம்பொருளின் குணமாகவும் பிழம்பாகவும் உள்ள அறிவொளியே திருவருள் என்பது. அதனையே "பொங்கொளி ஞான வாய்மை" எனக் குறித்தார் ஆசிரியர். திருவருளால் உயிர்க்கு உண்டாகும் ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, ஆன்ம லாபம் என்ற மூன்றையுமே அதன் பயன் எனக் குறித்தார். சிவப்பிரகாசத்தில் உள்ள இவ்விரு தலைப்புக்களையும் இணைத்தால் கிடைப்பது திருவருட்பயன் என்ற பெயர். அதனையே இந்நூலுக்குப் பெயராகச் சூட்டினார் ஆசிரியர்.

சிவப்பிரகாசத்தில் ஞானவாய்மையும், அதன் பயனும் ஆகிய இரண்டையும் சுருக்க மாகவும் செறிவாகவும் கூறிச் சென்ற ஆசிரியர் திருவருட்பயனில் அவற்றிற்கென ஐந்து அதிகாரங்களை நூலில் சரி பாதியை பகிர்ந்தளித்து விரிவாக விளக்கியுள்ளார். அருளது நிலை, அருளுரு நிலை, அறியும் நெறி, உயிர் விளக்கம், இன்புறு நிலை என்ற அந்த அதிகாரங்களில் திருவருளின் இயல்பையும், திருவருளால் உயிர் அடையும் பயனையும் படிப்படியாக இனிமையான முறையில், மாணவர்களுக்கு ஏற்ற முறையில் விளக்கிச் சென்றுள்ள பான்மை வியக்கத்தக்கதாய் உள்ளது.

**சிவநெறித் திருக்குறள்**

உமாபதிசிவம் திருக்குறளை அடியொற்றியே தமது திருவருட்பயனை அமைத்துக்கொண்டார். அதற்குக் காரணம் அறநெறி, அருள்நெறி என்ற இருவகை நெறிகளுள் அறநெறியை உணர்த்துவதாகிய திருக்குறளுக்குப் பின் அருள்நெறியை உணர்த்தும் திருக்குறளாய் அமையுமாறு இதனைச் செய்தல் வேண்டும் என்று அவர் கருதியமையேயாகும். அக்கருத்துப்பற்றியே திருவருட்பயனை "அகர உயிர்போல்" என்று தொடங்கித் திருக்குறளை நினைப்பிக்கின்றார். நூல் முழுவதையும் குறள்வெண்பா யாப்பினாலே அமைத்துள்ளார்; அதிகாரத்திற்குப் பத்துக் குறள்களாகப் பத்து அதிகாரங்களை ஆக்கியுள்ளார். சிவநெறித் திருக்குறள் என்று சொல்லுமாறு இந்நூலைச் செய்துள்ளார்.

"தெள்ளுசீர்ப்புலைமை வள்ளுவன் தனக்கோர்
நற்றுணை உடைத்தெனக் கற்றவர் களிப்ப
அருட்பயன் என்னா அதற்கொரு நாமம்
தெருட்படப் புனைந்து செந்தமிழ் யாப்பிற்
குறளடி வெள்ளை ஒரு நூறு இயம்பினன்"

எனவரும் சிறப்புப் பாயிரப் பகுதியில் தெய்வப் புலமைத் திருவள்ளுவருக்கு ஒரு நல்ல துணை வாய்த்தது என்று அறிஞர் களிப்புறும் வண்ணம் திருவருட்பயனை உமாபதிசிவம் இயற்றினார் என்று பாயிர ஆசிரியர் கூறியுள்ளமையும் இக்கருத்தை வலியுறுத்தும்.

**சிற்றாறு ஆழமாக இருக்கும்போது நீர் நிதானமாக ஓடுகிறது.**

**சிறந்த நூல்**

குறள் வெண்பாவில் நூலியற்றப் பலரும் முன்வருவதில்லை. அதற்குத் தகுந்த காரணம் உண்டு. நினைத்த கருத்தையெல்லாம் குறள் வெண்பாவில் அத்துணை எளிதாக அமைக்க இயலாது. அமைக்க முடிந்தாலும் அக்கருத்தைச் சுவைபடச் சொல்ல முடியாது. சொற்சுவையும், பொருட்சுவையும் பொலியக் குறள் வெண்பாவினைக் கையாண்டு வெற்றி கண்டவர்கள் ஒரு சிலரே. உமாபதி சிவம் அவர்களில் ஒருவராகத் திகழ்கிறார்.

சொல்லுகிற பொருளுக்குச் சுவையூட்டுவன உவமை, உருவகம் முதலிய அணிகளாகும். திருவருட்பயனில் இத்தகைய அணி நலன்களை நிரம்பக் காணலாம்.

கூகையினுடைய கண்இயல்பு அனைவருக்கும் தெரிந்தது. அதற்குப் பகலிலும் கண்தெரியாது. திருவள்ளுவர் கூகையை உவமையாக எடுத்தாண்டுள்ளார். "பகல் வெல்லும் கூகையைக் காக்கை" என்று கூறிக் காலம் அறிதலை வலியுறுத்தினார். உமாபதிசிவம் வேறொரு வகையில் இப்பறவையை உவமையாகப் பயன்படுத்துகிறார். திருவருள் ஒளியில் இருந்தும் அதனைத் தெரிந்துகொள்ள மாட்டாமல் ஆணவ இருளில் அழுந்தியிருக்கும் ஆன்மாவின் நிலை கூகையின் கண் போன்றது என்கிறார். ஐந்து உறுப்புக்களையும் ஓட்டினுள் அடக்கிக் கொள்ளும் ஆமையைப் போல ஞானிகள் இருப்பர் என்று அவர் கூறியிருப்பது, திருக்குறளை நினைப்பிக்கும் மற்றோரு உவமையாகும்.

திருக்குறளைப் போலத் திருவாசகத்திலும் நம் ஆசிரியர்க்கு ஈடுபாடு மிகுதி. வெள்ளத்துள் நாவற்றுதல், எரியுறு நீர் என்பன திருவாசகத்திலிருந்து அவர் பெற்ற உவமைகளாகும். பிறிது மொழிதல் அணியைத் திருவள்ளுவரைப் போல இருவரும் பற்பல இடங்களில் அமைத்துள்ளனர்.

ஆற்றாமை, இரக்கம், சினம், நகை முதலிய உணர்ச்சிகள் தோன்றக் கூறிச்செல்லும் இடங்கள் திருவருட்பயனில் உண்டு. உயிர்கள் படுந் துன்பத்தைக் கண்டு, "அந்தோ! அருள் தெரிவது என்று?" என இரங்கிக் கூறுவார். திருவருளைப் பற்றிக் கவலை கொள்ளாமல், உலகியலில் களிக்கின்ற உயிரின் போக்கைக் கண்டு சினந்து, "இந்த உயிர்க்கு வீடு என்ன வேண்டிக் கிடக்கிறது?" என்பார்போல, "வெற்றுயிர்க்கு வீடு மிகை" என்பார். "இந்த உயிரைப் போய் சித்து என்று அழைக்கிறார்களே. இது நல்ல வேடிக்கை!" என்று நகைத்துக் கூறுவார். "இந்த உயிர் பேராற்றல் உடையதுதான்" என்று புகழ்வது போலப் பழிப்பார். இப்படி உணர்ச்சி ததும்பக் கூறும் மொழிநடை உமாபதி சிவத்திற்குக் கை வந்தது; திருவள்ளுவரின் நடையை நினைவூட்டுவது.

சைவ சித்தாந்தப் பொருள் அனைத்தையும் நூறு குறட்பாக்களில் தொகுத்துக் கூறுகிற சிறந்த நூல் இது. சாத்திர நூல்களுள் பெரிதும் பயற்சியில் உள்ள நூலும் இதுவேயாம்.

இந்நூலின் சிறப்புக் கருதி அறிஞர் பலர் இதற்கு உரை கண்டுள்ளனர். இந்நூலை முறையாகப் பயில்கின்றவர் சித்தாந்தப் பொருளை ஒருவாறு முற்ற உணர்ந்தவராவர்.

(தொடரும்...

# ஸ்ரீ கருட புராணம்



–திரு இரா. செல்வவடிவேல் அவர்கள்–

இந்து சமயத்தில் காணப்படும் மகா புராணங்கள் 18 ஆகும். இந்தப் புராணங்கள் வியாசபகவான்மூலம் அருளிச்செய்யப்பட்டதாகும். இப்புராணங்கள் சூதமா முனிவர் தம் குருவான வேதவியாசர் வாயிலாகக் கேட்டறிந்தார்.

சூதமா முனிவர் ஒருசமயம் இமய மலைச் சாரலில் கோமதி நதிக்கரைக்குச் சென்றார். அப்போது அங்கிருந்த நைமிசாரண்ய வனம், பூமியில் சொர்க்கம் போன்று விளங்கியது. அந்த வனத்தில் வெவ்வேறு இடங்களில் அந்தணர்களும், முனிவர்களும் வேதங்கள் ஓதுதல், வேள்விகள் புரிதல், தவம் புரிதல் போன்று பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

அவ்வனத்தில் சவுனக முனியவர் சந்திர வேள்வியைப் புரியும் நோக்கத்தோடு எழுந்தருளியிருந்தார். அதையறிந்த முனிவர் பலரும் அவ்வேள்வியில் கலந்துகொள்ளும் நோக்கில் வந்து கூடினர். அச்சமயம் சூதமா முனிவரும் அவ்வனத்திற்கு வந்து வேள்வியில் பங்குகொண்டார்.

சூதமா முனிவர் பதினெட்டுப் புராணங்களும் கற்றறிந்தவர் என்பது அங்குள்ள முனிவர்கள் அனைவருக்கும் தெரியும். அதனால் அவரிடம் தங்களுக்கு புராணங்களைத் தெளிவாகக் கூறும்படி பணிந்து கேட்டனர். அவரும் அவர்களின் வேண்டுகோளிற்கிணங்க ஒவ்வொரு புராணமாக கூறிவர, அதனைக் கேட்டுப் பயன்பெற்றனர்.

அனைத்துச் சாத்திரங்களிலும் முதன்மையானதாகத் திகழ்வது புராணங்கள் ஆகும். அப்புராணங்கள் ஒவ்வொரு யுகத்திலும்,

**ஒரு பலவீனமான உடல் மனத்தையும் பலவீனப் படுத்துகிறது.**

வெவ்வேறு வடிவில், வெவ்வேறு பெயர்களால் வழங்கப்பட்டு வருகிறது. கிருத யுகத்தில் பிரம்ம தேவரால் நூறுகோடி கிரந்தங்களாக இயற்றப்பட்டது. அப்போது பிரம்மம் என்ற பெயரால் வழங்கப்பெற்றது. திரேதா யுகத்தில் மாமுனிவர்கள் அவற்றையே பதினெட்டுப் பிரிவுகளுடன் கோடிக் கிரந்தங்களாக விரி வாகச் சொன்னார்கள்.

துவாபர யுகத்தின் இறுதியில் நாராயண மூர்த்தியின் அம்சமான வேதவியாசர். அப்புரா ணங்களின் சாரங்களையெல்லாம் தொகுத்து நான்கு இலட்சம் கிரந்தங்களாக விரிவாக பதினெட்டுப் புராணங்களாகச் செய்தார். முன் பெல்லாம் வேதங்களிலும் புராணங்களிலும் கூறப்படும் பொருள்கள், வேத சாத்திரங்கள் கற்றறிந்தவர்களால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும். அதனால் அக்குறையைப் போக்கி சாதாரண மக்களும் எளிதில் புரிந்துகொள்ள வேண்டும்; அப்பொழுதுதான் அவற்றின் பொருளை அறிந்து, தம் வாழ்வில் கடைப் பிடிக்க இயலும் என்ற உயரிய நோக்கத் தோடுதான் வேதவியாசர் இதிகாச நூல்களை யும் புராணங்களையும் தம் பிரதம சீடரான சூதமா முனிவருக்கு போதித்தருளினார்.

இன்றைய உலகம் அறிவு முதிர்ச்சி யாலும், அறிவியல் கண்டுபிடிப்புகளாலும் மிக வேகமாக முன்னேறி வருகின்றது. ஆரம்பத் திலிருந்து மக்களின் வாழ்க்கை முறைக்கும் இன்றைய வாழ்க்கை முறைக்கும் எத்தனையோ மாற்றங்கள். வருங்காலத்தில் இன்னும் பல மாற்றங்கள் ஏற்படத்தான் போகின்றன. அதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆனால், மனிதர் கள் வாழும் முறையில் கடைப்பிடிக்க வேண் டிய நெறிமுறைகளில் எந்த மாற்றமும் உண்டாவதில்லை. அன்றைய கால மக்கள் எந்தவித ஒழுக்க நெறிமுறைகளைப் பின் பற்றினார்களோ, அதே ஒழுக்க முறைகளை இக்கால மக்களும், வருங்கால மக்களும் பின்பற்றி வரவேண்டும். அப்பொழுதுதான் உலகில் மனிதர்களின் வாழ்க்கை பூரணத் துவம் பெற்றதாக இருக்கும். ஆனால், காலப் போக்கில் மக்களின் மாறும் மனோபாவத்தால்- சுயநலப்போக்கால் - நெறிமுறைகளை மீறிய வகையில் வாழத் தலைப்பட்டு விடுகின்றனர். அதனால்த்தான் உலகின் பல இடங்களிலும் கொலை, கொள்ளை, சண்டை சச்சரவுகள், பிறரைத் துன்புறுத்தல் போன்று இன்னும் பஞ்சமா பாதகச் செயல்களும் நடந்து வரு கின்றன.

இத்தகைய போக்கு காலப்போக்கில் அதிகமாகி வருகின்றன. அதனால்தான் பெரி யோர்கள், மக்கள் ஆன்மீகத்தில் நாட்டங் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர்கள் தம் மனத்தை அடக்கி இறைவழிபாட்டில் செலுத்தி தீவினைகளை விட்டு நல்வினை களையே புரிவர் என்று வற்புறுத்தி வருகின் றனர். அந்த வகையில் மக்களுக்கு நல்வினை எது? தீவினை எது என்று அறிவுறுத்தும் வகையில் வேதங்களும் பல புராணங்களும் உள்ளன.

அவ்வாறு நல்வழி காட்டும் புராணங் களுள் ஒன்று கருடபுராணம். இந்தப் புராணத் தில் மக்களுக்கு நல்வினை தீவினை பற்றிக் கூறுவதோடு, நல்வினை புரிந்தால் அடையக் கூடிய நிலைபற்றியும், தீவினை புரிந்தால் நேரக்கூடிய நிலைபற்றியும் கூறுகிறது. மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளைப் பற்றி விரிவாகக் கூறுகிறது கருடபுராணம். கருடபுராணம்தான் என்று ஒதுக்கிவிடாமல், ஒவ்வொரு மனிதரும் படித்துப் பயன்பெற வேண்டிய நூல். இந்த நூலை ஆழ்ந்து படிப் பவர்கள் தம் வாழ்க்கையில் நல்லொழுக்கம், நன்நெறிகளைக் கடைப்பிடித்து சிறந்த முறையில் வாழ்ந்து வருவர். அவர்கள்

இயற்கை, காலம், பொறுமை இம்மூன்றும்தான் பெரிய மருத்துவர்கள்.

மரணத்திற்குப் பின்னரும் நற்கதி அடைவர். அத்துடன் இப்புராணத்தில் இறக்குமுன் ஒருவர் செய்ய வேண்டிய தானதருமங்கள், இறைவழிபாடு பற்றியும் அறியலாம். இறந்த வருக்காகச் செய்யவேண்டிய சிரார்த்தம் போன்ற கருமங்களைச் செய்யும் முறை களைப் பற்றியும், அப்படிச் செய்வதனால் ஏற்படும் நன்மைகளைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம்.

இப்போது கலியுகத்தின் இறுதியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இக்காலம்பற்றி புராணங்களின் எடுகூறல் உண்மையானது எனவும் உணரப்பட்டு வருகிறது. பஞ்சமா பாதகங்களையும் எவ்வித பயமுமின்றி துணிந்து செய்து வரும் மக்களைக் காண்கிறோம். இப் படிப்பட்ட சூழலில் நிச்சயம் தெரிந்துகொள்ள வேண்டிய விடயங்கள் உள்ளடக்கிய கருட புராணம் பற்றிய சிந்தனை அவசியமாகும். கருடபுராணம் பற்றிய பல நூல்களை வாசித் தறிந்து, அவற்றின் உள்ளடக்கத்தை, சகல ரும் அறிந்து கொள்ளக்கூடிய முறையில் எளிமைப்படுத்தி எழுதவேண்டும் என்கிற எண்ணத்தில் இம்முயற்சியை ஆரம்பித்துள் ளேன். இறையருளும், குரு அருளும் துணை நிற்கும் என்கிற நம்பிக்கையில் இம்முயற் சியைத் தொடங்குகிறேன்.

கருடபுராணம் பற்றிய ஆராய்வுக்குச் செல்கையில் முதலில் கருடபகவானின் அருட்செயல்களை அறிவது அவசியமாகும். ஸ்ரீ கருடனுக்கு ஐந்து எழுத்துக்கள் கொண்ட "பஞ்சவர்ண" என்ற மந்திரம் இருக்கிறது. கருடபெருமான் திருமாலின் இரண்டு திருவடி களையும் தம் இரு கரங்களால் தாங்கி ஊர்வலமாக வரும் காட்சியே கருட சேவை எனப்படும். அப்போது பெருமாள், கருடன் ஆகிய இருவரின் அருளும் ஒருங்கே கிடைப் பதைப் பக்தர்கள் புனிதமாகக் கருதுகிறார் கள். கருடசேவையை அக்காலையில் காண பதற்கு மிகவும் விரும்புவார்கள்.

பிரகலாதனுடைய புத்திரன் விரோசனன். பள்ளிகொண்ட பெருமானுக்கு தொண்டு செய்து கொண்டிருந்தான். அவனுடைய போதாத காலம் அவனுக்குப் பெருமாளின் வைரமுடியின்மேல் ஆசை வந்தது. திருமால் தூங்குவதாக நினைத்துக்கொண்டு ஒருநாள் முடியைக் கவர்ந்துகொண்டு பாதாளத்திற்குச் சென்றுவிட்டான். ரிஷிகளும், தேவர்களும் திருமுடியைக் காணோமே என வருந்தினர்.

கருடன் பாதாளலோகம் சென்று விரோச னோடு சண்டையிட்டு கிரீடத்தைக் கொண்டு வரும்போது ஸ்ரீ கிருஷ்ணன் காளிங்க நர்த் தனம் ஆடி வெற்றி கண்டிருந்தார். யசோதை நந்தகோபர் யாதவர்களெல்லாம் ஆனந்த பரவசத் திலிருந்தனர். கருடன் முடியைக் கிருஷ் ணனுக்குச் சூட்ட குழந்தையின் தலைக்கு ஏற்றபடி முடி பொருந்திக் கொண்டதைப் பார்த்து கருடன் ஆச்சரியப்பட்டார். இது எப்படி சாத்தியம் என்று அவருக்குப் புரியவே இல்லை.

தேவர்கள் குரு காசிபர், காசிபர்-கத்குருவின் புதல்வர்கள் சூரியன், சங்கன், வாசுகி, ஆதிஷேசன், தஷசகன், கார்க் கோடகன், பத்மன், மகாபத்மன் போன்ற நாகர்கள் ஆவார்கள். இவர்களில் வாசுகியின் பெண்தான் அர்ச்சுனன்மேல் ஆசைப்பட்ட நாக கன்னி உலூபி. அர்ச்சுனன்- உலூபியின் மகன் அரவான். இவன் பாரதப்போரில் பலி கொடுக் கப்பட்டவன். வாசுகி தேவாசுரர்கள் பாற் கடலைக் கடையும்போது கயிறாக இருந்தவள்.

மத்தாக மந்திரமலையைக் கட்டி இழுத்து வந்து போட்டவர் பெருமாளின் படுக்கையான ஆதிஷேசன். ஆதிஷேசனின் மனைவி சுவதீ. முனிவரின் கூப்பிய கரங்களி லிருந்து அவதரித்ததால் பத- அஞ்சலி எனப் பெயர்பெறும் பதஞ்சலி முனிவராவார். திரை யிட்டுக் கொண்டு இவர், தான் எழுதிய

முதுமை உணர்வைப் பொறுத்தது வயதைப் பொறுத்தது அல்ல.

வியாகரண மகாபாஷ்யத்தைப் போதித்தார். லட்சுமணனாகவும், பலராமனாகவும், இராமானு ஜராகவும் அவதரித்தவர்.

வாசுகிக்கு இளவலான தஷசகன் தான் பரிஷத் மகாராஜாவைக் கடித்தவன். பரிட்சித்தின் பிள்ளையான ஜனமே ஜயன் செய்த சர்ப்ப யாகத்தில் தப்பித்து இந்திர னிடம் தஞ்சம் புகுந்தான். தஷசகன் மகன் தான் நாகன் என்பவன். இவன் தான் "நாகஸ் திரமாக" அர்ச்சுனனைக் கொல்வதற்குக் கர்ணனிடம் அடைக்கலம் புகுந்தவன்.

கார்கோடகன் கறுப்பாயிருப்பான். இவன் தான், நெருப்பில் அகப்பட்டு நளமகாராஜா வால் காப்பாற்றப்பட்டவன். நளனைத் தீண்டி அவனுக்கு நன்மை புரிந்தவன். வாசுகியின் தம்பியான இவன் சிவனது கைவிரல் மோதிர மாக உள்ளவன்.

நைமிசாரண்யத்தில் கோமதி நதிக் கரையில் நாகசுனை என்ற பொய்கையே பத்மனின் வாசஸ்தலம். மகாபத்மனை வட திசைக் காவலாளியாக சிவபெருமான் நியமித் தார். அநந்தனும். சங்கபாலனும் (சங்கன்) வெண்மை, வாசுகியும் பத்மமும் சிவப்பு, மகாபத்மனும் தஷசகனும் மஞ்சள் நிறம், கார்கோடனும் குளிகனும் கறுப்பு நிறம். வைகுண்ட ஏகாதசி அன்று பாம்புகளை நினைக்க வேண்டும் என்றே பாம்புக்கோலம் போடுகிறோம்; பரமபதம் ஆடுகிறோம்.

பிரம்மாவின் மானஸபுத்திரர் இக்ருது. அவர் இக்ரியா என்பவளை மணந்துகொண்டு பல பிள்ளைகளைப் பெற்றெடுத்தான். அவர் களுக்கு "வால்கில்யர்கள்" என்று பெயர். இவர்கள் உயரம் குறைந்தவர்கள். மகா தபசி கள். தினமும் சூரிய மண்டலத்தை வலம் வருபவர்கள். இவர்கள் ஆலமரம், மூங்கிலில் தலைகீழாகத் தொங்கி தவம் செய்வார்கள்.

காசிபர் உயர்ந்த உத்திரனை வேண்டி புத்ரகாமேஸ்டி யாகம் செய்தார். தேவர்களும் முனிவர்களும் யாகத்திற்கு சமித்து சேகரித்துக் கொடுத்தனர். வால்கில்யர்களும் சமித்தை எடுத்து வந்தனர். மழை பெய்து பூமியில் பள்ளம் ஏற்பட்டது. இதில் தண்ணீர் தேங்கி நின்றது. அந்த இடத்தில் சில வால்கில்யர் களும் விழுந்து விட்டனர். இந்திரன் இதைப் பார்த்து கேலி செய்து சிரித்தான்.

வால்கில்யர்கள் மனம் கொதித்து, புது இந்திரனை உண்டாக்குவோம் என சபதம் செய்து யாகம் செய்யத் தொடங்கினர். நாரதர் இந்தச் செய்தியை இந்திரனுக்குத் தெரிவிக்க காசிபரிடம் சரணடைந்தான் இந் திரன். காசிபர் வால்கில்யர்களிடம் "நூறு அசுவமேத யாகங்கள் செய்து பிரம்மாவினால் அமர்த்தப்பட்டவன் இந்திரன். பிரம்மாவின் செயலை மாற்றமுடியுமா? உங்கள் யாகத் தில் தோன்றும் இந்திரன் பறவைகளின் அரசனாய் இருக்கட்டும். மகா விஷ்ணுவையே சுமக்கும் பாக்கியத்தைப் பெறுவன். பெரிய திருவடி எனப் போற்றப்படுவான்" என்று இத மாக எடுத்துரைத்தார். "அப்படியானால் இந் திரனின் தந்தையான நீங்களே இப்பிள்ளைக் கும் தந்தையாக வேண்டும்" என்று நிபந் தனை விதித்தனர். காசிபர் ஒப்புக்கொண்டு யாகத்தின் பலனைப் பெற்றுக்கொண்டு ஆசிர மம் திரும்பினார்.

காசிபர் வேதகாலத்தில் மகரிஷிகளில் தனிச்சிறப்பு பெற்றவர். அவரது இரு மனைவி யர்களாக "கத்ரு"வும் விருதையும் இருந்தனர். மகத்தான தவவலிமை பெற்றவராதலால், இல்லற சுகங்களில் ஈடுபாடு இல்லாமல் இருந்தார். பலகாலம் கடுந்தவம் செய்து அதன் பலனாக அக்கினியைப்போல ஜொலித்த அவரை இளம் பெண்களான கத்ருவும் விரு தையும் நெருங்குவதற்கு அஞ்சினர். ஒருநாள் இருவரும் மனதில் தைரியத்தை வரவழைத் துக்கொண்டு தங்களுக்குப் புத்திர பாக்கியம் அருளுமாறு அவரை வேண்டினர். அவர்களது

**ஒரு மனிதனின் அழகு அவன் நாவின் இனிமையில் இருக்கிறது.**

பணிவான வேண்டுகோளினாலும், பணிவிடைகளினாலும் மகிழ்ச்சியடைந்த காசிபர் தனது தவத்தின் ஒரு பங்கு பலனைக் கத்ருவிற்கும், இரண்டு பங்கு பலனை விருதைக்கும் அளித்து அருள் புரிந்தார். நாளடைவில் கத்ரு ஒரு முட்டையையும், விருதை இரண்டு முட்டைகளையும் ஈன்றார்கள்.

எப்போதுமே கத்ருவிற்கு விருதையின் மேல் பொறாமை அதிகம். ஆதலால் ஒருநாள் கத்ரு, விருதைக்குத் தெரியாமல் ஒரு முட்டையை உடைத்து விட்டாள். முட்டையின் முக்கால் பாகத்தில் மட்டுமே சரீரம் வளர்ந்திருந்தது. அந்த முட்டையினுள் வளர்ந்து கொண்டிருந்த விருதையின் ஆண் குழந்தை இரு கால்களும் இல்லாமல் முட்டையில் இருந்து வெளிவந்தது. கத்ருவின் செயலினால் தன் குழந்தை முடவனாகப் பிறந்து விட்டானே! என்று கதறியழுது விருதை சூரிய பகவானிடம் முறையிட்டாள். சூரியபகவான் மனமிரங்கி அக்குழந்தைக்கு "மாதலி" என்றும் "அருணன்" என்றும் பெயரிட்டுத் தனது பொன்மயமான தேரிற்குச் சாரதியாக ஏற்றுக்கொண்டு அருள் புரிந்தார்.

நாளடைவில் விருதையின் மற்றொரு முட்டை முழுமையாக வளர்ந்து அதிலிருந்து அதிபராக்கிரமசாலியான "கருடன்" வெளி வந்தான். அளவற்ற பராக்கிரமமும், வீரியமும், அசுர வேகத்தைத் தரும் பொன்மயமான சிறகுகளையும் கொண்ட கருடனைக் கண்டு ஈரேழு பதினான்கு உலகங்களும் வியப்படைந்தன.

கத்ருவின் முட்டை முழுமையாக வளர்ந்து வாசுகி, கார்க்கோடகன், க்குர ஸர்ப்பன் போன்ற பாம்புகள் நாகங்கள் பிறந்தன. விருதையின் ஒரு முட்டையை உடைத்து, ஒரு குழந்தைக்கு கால்கள் இல்லாமல் செய்தபடியால். கத்ருவின் கர்ப்பத்தில் உண்டான அவளது குழந்தைகளான பாம்புகள் அனைத்திலும், அவளது பொறாமைக் குணம் விசமாகத்தங்கி விட்டது. ஆதலால் இந்தப் பாம்புகளும் சீறி, சீற்றம் கொள்ளும் குணத்தைக் கொண்டு வளர்ந்தன.

இந்நிலையில் பாற்கடலைத் தேவர்களும் அசுரர்களும் அமுதம் வேண்டிக் கடைந்தபோது சந்திரன் பாஞ்சசன்யம் என்ற சங்கு, ஸ்ரீ மகாலட்சுமி, அமுதம், ஐராவதம் என்ற யானை, இறக்கைகளுடன் கூடிய உச்சிரவஸ் என்ற குதிரை போன்றவை தோன்றின.

ஒருநாள் விருதையும், கத்ருவும் ஒன்றாக இருந்தபோது வானவெளியில் மிக வேகமாக உச்சிரவஸ் என்ற அந்த தெய்வக் குதிரை சூரிய மண்டலத்தைக் கடந்து சென்றதை இருவரும் கண்டனர். அப்போது இருவருக்குமிடையில் அக்குதிரையின் நிறம் குறித்து வாக்குவாதம் ஏற்பட்டது. அதன் நிறம் பச்சை என்று விருதையும், கருப்பு என்று கத்ருவும் கூறினர். வாக்குவாதம் முற்றி இதில் எவர் தோற்றாலும், அவர் மற்றையவருக்கு அடிமை என்று ஏற்றுக்கொண்டனர்.

உச்சிரவஸ் உண்மை நிறம் பச்சையே. வாக்குவாதத்தின் பின்னர் இதனையறிந்த கத்ரு எங்கே தான் விருதைக்கு அடிமையாகி விடுவேனோ என்று அஞ்சி கரிய நிறமுள்ள தனது குழந்தைகளான பாம்புகளை அழைத்து தனது நிலையைக் கூறினாள்.

"கத்ரு தன் புத்திரர்களை அழைத்து உச்சிரவஸ்சின் வாலைச் சுற்றிக்கொள்ள வேண்டும்" என ஆணையிட்டாள். நாகங்கள் எல்லாம் மறுத்தன. "தாயே! குதிரை அஞ்சி நெளிந்தாலோ, வாலைச் சுழற்றினாலோ குட்டு வெளிப்பட்டு விடும்" என்றன. கத்ரு கோபத்தோடு, "தாயின் விருப்பத்தை பூர்த்தி செய்ய இயலாத நீங்கள் சாம்பலாகக் கடவது" எனச் சாபம் இட்டாள். அதனால் தான் ஜனமே

**வெள்ளம் உயர்ந்தால் மலர் உயரும். உள்ளம் உயர்ந்தால் நீ உயர்வாய்.**

ஜயனின் சர்ப்ப யாகத்தில் நாகங்கள் எரிந்து சாம்பலாயின.

கார்க்கோடகன் என்ற நாகம், “தாயே உங்கள் கோரிக்கையை நான் நிறைவேற்று கிறேன்'' என்று வாக்களித்தது. கத்ரு மகிழ்ந்து “சரித்திரத்தில் நீ இடம்பெறுவாய்” என்று ஆசீர்வதித்தாள். நளமகராஜாவின் சரித் திரத்தில் கார்க்கோடன் முக்கிய இடம் பெற்றது.

மறுநாள் காலையில் உச்சிரவஸ் புல் மேய்ந்து கொண்டிருக்கும்போது கார்க்கோடன் தன் நஞ்சைக் காற்றில் வெளிப்படுத்த அதைச் சுவாசித்த உச்சிரவஸ்சுக்கு மயக்கம் ஏற்படவே அதன் வாலில் பிணைந்து தொங் கியது கார்க்கோடன். அந்த நேரம் கத்ரு, விருதையை அழைத்துவந்து “பார்த்தாயா! வால் கருப்பாக இருக்கிறது, நீ எனக்கு அடிமை என்றாள்”. குதிரைக்கு அருகில் செல்லமுடியாமல் விசத்தின் மணம் மயக்கம் ஏற்படுத்தியதால் விருதை உண்மையென நம்பி கத்ருவுக்கு அடிமையானாள்.

கருடன் தன் தந்தையிடம் அமுதத் தைக்கொண்டு வரும் வழி பற்றிக் கேட்டான். தேவர்களுடன் போர் செய்யாமல் அமுதம் கொண்டுவர முடியாது என்றார் காசிபர். தந்தையின் ஆசியுடன் அமுதம் பெற தேவ லோகம் நோக்கிப் பறந்தான். தேவர்கள் அவனைத் தடுத்துப் போரிட்டனர். இந்திரன் தன் வஜ்ராயுதத்தால் கருடனைத் தாக்கி னான். இருந்தாலும் கருடனை வெற்றிகொள்ள முடியவில்லை. கருடன், இந்திரனே உன் வஜ்ராயுதம் எந்த முனிவரின் எலும்பினா லானதோ அவருக்கும், உன் பதவிக்கும் மதிப்பளித்து உன்னை விட்டு விடுகிறேன். நீ தோற்றதாக இருக்க வேண்டாம்” என்றது. கருடனின் பெருந்தன்மைக்கு மதிப்பளித்து இந்திரன் அமுதத்தைக் கொடுத்தான். அதை தாயிடம் கொண்டுவந்து தந்தான். விருதை அதைத் தர்ப்பைக் காட்டில் மறைத்து வைத் தாள். இதைப் பாம்புகள் தெரிந்துகொண்டன.

ஆவலின் காரணமாக அமுதக்கலசம் வைத்திருந்த இடத்தைப் பாம்புகள் நக்கின. குதிரையின் வாலில் சுற்றியிருந்த பாம்புகளும் கீழே இறங்கி நக்க ஆரம்பித்தன. அவற்றின் நாக்கு தர்ப்பையில் சிக்கி இரண்டாகி விட்டது. கத்ரு செய்த கள்ளத்தனம் வெளிப்பட்டது. அவள் தன் தோல்வியை ஒப்புக்கொண்டாள். பெருந்தன்மையுள்ள விருதை அவளை மன்னித்து விட்டாள்.

அப்போது அங்கு வந்த இந்திரன் அமுதம் பருகி சாகா வரம் பெறுவாய் என்று கருடனிடம் கூறினான். கருடன் மறுத்து விட்டான். “எனக்கு அமுதம் வேண்டாம். என் வீரம் ஏதோ ஒரு பொருளை அருந்தியதால் வந்தது என உலகோர் சொல்லக் கூடாது” எனச் சொல்லிவிட்டான்.

ஸ்ரீமன் நாரயணமூர்த்தி கருடனுக்கு காட்சி கொடுத்து, “முதுமையும் மரணமும் இன்றி வாழ்வாய், எனக்கு இனி நீதான் வாக னம்” என வரங்கொடுத்தார். அன்றுமுதல் ஸ்ரீமன் நாராயண மூர்த்தியின் வாகனமாக கருடன் விளங்கினார்.

இவ்வாறு ஆற்றல் மிக்க கருடன், விஸ்ணு மூர்த்தியிடம் வினாக்கள் தொடுக்க, அதற்கு நாராயணர் பதில் சொல்வதாக அமைந்ததுதான் கருட புராணம். கருடன் எழுப்பிய சந்தேகங்களுக்கு பரந்தாமர் கொடுத்த விடையை கேள்வி பதில் என்ற முறையில் இனித் தொடரலாம்.

(தொடரும்...

**பணத்தின் மேலுள்ள ஆசைதான் எல்லாத் தீங்குகளுக்கும் ஆணிவேர்.**


# கண்டோம் கதிர்காமம்

(தொடர்ச்சி...

– திரு கவிமணி அன்னைதாசன் அவர்கள் –

பி.ப. 1.30க்கு புறப்பட்ட நாம் மட்டக்களப்பு நகரைத் தாண்டி கிழக்கு கரையோரச் சிறு கிராமங்களைத் தாண்டி கல்முனை ஆகிய பட்டினங்களையும் தாண்டி எமது பயணம் தொடர்கிறது. எங்கும் பச்சைப் பசேலென நெல்வயல்கள் நிறைந்து காணப்பட்டன. சரியாக 2.50 மணிக்கு தாந்தாமலையை எமது வாகனம் சென்றடைந்தது.

ஏறக்குறைய ஐந்து கிலோமீற்றர் தூரத்திற்கு ஆளரவமற்ற ஒரு தனிப் பிரதேசமான மலை அடிவாரத்தில் எம்மை இறக்கிவிட்டனர். மலை ஆகப்பெரிய உயரமில்லை. ஆனால் அதில் ஏறுவதற்கு எம்போன்றவர்களால் ஏறமுடியுமா என்ற பிரமிப்பு ஏற்பட்டது. காரணம் செங்குத்தாக ஏற்றம் அமைந்துள்ளது. குன்று இருக்கும் இடம் எல்லாம் குமரன் வீற்றிருப்பான் என்ற ஐதீகத்தை மாற்றியமைக்கும் வண்ணம் பிள்ளையார் மலை உச்சியிலும் மலை அடிவாரத்தில் சிறிய மேடான பகுதியில் முருகப்பெருமானது ஆலயமும் அமைந்திருக்கின்றது. அப்பொழுதுதான் இம்முருகனின் பெருந்திருவிழா முடிந்திருந்ததால் இரு கடைகள் மட்டும் காணப்பட்டன. அவையும் சிறியவையாகவே இருந்தன. அதைவிட வேறு பெரிய மனைகளோ



அன்பு குறைந்திருக்கும்போது குற்றங்கள் பெரிதாகத் தெரிகின்றன.

நிலையங்களோ பெரிதாக ஒன்றுமில்லை. அருகில் இருந்த நீர்நிலையில் கைகால்களைச் சுத்தம்செய்தபின் மலை ஏறத்தொடங்கினோம். இதிலும் என்ன விஷேடமென்றால் சுவாமிகளின் கதிர்காமத் தொடர் யாத்திரையில் இம்முறைதான் தாந்தா மலையை தரிசிக்கும் வாய்ப்பு இக்குழுவினருக்கு கிடைத்துள்ளது. ஏனைய காலங்களில் மார்க்கம் வேறுவகையாக அமைந்திருந்ததாம் என்பதையும் அறிய முடிந்தது. முதலில் இருந்த மலைப்பு வெறும் மாயைதான் என்பதை ஏறிய பின்பு உணர முடிந்தது. அனைவரும் மலை உச்சியில் பிள்ளையார் ஆலயத்தில். என்ன ஆச்சரியமென்றால் ஒரு சிறு நிலப்பரப்புக் கொண்ட சமதரை மட்டுமே. இதில் ஓர் சிறு ஆலயத்தில் பிள்ளையார். நாங்கள் சரியாக 3.50க்கு அங்கே நின்றோம். இதமான குளிர்காற்று மழைக்குணமும் இருந்தது. மலையில் இருந்து சுற்றுச் சூழலைப் பார்த்தால் அழகிய பசும்மரங்கள் அடர்ந்த காடாகவும் எங்கோ தொலைவில் வயல் நிலப்பரப்பும் தொடுவானமும் தெரிந்தன. முருகன் என்றால் அழகல்லவா, அவன் இருக்கும் இடமும் அழகே. பெருந்திருவிழாவின் பொழுது ஒரு வேல் செய்திருந்தார்கள். மூங்கில்களினாலும் கம்பிகளாலும் நாம் ஏற்றும் படலப் பட்டத்தைப்போல பல மடங்கு பெரியது. முழுவதும் அலங்கார LED மின்குமிழ் சரத்தாலும் பலவர்ணநிற சலோபன் தாள்களினாலும் அலங்கரித்திருந்தது. விழாக்காலத்தில் அப்பெருவேல் எப்படி அழகாக இருந்திருக்கும் என நினைக்க எமக்கு அப்பெருவேலின் அழகைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் மனதில் தோன்றியது. உண்மையில் அவர்களின் கைவண்ணத்துக்கும் கலைத் திறனுக்கும் ரசனைக்கும் ஓர் சிறந்த சான்றாக அது அமைந்திருந்தது. இப்பொழுதும் அது என் கைபேசியின் கமராவில் உள்ளது. இதுபோன்ற ஒரு வேலை இங்கு எங்குமே நான் கண்டதில்லை. நாங்கள் செய்ததுமில்லை. எம்மைத் தவிர வேறு எவருமோ அங்கில்லை. கோயில் எமது செல்வச்சந்நிதியின் சரஸ்வதி ஆலயத்திலும் சற்றுப் பெரிது. இங்கும் திருப்பணி வேலைகள் நடைபெற்றவண்ணம் உள்ளதைக் காணமுடிந்தது. சுவாமிகள் மாஸ்டர் ஓர் பஜனை செய்வோம் என்றார்கள். அனைவரும் அமர்ந்தோம். ஓங்காரத்துடன் பஜனை ஆரம்பமாகியது. நல்லூரான் சந்நிதியான் பாடல்களுடன் சுவாமிகளின் தனித்துவமான இயல் இசையில் உசித வஞ்சிக் கயர்வாகி.... என்ற கம்பீரத் திருப்புகழ் உட்பட அனைவரையும் பக்திப் பரவசத்தில் ஆழ்த்திய ஓர் பஜனை நிகழ்வாகத் தம்மை மறந்து அடியார்கள் எல்லோரும் பாடிக்கொண்டிருந்தார்கள். பக்கவாத்தியமில்லை. ஓர் சுருதிப்பெட்டிகூட இல்லை. குறிஞ்சி மலைத்தென்றல் தாலாட்ட தாந்தாமலை முருகன் அருளூட்ட எல்லோரும் ஆனந்தமயமான கூட்டுப்பிரார்த்தனை இசை வெள்ளத்தில் மூழ்கினோம்.

திருவருள் ததும்புகின்ற ஓர் ஆலயச் சூழல் வாய்ப்புள்ளவர்களுக்கு மட்டும் வாய்க்கும் ஓர் தெய்வீகத் திருவருள் ஊற்று இங்குள்ளதை உணரமுடிந்தது. ஏனெனில் எம் குழுவில் பலமுறை கதிர்காமத்தை தரிசித்தவர்கள்கூட இம்முறை மட்டும்தான் தமக்கு இவ்வரிய வாய்ப்புக் கிடைத்ததாகக் கூறினர். ஆம் அருளும் அருளாளர்களுக்கே என்ற ஆன்மீகச் சிந்தனை இங்கே உற்றுநோக்கத்தக்கது. சரியாக 4.05க்கு தொடங்கிய பஜனையை 4.25க்கு முடித்து மலை அடிவாரத்திலுள்ள அம்பாளையும் கண்ணனையும் தரிசித்து 4.45க்கு கொக்கட்டிச்சோலையை நோக்கி எமது பயணம் தொடர்ந்தது.

**பணம் பேசத் தொடங்கினால் உண்மை ஊமையாகிவிடும்.**

எங்கும் ஒரே வயல்வெளி. பல இடங்களில் அறுவடை முடிந்ததால் எமது வல்லைவெளி போலக் காட்சி இருந்தது. சற்றுநேரம் செல்ல குடிமனைகள் தோன்றின. தான்தோன்றீஸ்வரரின் பெரிய கோபுர முகப்பு எம்மை வரவேற்றது. ஆலயத்தின் அருகில் வாகனத்தை நிறுத்திவிட்டு ஆலய தரிசனத்திற்குச் சென்றோம். இங்கும் வில்லு மண்டபங்களற்ற எமது ஆதி திராவிட அமைப்பில் பண்டிகைகளும் கொட்டகைகளும் காணப்பட்டன. திருப்பணி வேலைகள் தொடர்ந்தவண்ணமிருந்தன. ஆலயச் சுவரில் வண்ணக்கர்களின் மரபு பொறிக்கப்பட்டிருந்தது. இங்குள்ளது போல் பரிபாலனசபை இருப்பது தெரியவில்லை. ஆனால் இவ்வாலயங்கள் வண்ணக்கர் என்று சொல்லப்படும் பரம்பரை சைவ ஆசார பூசகர்களுக்குரியவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.




அதுமட்டுமல்ல பெரிய நெல்வயல் சொந்தக்காரர்களை போடியார் எனவும் அழைப்பர். இப்போடிமார்களில் சிலரும் தமக்குரிய பரம்பரை ஆலயங்களாகச் சில ஆலயங்களை வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் என்று அந்த நாட்களில் இவ்வாலயம் கொக்கட்டி மரங்களின் சோலைகளின் நடுவே இருந்ததால் அழைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இன்று சாதாரண ஒரு கிராமச் சூழலில் உள்ள ஓர் சிவாலயமாக இது மிளிர்கின்றது. இங்கு பூசை நேரம் ஆக இல்லாததால் நாங்களே கற்பூரத் தீபமேற்றி சிவவழிபாட்டை முடித்துக்கொண்டு பிற்பகல் 5மணியளவில் உகந்தை மலையானை நோக்கி.....

(தொடரும்...

**மற்றொருவன் உன்னைப் புகழட்டும், உன்னை உன் வாயாலே புகழாதே.**

நாவலர் பக்கம்:

(தொடர்ச்சி...)

# சைவ சமய வினா விடை

– ஆறுமுகநாவலர் –

## சௌசம்

**236. மலசல மோசனஞ் செய்யின் எப்படிச் சௌசஞ் செய்தல் வேண்டும்?**

எழுந்து புண்ணிய தீர்த்தமல்லாத சலக்கரையை அடைந்து, சலத்துக்கு ஒரு சாணுக்கு இப்பால் இருந்துகொண்டு, மூன்று விரலால் அள்ளிய மண்ணுஞ் சலமுங் கொண்டு இடக்கையினாலே குறியை ஒரு தரமும், குதத்தை ஐந்து தரத்துக்குமேலும், இடக்கையை இடையிடையே ஒவ்வொரு தரமும், பின்னும் இடக்கையைப் பத்துத் தரமும், இரண்டு கையையும் சேர்த்து ஏழு தரமும் சுத்தி செய்து, சகனத்தைத் துடைத்து, கால்களை முழங்கால் வரையும் கைகளை முழங்கை வரையும் ஒவ்வொரு தரமும் கழுவிச் சுத்திசெய்து, சௌசஞ் செய்த இடத்தைச் சலத்தினால் அலம்பிவிட்டு, அவ்விடத்தினின்று நீங்கி வேறொரு துறையில்போய், வாயையும் கண்களையும் நாசியையும் காதுகளையும் கைகால்களிலுள்ள நகங்களையும் சுத்தி செய்து, எட்டுத்தரம் சலம் வாயிற்கொண்டு, இடப்புறத்திலே கொப்புளித்து தலைக்கட்டு இல்லாமற் பூணூலை முன்போலத் தரித்துக் குடுமியை முடித்து, மந்திரங்கள் உச்சரியாது ஒரு தரமும் மந்திரங்கள் உச்சரித்து ஒரு தரமுமாக இரண்டு தரம் ஆசமனம் பண்ணல் வேண்டும். (ஆசமனம்- உறிஞ்சுதல்)

**237. சலமோசனம் செய்யின் எப்படி சௌசஞ் செய்தல் வேண்டும்?**

மண்ணும் சலமுங்கொண்டு, குறியை ஒரு தரமும், இடக்கையை ஐந்து தரமும், இரண்டு கையையும் சேர்த்து மூன்று தரமும், இரண்டு கால்களையும் ஒவ்வொரு தரமும் சுத்தி செய்து, நான்குதரம் கொப்புளித்து, ஆசமனம் பண்ணல் வேண்டும்.

**238. சௌசத்துக்குச் சமீபத்திலே சலம் இல்லையாயின் யாது செய்தல் வேண்டும்?**

பாத்திரத்திலே சலம் மொண்டு ஓரிடத்தில் வைத்துக்கொண்டு மலசல மோசித்துச் சௌசஞ் செய்துவிட்டுப், பாத்திரத்தைச் சுத்தி செய்து, சலம் மொண்டு வாய் கொப்புளித்து, கால் கழுவி, ஆசமனம் பண்ணல் வேண்டும். சல பாத்திரத்தைக் கையில் வைத்துக்கொண்டு சலமல விசர்க்கம் செய்யலாகாது (விசர்க்கம்- கழித்தல்)

**239. ஆசமனம் எப்படிச் செய்தல் வேண்டும்?**

கிழக்கையேனும் வடக்கையேனும் நோக்கிக், குக்குடாசனமாக இருந்து, இரண்டு முழங்கால்களுக்கும் இடையே கைகளை வைத்துக்கொண்டு, வலக்கையை விரித்துப் பெருவிரலடியிற் சார்ந்த உழுந்தமிழ் சலத்தை ஆசமித்தல் வேண்டும்.

**240. குக்குடாசனமாவது யாது?**

இரண்டு பாதங்களையும் கீழே வைத்துக் குந்திக் கொண்டிருத்தல்.

241.தடாக முதலியவற்றில் எப்படி ஆசமனஞ் செய்தல் வேண்டும்?

முழங்காலளவினதாகிய சலத்திலே நின்று, இடக்கையினாலே சலத்தைத் தொட்டுக்கொண்டு, வலக்கையினாலே ஆசமனம் பண்ணல் வேண்டும். முழங்காலளவின தாகிய சலத்திற் குறைந்தால் கரையை அலம்பி, அதிலிருந்து கொண்டு ஆசமனம் பண்ணல் வேண்டும்.

### தந்த தாவனம்

242. தந்த சுத்திக்குக் கருவியாவன யாவை?

விதிக்கப்பட்ட மரங்களின் கொம்பு, இலை, தூள்

243. இல்வாழ்வானுக்கு விதிக்கப்பட்ட மரங்கள் எவை?

மருது, இத்தி, மா, தேக்கு, நாவல், மகிழ், ஆத்தி, கடம்பு, விளா, நாயுருவி, அசோகு, குருக்கத்தி, பூல், வேல், சண்பகம் என்பவைகளாம்.

244. துறவிக்கு விதிக்கப்பட்ட மரங்கள் எவை?

பெருவாகை, நொச்சி, பெருங்குமிழ், புன்கு, கருங்காலி, ஆயில், மருது என்பவைகளாம்.

245. தந்த காட்டம் எப்படிப்பட்டதாய் இருத்தல் வேண்டும்?

நேரியதாய்த் தோலோடு பசப்புள்ளதாய்க் கணுவுந் துளையும் இடைமுறிதலும் இல்லாததாய், சிறுவிரற் பருமை உடையதாய் இருத்தல் வேண்டும். இல்வாழ்வானுக்குப் பன்னிரண்டங்குல நீளமும், துறவிக்கு எட்டங்குல நீளமும், பெண்களுக்கு நாலங்குல நீளமும் கொள்ளப்படும். (காஷ்டம்- குச்சி)

246. தந்த சுத்திக்குக் கருவி ஆகாதன எவை?

விதிக்கப்பட்ட தந்த காட்டத்தையேனும், இலையையேனுஞ் சலத்தினாலே கழுவி, மௌனம் பொருந்திக் கிழக்கு நோக்கியேனும் வடக்கு நோக்கியேனும் குக்குடாசனமாக இருந்துகொண்டு பல்லின் புறத்தையும், உள்ளையும் செவ்வையாகச் சுத்திசெய்து, ஒரு கழியை இரண்டாகப் பிளந்து, ஒவ்வொரு பிளப்பை மும்மூன்று தரம் உண்ணா அளவாக ஒட்டி, நாக்கை வழித்து, இடப்புறத்தில் எறிந்துவிட்டுச் சலம் வாயிற்கொண்டு பன்னிரண்டு தரம் இடப்புறத்திலே கொப்புளித்து முகத்தையும் கைகால்களையும் கழுவி, ஆசமனம் பண்ணல் வேண்டும். நின்றுகொண்டாயினும், நடந்துகொண்டாயினும், போர்த்துக்கொண் டாயினும் தந்த சுத்திபண்ணலாகாது.

(தொடரும்...

# திருக்கேதீஸ்வரம் - திருவாசகம்

ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகள் 26 ஆவது ஆண்டு
குருபூசையும் திருவாசக விழாவும்.



(2014 தை 12 ஆம் நாள் மாலை 5.00 மணி)
25-01-2014 சனிக்கிழமை
இடம் : இடம்பெற்றது.
ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் இந்து கலாசார மண்டபம், திருக்கேதீஸ்வரம்
தலைமை, "திருப்பணித்தவமணி" சி. தியாகராசா (S.T.R.) அவர்கள்

நூல் வெளியீடு
வெளியீட்டுரை: கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் M.A.PH.D

# நீங்கா நினைவில்...



நெல்லியடி தமிழ்ப்பூங்கா அச்சுக்கூட உரிமையாளர் க. சிவகுரு அவர்கள் மறைந்த செய்தியறிந்து பெருந் துயருற்றோம். நீண்டகாலமாகவே ஆச்சிரமத்தோடு தொடர்பு பட்டிருந்த க. சிவகுரு அவர்கள் தமது அன்பான பேச்சினாலும், தொழிற் பற்றுறுதியினாலும் அனைவரையும் கவர்ந்த ஒரு சிறந்த மனிதர்.

சைவ கலை பண்பாட்டுப் பேரவை சார்பாக தை 1998இல் ஞானச்சுடர் மாதாந்த சமய சஞ்சிகையின் முதற்பிரதி வெளியானது முதல் தொடர்ந்து ஏழு மாதங்கள் தமிழ்ப்பூங்கா அச்சகத்திலேயே அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டமையை நாம் நன்றியுடன் நினைவிற் கொள்ளுகிறோம். அந்தநாள் முதல் இன்றுவரை அச்சுப் பதிவு வேலைகளில் எம்மோடு பூரணமாக ஒத்துழைப்பு நல்கி வந்த தமிழ்ப்பூங்கா அச்சக உரிமையாளர் க. சிவகுரு அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல முருகப்பெருமான் திருக்கருணையை வேண்டி நிற்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சந்நிதியான் ஆச்சிரமம்,
சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்.

# 2013ஆம் ஆண்டு வாசகர் போட்டிக்கான விடைகள்

| | மாதம் | பக்கம் |
|---|---|---|
| 1. இராஜராஜபுரம் | பங்குனி | 22 |
| 2. தில்லைவாழ் அந்தணர்கள் | பங்குனி | 16 |
| 3. பிசிராந்தையார் | தை | 25 |
| 4. தஞ்சைப் பெரியகோயில், கங்கைகொண்ட சோழபுரம், கும்பகோணம் தாராசுரம் | வைகாசி | 56 |
| 5. ஆன்மீகம் | தை | 19 |
| 6. உடனே அவற்றைச் செயற்படுத்தாமல் தள்ளிப் போட வேண்டும் | ஐப்பசி சு.த.தகவல் | |
| 7. சுந்தரமூர்த்தி நாயனார் | புரட்டாதி | 67 |
| 8. சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் | ஆவணி | 33 |
| 9. சதாசிவ வடிவம் | தை | 36 |
| 10. வியாவில் ஐயனார் தேவஸ்தானம் காரைநகர் | ஆனி | 09 |
| 11. நக்கீரர் | ஆவணி | 47 |
| 12. நாம் செய்யும் பாவச் செயல்களே | ஆடி | 31 |
| 13. பழனிஸ்வாமி | ஆனி | 25 |
| 14. அன்பு | மாசி | 29 |
| 15. பன்றித்தலைச்சி அம்மன் கோவில் | பங்குனி | 47 |
| 16. சாத்தமங்கை திருநீலநக்கர் | மாசி | 21 |
| 17. கோலியாட் எனும் கிராமத்தில் | ஆடி | 52 |
| 18. நம்பிக்கைத் துரோகம் செய்பவனை | சித்திரை | 29 |
| 19. நல்லோர் கூட்டத்தில் சேரவேண்டும் | வைகாசி | 27 |
| 20. சுப்பிரமணிய பாரதியார் | சித்திரை | 03 |
| 21. இருபத்து நான்கு | ஆனி | 35 |
| 22. கூடுவிட்டுக் கூடு பாய்தல் | ஆவணி | 29 |
| 23. ஸ்ரீகண்ட பரமசிவன் | சித்திரை | 50 |
| 24. மகிழ்ச்சி | வைகாசி சு.த.தகவல் | |
| 25. நடராஜர் திருவுருவம் அமைய வேண்டிய முறையை | வைகாசி | 39 |

உழைக்கும் கரங்களே உலகை உருவாக்கும் கரங்கள்.




**1ஆம் பரிசு** — **திருமதி சகுந்தலாதேவி சத்தியபாலன்**
பலாலிவீதி,
உரும்பராய்.

**2ஆம் பரிசு** — **திருமதி சி. மதுரைமீனாம்பாள்**
குச்சம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

**3ஆம் பரிசு** — **பாலச்சந்திரா பிரவீன்**
முத்தட்டு மடவீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

## ஆறுதல் பரிசு பெறுவோர் விபரம்

**1. திருமதி ஸ்ரீதரன் சத்தியபாமா**
260/4, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**2. திருமதி ஏ. ஜெயராணி**
இல.2, புறூடி ஒழுங்கை,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

**3. த. வஜிதா**
6/2, அம்பகர் வீதி,
கொக்குவில் கிழக்கு,
பிரம்படி,
கொக்குவில்.

**4. A. சாயிகேஸ்**
சிவன்வீதி,
ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.

**5. சிவகுமாரன் ஜனனி**
பெரியதெய்வம் கோவிலடி,
புலோலி தெற்கு,
புலோலி.

**6. செல்வச்சந்திரன் நிவாஷினி**
இல.108, கன்னாதிட்டிவீதி,
யாழ்ப்பாணம்.

**7. நந்தகுமார் வத்சன்**
இல.07, பயனியர்வீதி,
மட்டக்களப்பு.

**8. செல்வி த. யாழினி**
சாரையடி,
புலோலி தெற்கு,
புலோலி.

**9. K. அஜந்தினி**
சம்பூர் - 5,
மூதூர்.

**10. திருமதி அ. மோகனேஸ்வரன்**
414/7, கோவில்வீதி,
நல்லூர்.

**வாசகர் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் மாசிமாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது (28.02.2014) அன்று வழங்கப்படும்.**

தமிழகத் திருக்கோயில் வரிசை:

# கொடுங்குன்றம் -பிரான் மலை-

– வல்வையூர் அப்பாண்ணா –

பாடல் பெற்ற பாண்டிநாட்டுத் தலங்கள் பதினாறு. அத்தனை பெயர்களும் ஒன்றுசேர நான்கு வரிப் பாடலாக கொடுங்குன்றம் கோவிலின் முகப்பு மண்டபத்தில் எழுதப்பட்டுள்ளது.

கூடல் புனவாயில் குற்றாலம் ஆப்பனூர்
ஏடகம் நெல்வேலி இராமேசம் ஆடானை
தென்பரங்குன் றம்சுழியன் தென்திருப்புத்தூர்
காளை வன் கொடுங்குன் றம்பூவனம்

01) கூடல்- ஆலவாய், மதுரை
02) புனவாயில்- திருப்புனவாயில்
03) குற்றாலம்- திருக்குற்றாலம்
04) ஆப்பனூர்- திருஆப்புடையார் கோவில்
05) ஏடகம்- திருஏடகம்
06) நெல்வேலி- திருநெல்வேலி
07) இராமேசம்- இராமேஸ்வரம்
08) ஆடானை- திருஆடானை
09) பரங்குன்றம்- திருப்பரங்குன்றம்
10) சுழியன்- திருச்சுழியல்
11) திருப்புத்தூர்
12) காளை- திருக்கானப்பேர் (காளையர்கோவில்)
13) கொடுங்குன்றம்
14) பூவனம்- திருப்பூவனம்




வேலை செய்வதில் அவசரமும் கூடாது, இடைவெளியில் இளைப்பாறவும் கூடாது.

இந்தப் பதினான்கு கோவில்களில் ஒன்றான "கொடுங்குன்றம்" நோக்கிய எமது பயணத்தின்போது கிடைத்த மகிழ்ச்சி, ஏமாற்றம், மறக்கமுடியாத அனுபவம் அத்தனையையும் உங்களோடு பகிர்ந்துகொள்ள வருகிறேன்.

(1) மதுரை அண்ணா பேருந்து நிலையத்திலிருந்து "பொன்னமராவதி" செல்லும் பேருந்துகள் "பிரான் மலை" வழியாகச் செல்கின்றன. (2) மதுரையிலிருந்து "சிங்கம்புணரி" சென்றால் அங்கிருந்து "பிரான் மலை"க்குப் பேருந்துகள் செல்கின்றன. இது மதுரையிலிருந்து "கொடுங்குன்றம்" போகும் பாதை. நாம் மதுரையிலிருந்து, திருச்சி நெடுஞ்சாலையில் "மேலூர்" வரை வந்து வலது புறம் திரும்பி, "சிங்கம்புணரி" சந்தியில் இடதுபுறம் திரும்பி, ஒரு "ப" வடிவில் நீண்ட தூரம் பயணித்து ஒருவாறு "கொடுங்குன்றம்" வந்து சேர்ந்தோம். "கொடுங்குன்றம்" ஒரு பிரபல முருகன் ஆலயம் என முற்றுமுழுதாக நம்பி வந்த எமக்கு சற்று ஏமாற்றமாக இருந்தது உண்மையே. "கொடுங்குன்றம் முருகனைத் தரிசித்து வாருங்கள்" என்ற வாரியாரின் கூற்றுப் பொய்யாகுமா?

திருச்சியிலிருந்து "கொடுங்குன்றம்" நோக்கி பயணிக்கும் மிக இலகுவான பாதை இது. திருச்சி - மதுரை நெடுஞ்சாலையில் சரியாக 87கி.மீ தூரத்தில் இடதுபுறமாக "பள்ளப்பட்டி" எனும் கிராமத்து வீதி பிரிகிறது. இருபுறமும் தென்னஞ்சோலையும்- தும்புத் தொழிலகங்களும்- பசுமையான சூழலும் கொண்ட வீதியில் சரியாக 7கி.மீ தூரத்தில் "பிரான் மலை" கிராமமும் கிராமத்தின் நடுவே "கொடுங்குன்றம்" கோவிலும் வந்துவிடும். இத்தனை இலகுவான பிரயாணம் இருக்க, இது புரியாமல் நாம் தலையைச் சுற்றி மூக்கைத் தொட்டோமே!

பிரான் மலை கிராமத்தின் மத்தியில் உள்ள மலைச்சரிவில் கோயில் உள்ளது. பத்துக்கும் அதிகமான தூண்கள் கொண்ட மண்டபத்தின் ஒரு பக்கத்தில் காணப்படும் நீண்டதொரு விளம்பரப்பலகை நமக்குப் பல தகவல்களைத் தருகிறது. கொடுங்குன்றம் கோவில், மேற்கோவில்- நடுக்கோவில்- கீழ்க்கோவில் என மூன்று பகுதிகளாக உள்ளது. மேற்கோவில்- கைலாசம்- உமாமகேஸ்வரர் தேனாம்பிகை அம்பிகையுடன் அருள்பாலிக்கும் இடம். நடுக்கோவில்- அந்தரம்- நிர்வாண பைரவர் சந்நிதானம் அமைந்துள்ள பகுதி. கீழ்க்கோவில்- பாதாளம் (பூமி)- அமிர்தேஸ்வரி சமேத கடோரகிரீஸ்வரர் அமர்ந்திருக்கும் இடம். இவரே "கொடுங்குன்றநாதர்". சம்பந்தரால் பாடப்பெற்ற கோயில் கீழ்க்கோயிலே.

மண்டபம் தாண்டி தெற்கு நோக்கிய படிக்கட்டுக்களினூடாக நடக்கும்போது நமது கைப்புறமாக மலைப் பாறைக்கு நடுவே ஒரு குளம் காணப்படுகிறது. ஒரு காலத்தில் சீரான படிக்கட்டுகளுடன் இருந்து, பிற்பகுதியில் சிதைவுற்றுச் சேதமடைந்து காணப்படுகிறது இத் திருக்குளம். நூற்றுக்கும் அதிகமான படிகளேறி, குரங்குகளின் அட்டகாசத்திற்கு ஈடுகொடுத்து கோயிலைச் சென்றடைய வேண்டும். சற்று முன்னதாக வீற்றிருக்கும் வலம்புரி விநாயகரைத் தரிசித்து இடப்பால் திரும்பி, மேலும் சில படிகள் மேலேறி ஏகாந்த விநாயகரை வணங்கிப் பின் தெற்கு நோக்கிய நுழைவு வாசலினூடாக கோயில் உள்ளே நுழைகிறோம். தலைக்கு மேலே விதானத்தில் காணப்படும் இரண்டு பெரிய குளவிக்கூடுகள் நம்மைப் பயமுறுத்துகின்றன. தேனுண்டு மயங்கிய நிலையில் (பூச் சொரிந்து விட்ட மாதிரி) நிலமெல்லாம் விழுந்து கிடக்கின்ற ராசகுளவிகளின்மீது கால்படாமல் ஒருவிதமாக

நடந்து முன்னேறினால் நேராக நடராஜர் மண்டபம். அடுத்து பெரிய உருவில் மகாலெட்சுமியும், இருபுறமும் தூக்கிய துதிக்கைகளுடன் இரு யானைகளும் சுதைச் சிற்பமாகக் காட்சி தருகின்றனர். மண்டபம் முழுவதுமுள்ள சதுர வடிவத் தூண்களில் சிற்பங்கள் காணப்படுகின்றன. மண்டபச் சுவர்களில் திருமுறைப் பாடல்களும், திருமந்திரத்திலிருந்து தெரிவு செய்த சில பாடல்களும் எழுதப்பட்டுள்ளன.

கருவறையில் லிங்க வடிவில் அமர்ந்திருக்கும் இறைவனை "உடையவர்" என்கிறார்கள். உடையவருக்குச் சரி பின்புறமுள்ள மலையைக் குடைந்தெடுத்து பெரிய புடைச் சிற்பமாக உமாமகேஸ்வரரும் (மங்கை பாகர்) தேனாம்பாள் (தேனாம்பிகை) அம்பிகையும் நித்திய திருமணக்கோலத்தில் நிறைந்த அலங்காரங்களுடன் காணப்படுகின்றனர். அந்த மண்டபத்தில் கூடியிருந்த நான்கைந்து பேர் மறைந்த தம் உறவுகளுக்கான திதி அனுட்டானங்கள் செய்து கொண்டிருந்ததைப் பார்க்க முடிந்தது. அந்தக் கருவறையைச் சுற்றி கோஷ்ட மூர்த்தங்களோ வேறு சந்நிதிகளோ இல்லை. ஆனால், வடமேற்கு மூலையில், கொடுங்குன்றம் கோவிலின் ஸ்தல விருட்சங்கள் இரண்டில் ஒன்றான "பெயரில்லா மரம்" பாறை இடுக்குகளில் பெரிய விருட்சமாக வளர்ந்து நிற்கிறது. இதுவரையும் எவரும் பெயர் தெரிந்து சொல்லாமையினால் இந்த மரம் "பெயரில்லா மரம்" என்றே இன்றுவரை அழைக்கப்பட்டு வருகிறது. இது "மேற்கோவில்". கொடுங்குன்றத்தின் "கைலாசம்".

பெருமானைத் தரிசித்தபின் குளவிக் கூடுகள் இருக்கும் தென்புற வாசல் வழியாக வந்து சிலபடிகள் கீழிறங்கி வர வலப்பக்கமாக பைரவர் சந்நிதி தெரிகிறது. அதற்கு முன்னதாக, நடைபாதையின் ஓரமாக, ஒரு சிறிய மண்டபமும்- மண்டபத்தின்மேல் கல்லால மரநிழலின் கீழமர்ந்து நான்கு முனிவர்களுக்கும் உபதேசம் செய்யும் தென்முகக் கடவுளின் சுதைச் சிற்பமும் "முல்லைக்குத் தேரீந்த பாரி வள்ளல்" கதையினைச் சித்தரிக்கும் சுதைச் சிற்பமும் அடுத்தடுத்து காணப்படுகின்றன. மலை மடிப்பின் கரிய நிறத்தில், வெள்ளை வெளேரெனக் காணப்படும் பளிங்குச் சிற்பங்கள் இரண்டும் நம்மை நிறுத்தி நிமிர்ந்து பார்க்க வைக்கிறது. சுற்றிவர பாறை உடைவுகளும், பாறை இடுக்குகளில் நிறைய மரங்களும் கொண்ட சூழலில், ஒரு கருவறையும் ஒரு முன் மண்டபமும் மட்டுமே அங்குள்ளது. இரு புறமும் பெரிய துவாரபாலகர்கள் கொண்ட கருவறையில் பெரிய உருவ அமைப்போடு "நிர்வாண பைரவர்" மூலவராக வீற்றிருக்கிறார். ஒரு பக்கத்தில் பைரவரின் உற்சவ மூர்த்தம் வைக்கப்பட்டுள்ளது. மண்டபத்திற்கு வெளியே புறம்பாக கிழக்குப் பார்த்தபடியான விசுவநாதர்- விசாலாட்சி சந்நிதியும், மேற்குப் பார்த்தபடி சூரியன் சந்நிதியும் தனித்தனியே உள்ளன. இதுவே நடுக்கோவில். கொடுங்குன்றத்தின் "அந்தரம்"

பைரவர் சந்நிதியிலிருந்து (நாம் சென்ற படிக்கட்டு வழியாக இல்லாமல்) பக்கவாட்டுப் படிகளில் மலைச்சரிவில் கீழிறங்கி கீழ்க்கோவிலை அடைகிறோம். இதுவே கீழ்க்கோவில் "பாதாளம்". பூமி. கருங்கற் தூண்களில் நிறைந்த சிற்பங்களுடன் கூடிய நேர்த்தியான மண்டபம். மிக்க பழமை வாய்ந்த கோவிலாக இருந்தபோதும் கூட்டிப் பெருக்கிச் சுத்தமாக வைத்துள்ளார்கள். கொடுங்குன்றநாதர் அமர்ந்துள்ள இந்தப் பெரிய கோவிலில் குருக்களோ- பக்தர்களோ யாருமின்றி போதுமான வெளிச்சமுமின்றி வெறிச்சோடி இருக்கிறது சந்நிதானம். விபரங்களை அறிந்துகொள்ள யாராவது வரமாட்டார்களா என நாம் பல பக்கமும்

**பணம், பெண், காற்று இம்மூன்றும் மாறிக்கொண்டே இருப்பவை.**

பார்வையைச் செலுத்தியபோது, உள் மண்டபத்திலே ஒரு சிறுவன் தன்னந்தனியாக விளையாடிக் கொண்டிருப்பது தெரிகிறது. கீழே ஒரு அரை டிராயருடன், மேலே நொய்துபோன ஒரு பழைய சட்டை. கோயிலின் உட்பிரகாரத்தில் நடமாட நமக்கே ஒருவித அச்ச உணர்வு இருந்த நிலையில் இந்தச் சிறுவன் இங்கே என்ன செய்கிறான்? அச்சிறுவனை நம்மருகே அழைத்துப் பேச்சுக் கொடுக்கிறோம். (கட்டுரைக்கு இடையிடையே அந்தப் பையனுடன் நடந்த உரையாடல் அப்படியே தரப்பட்டுள்ளது.)

''படிக்கிறாயா?''

ஆம்! ஐந்தாம் வகுப்பு. (எனவே அவனுக்கு வயது பத்து என்பது புரிகிறது) ''ஏன் பாடசாலைக்குச் செல்லவில்லை?''

இந்தக் கேள்விக்குச் சரியாகப் பதில் வரவில்லை.

''இங்கே என்ன செய்கிறாய்?

''நான்தான் கோவிற் காவலாளி''

நெற்றிப்பொட்டில் யாரோ ஓங்கி அடித்தமாதிரி, இவன் பதில் எனக்கு அதிர்ச்சியையும் - ஆச்சரியத்தையும் கொடுத்தது. அதனை வெளிக்காட்டாமல், நாம் தேடி வந்தவர் இங்குள்ளாரா என்பதை உறுதிப்படுத்த எண்ணிய நான் கேட்டேன்.

''முருகன் சந்நிதானம் எங்கே இருக்கிறது?

''ஏன் இந்த அவசரம்? வாங்க! முதல்லை கோயிலைச் சுற்றிப் பார்ப்பம்.''

எனது கைப்பையிலிருந்து ரோச் லைற்றை எடுத்து ஒளிரவிட்டபோது, பையன் கையை நீட்டி அதனை வாங்கிக் கொண்டான்.

"கடோரகிரீஸ்வரர்" எனச் சிறப்புப் பெயர் கொண்ட கொடுங்குன்றநாதர் வீற்றிருக்கும் திருச்சந்நிதி வாசலைப் பையன் திறந்துவிட்டு கருவறையின் உள்ளே ரோச்லைற் ஒளியைப் பாய்ச்சுகிறான். கொடுங்குன்றநாதர் அளவான அலங்காரத்துடன் லிங்க வடிவில் அருள்பாலிக்கிறார். மனதை ஒருநிலைப்படுத்தி எம்பெருமானைக் கரம்கூப்பி வணங்குகிறோம். சிற்ப வேலைகள் கொண்ட முன் மண்டபம். மண்டப மையத்தில் நந்தி, பலிபீடம், தம்பம் ஆகியன காணப்படுகிறது. மூலவருக்கு இடதுபுறமாக தெற்கு நோக்கிய அம்பிகை அமிர்தேஸ்வரியின் சந்நிதி. அழகும் பொலிவும் நிறைந்த அம்பாள் நின்ற திருக்கோலத்தில் அருள் பாலிக்கிறார்.

உள்வீதி தென் பிரகாரத்தில் அறுபத்துமூன்று நாயன்மாரும், தென்மேற்கு மூலையில் முக்குறுணி விநாயகரும் வீற்றிருக்கின்றனர். மேற்குச் சுற்றில் அம்மையப்பன், விசாலாட்டி-விஸ்வநாதர், மீனாட்சி- சொக்கநாதர் சந்நிதிகள் உள்ளன. விஸ்வநாதர், சொக்கநாதர் சந்நிதானங்களுக்கு வெளியே தனித்தனியாக நந்திகள் காணப்படுகின்றன. தீர்த்தக் கிணற்றருகே கொடுங்குன்றத்தின் இரண்டாவது ஸ்தல விருட்சமான "உறங்காப்புளி" விருட்சம் உள்ளது. புளியமரத்து இலைகளைவிட சற்றுப் பெரியதான இலைகளுடன், புளியமரத்தின் சாயல் அப்படியே உள்ளது. ஒவ்வொரு சந்நிதானத்தையும் திறந்துவிட்டு, விக்கிரகங்களின் மேல் ரோச்லைற் ஒளியினைப் பாய்ச்சி எமக்குக் காண்பித்து, மீண்டும் சந்நிதானங்களைச் சாத்தியபடியே வரும் அச்சிறுவன், "இது பிள்ளையார்", "இது விஸ்வநாதர்", "இது சொக்க நாதர்'' எனக் கூறிவரும் அவனது வாய் மொழிகண்டு எனக்கு உள்ளூர சிரிப்பு வந்தாலும், அதனை வெளிக்காட்டாமல் அவன் பாதையிலேயே தொடருகிறோம். நீங்களும் சேர்ந்து

சிரிக்கவேண்டிய இரண்டு பதில்களை ஒரு உதாரணத்திற்காகத் தந்திருக்கிறேன்.

"இந்தத் தூண் இரண்டிலும் உள்ள சிலைகள் யாருடையவை தெரியுமா?"

"அவையள் சாமி கும்பிடுகினம்" (பொருத்தமற்ற பதில்)

"கோயில் எப்போது கட்டப்பட்டது தெரியுமா?"

"நான் பிறக்கிறதுக்கு கொஞ்சநாள் முந்தித்தான் கட்டினது."

(பையனுக்கு வயது 10 மட்டுமே)

சம்பந்தர், அருணகிரிநாதர் காலத்திற்கு முற்பட்டது இக்கோவில். அவனது பேச்சு, முகபாவம், சுறுசுறுப்பு, சுட்டித்தனம் ஆகியவை நம் மனதை ஆழமாகத் தொட, ஒரு பண நோட்டினை எடுத்து அந்தப் பையன் கையில் திணிக்கிறேன். வாங்கிக் கொண்டான்.

உட்பிரகாரத்தின் வட சுவரில் ஒரு கல்யன்னலூடாகப் பார்த்தபடி "யானை... பாருங்க..." எனப் பையன் அழைக்க, நாமும் அவசரமாகக் கல்யன்னல் ஊடாகப் பார்க்க உள்ளே... ஒரு மேடையில் பருத்த யானையொன்று படுத்திருக்கும் பெரிய சிற்பம் தெரிகிறது. திரும்பிப் பார்க்கிறேன். பையன் சிரிக்கிறான். கோஷ்ட மூர்த்தங்களான தெட்சணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கையை வணங்கிய பின், மீண்டும் நான் பொறுமையிழந்து,

"முருகன் சந்நிதானத்தைக் காணவில்லையே?"

"பொறுங்க சார்... ஒரே அவசரம் உங்களுக்கு"

மீண்டும் சிரிக்கிறான் பையன். "கொடுங்குன்றம் போங்கள்" என்ற வாரியார் சுவாமிகள் கூற்று பொய்யாகிவிடுமா? வடகிழக்கு மூலையை அண்மிக்கிறோம். நவக்கிரகங்கள் அமர்ந்த நிலையில் உள்ள நவக்கிரக மண்டபத்திற்கு சற்று முன்பாக, நான் முகத்தை சற்றுக் கடுமையாக வைத்துக்கொண்டு,

"முருகன் சந்நிதானம் எங்கே? பையன் சிரித்தபடியே, "கொஞ்சம் பின்புறம் திரும்பிப் பாருங்க... நீங்க தேடி வந்தவர் உள்ளேதான் இருக்கிறார்", சுவரின் நடுவே இருந்த சிறிய இடைவெளியைக் காண்பிக்கிறான். தெற்குப் பார்த்த வாசல் அது. வாசலின் இரு மருங்கும் உள்ள சுவர்களில், ஏதோ ஒரு காலத்தில் எழுதப்பட்டு, இப்போ அழிந்தும்- அழியாமலும் தெளிவின்றிக் காணப்படும் இரு திருப்புகழ் பாக்கள்மீது பையன் ரோச் ஒளியினைப் பாய்ச்ச, ஓரளவு வாசிக்க முடிந்தது. (திருப்புகழ் அடிகள் பின்னர் வரும்.)

வாரியார் சுவாமிகள் தமது இளமைக் காலத்தில் (18-19) வயதில் (1925இல்) பாடியதுதான் "**அருணகிரிநாத சுவாமிகள் புராணம்**" பாயிரம்- 58, அவதாரப் படலம்- 138, பரத்தையர் வலைப்படுபடலம்- 85, அநுக்கிரகப் படலம்- 119, கர்னதானப் படலம்- 121, கம்பத்திளையனார் காட்சிப்படலம்- 118, சுக சொருபப்படலம்- 63 என மொத்தம்- 702 பாடல்களுடன் 496 பக்கங்கள் கொண்டது இப்புராணம். ஒவ்வொரு பாடலுக்கும் கீழே, அதேபாடல் பதப்பிரிவு செய்து மீண்டும் தரப்பட்டிருப்பது புராணத்தின் தனிச்சிறப்பான அம்சம்.

அருணை முனிவர் பட்டுத் தெளிந்து முருகன் அருள்பெற்று திருப்புகழ் பாமாலை சூட்டத் தொடங்கியபின் ஸ்தல யாத்திரை போகிறார். மதுரையில் பழமுதிர்சோலை, திருப்பரங்குன்றம் முதலான படைவீடுகளைத் தரிசித்துத் திருப்புகழ் பாடியபின் கொங்குன்றம் (பிரான் மலை) சென்றடைந்தார். "அசுரர்களை அழித்து வானவர் சிறை மீட்க விரைந்து வேல் வாங்கிய கருணைக் கடலே! இங்கு இந்த அடியவனுக்கு ஓர் ஆசை. புதுமைமிகு நடனம் புரியவேண்டுமென வேண்டி நிற்கிறார் அருணகிரிநாதர்.

**தஞ்சம் என்று வந்தவரை வஞ்சித்தல் கூடாது.**

வாரியாரின் அருணை முனிவர் புராணத்தில் "கொடுங்குன்றம்- நர்த்தன தரிசனம்" எனும் தலைப்பில் பதப்பிரிவு செய்யப்பட்ட பாடல் இல 50, 51 கீழே தரப்பட்டுள்ளது.

முதுகழுகு பசியாற முடுகிய அசுரர் மாள
மதுஒழுகு கற்பகக்கா வானவர்தம் சிறைமீள
கதும்எனக்கை வேல்வாங்கும் கருணைமிகும் தடம்கடலே
புதுமைஉறு திருநடனம் புரிந்துஅருளும் என இரந்தார்.

மொழியும்அடி யவர்வேட்கை முன்னின்று முடித்தருளும்
விழி அருளார் அறுமுகனார் விளங்குதிரு நடம்அருள
பொழி அருவி விழிநோக்கி புகழ்ந்து ஏத்தி ஆங்குஇருந்து
பொழில்அணை இராமெசுரம் போற்றிஇசை சாற்றினாரே

அடியவர் ஆசையை நிறைவேற்றுவதுதானே அறுமுகனின் ஆசை. அவ்வாறே ஆடினார். கண்ட கண்கள் காவிரியாயின. நர்த்தன நாயகனைப் புகழ்ந்து இரண்டு திருப்புகழ் பாடி, அங்கிருந்து இராமேஸ்வரம் நோக்கித் தன் ஸ்தல யாத்திரையைத் தொடருகிறார். சுவரில் காணப்பட்ட கொடுங்குன்றத்து முருகன்மீது பாடப்பெற்ற இரண்டு திருப்புகழில் ஒன்று முழுமையாகத் தரப்பட்டுள்ளது. மற்றையது சில வரிகள் மட்டுமே தர முடிந்திருக்கிறது.

(1) அனங்க னம்பொன் றுஞ்சுந் தங்குங் கண்களாலே
அடர்ந்தெழும் பொன் குன்றங்கும்பங் கொங்கையாலே
முனிந்து மன்றங் கண்டுந் தண்டும் பெண்களாலே
முடங்கு மென்றன் தொண்டுங்கண்டின் றின்புறாதோ
தெனந்தெ னந்தெந் தெந்தெந் தெந்தெந் தெந்தனானா
செறிந்த டார்ந்துஞ் சென்றும் பண்பின் தும்பிபாடக்
குனிந்தி லங்குங் கொம்புங் கொந்துந் துன்றுசோலை
கொழுங் கொடுந்திண் குன்றந்தங்குந் தம்பிரானே.

(2) எதிர் பொருது கவிகடின கச்சுக்க ளும்பொருது
குத்தித்தி றந்துமலை
.....................................................
.................................
(என்று தொடங்கும் 47 வரிகள் கொண்ட திருப்புகழின் இடைவரிகள் இவை)
அழி பொழுதி னிலும் அருள்முருக சுத்தக் கொடுங்கிரியினிர்த்தச்
சரண்களை மறந்திடனே
...................................
...................................

(இடப் பெறுமதி கருதி இதனை முழுமையாகத் தரமுடியவில்லை)

"அந்த நடனக் கோலத்தை உயிர்போம் பொழுதும் மறவேன்'' என்கிறார் அருணகிரிநாதர்.

"உள்ளே வாங்க...'' பையனின் குரல். சிறியது என்றோ, பெரியது என்றோ சொல்ல முடியாத முருகன் சந்நிதானம். அதனைச் சுற்றிவரக் கூடியதான ஒரு சிறிய பிரகாரம்.

சந்நிதானத்தின் ஒரு சிறிய வாசற் கதவினைத் திறந்துவிட்ட பையன், ரோச் ஒளியினை இப்போது முருகன் முகத்திற்கு நேராகப் பாய்ச்சுகிறான். சொல்லி வைத்த மாதிரி கோவில் மின்சார லைற்றுக்கள் அத்தனையும் ஒளிர்ந்தன. பையன் திரும்பி எங்களைப் பார்த்து ஒரு விதமாகச் சிரிக்கிறான். மின்னொளியில் முருகன் முகத்தைப் பார்க்கிறேன். முருகனும் சிரித்துக்கொண்டேயிருக்கிறான். அதே சிரிப்பு... பையனின் முகத்தையும் முருகனின் முகத்தையும் மாறிமாறிப் பார்க்கிறேன். வள்ளி, தெய்வானை சமேதராக ஆறுமுகப் பெருமான் மயில்மீது அமர்ந்தபடியுள்ள திவ்விய தரிசனம் கண்டு மெய்மறந்து நிற்கிறேன்.

முருகா! அறுமுகனே! எதிர்பாராமல் இன்றைய நன்னாளில் (07.04.2013) உன் திருமுகங் காணக் கொடுத்துவைத்ததே! இந்தத் தரிசனத்திற்காக யான் எத்தனை ஆண்டுகள் காத்திருந்தேன் தெரியுமா! தலைசாய்த்துக் கரம் கூப்பி வணங்குகிறேன். "வாரியார் பொய்யுரைத்தாரா?" என மனதில் பலமுறையும் தோன்றிய என் அவசர புத்தியை நொந்தபடி, முருகன் சந்நிதியில் மானசீகமாக மன்னிப்புக் கேட்டுக்கொண்டு வெளியே வந்து நந்தி, தம்பம், பீடம் இருந்த இடம்நோக்கி நகருகிறோம். வழியில்,

"தம்பி! நான் தந்த பணத்தைத் திருப்பித் தருகிறாயா?" என நான் கேட்டதும், முகத்தில் ஒருவித ஏமாற்றம் தென்பட்டாலும் அதை வெளிக்காட்டாமல் பணத்தை என்னிடம் நீட்டினான். அவன் சற்றும் எதிர்பாராத வகையில், முன்னரைவிடப் பெறுமதி கூடிய ஒரு பண நோட்டினை அவனது மேற்சட்டைப் பையினுள் திணித்தபடியே அவன் முகத்தைப் பார்க்கிறேன். சிரித்தானே ஒரு சிரிப்பு... அற்புதமான சிரிப்பு... ஒரு சிறுவனின் சிரிப்பில் இத்தனை சவுந்தரியமா! அவனோடு பேசியபடியே கருவறை வாசலின் மைய மண்டபத்திற்கு வருகிறோம். திடீரென, தூரத்தே ஒரு மணியோசை கேட்கிறது.

"நேரமாச்சு... நானும் மணியடிக்கவேணும்..." என்று கூறியபடியே நமது பதில் எதையும் எதிர்பாராமல் ஒடுங்கிய வெளிவாசல் போகும் சந்து வழியாக ஓடி மறைந்தான் அச்சிறுவன். கோவிலைவிட்டு நாம் வெளியே வந்து எமது வாகனம் புறப்படும்வரை அந்தப் பையன் எங்காவது தென்படுகிறானா என எமது கண்கள் தேடிக்கொண்டேயிருந்தன.

யார் இந்தப் பையன்? ஏன் கோவிலினுள்ளே தன்னந்தனியாக நின்றான்? அவனா கோவிற் காவலாளி? ஒரு பாடசாலை நாளில் அவன் ஏன் இங்கு வந்தான்? "முருகன் சந்நிதானத்தைக் காணவில்லையே" என நான் வினாவிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பொறுமை காக்கச் சொல்லிச் சிரித்தானே! ஏன்? அதுவரை இருள் சூழ்ந்திருந்த கோவில் வளாகம், அச்சிறுவன் முருகன் முகத்திற்கு நேராக ரோச் ஒளியினைப் பாய்ச்சியதும் எப்படி மின்ஒளி படர்ந்தது? இரண்டாவது முறை நான் பண நோட்டை கொடுத்தபோது அவன் சிரித்த கள்ளச் சிரிப்பு யான் வாழ்நாள் முழுவதும் மறக்கக் கூடியதா? யார் இவன்?..... யார் இவன்?..... எனக்குப் புரியவேயில்லை.... உங்களுக்கு ஏதாவது புரிந்தால் எனக்கும் கொஞ்சம் சொல்லுங்களேன்....

"கைம்மா மதகரியின் னினமிடியின் குரலதிரக்
கொய்ம்மா மலர்ச்சோலைபுக மண்டுங் கொடுங்குன்றம்
அம்மானெனவுள்கித் தொழுவார்கட்கருள் செய்யும்
பெம்மானவனிமையோர் தொழமேவும் பெரு நகரே"

-சம்பந்தர்-

# மாசிமாத வாராந்த நிகழ்வுகள்

**07.02.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**சொற்பொழிவு :- "அபிராமி கடைக் கண்களே"**

**வழங்குபவர் :- J. சந்திரப்பிரகாஸ்** அவர்கள்

[ஆசிரியர், யாழ் மத்திய கல்லூரி]

---

**14.02.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**"இன்னிசை"**

**(பக்கவாத்திய சகிதம்)**

---

**21.02.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**சொற்பொழிவு :- "முருக பக்தியும் நக்கீரரும்"**

**வழங்குபவர் :- திரு நி. பகீதரன்** அவர்கள்

---

**28.02.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**


# ஞானச்சுடர் மாசிமாத வெளியீடு

**வெளியீட்டுரை :- திருமதி புனிதவதி சண்முகலிங்கம்** அவர்கள்

[இளை. ஆசிரியர்]

**மதிப்பீட்டுரை :- திருமதி நாச்சியார் செல்வநாயகம்** அவர்கள்

[முதுநிலை விரிவுரையாளர், யாழ்ப்பாணம்]



பதிவு இல. QD/16/NEWS/2014

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

